# ஈழத் தமிழரின் சமூக அரசியல் ஆள்கூறுகள்

வைத்தியகலாநிதி சி.யமுனானந்தா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் சமூக அரசியல் ஆள்கூறுகள்

Dr.C.S.யமுனாநந்தா

2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


1. தொன்மைத்தமிழும் அண்மைத்தமிழும் இன்மைத்தமிழும் 01

2. தமிழ் இலக்கியத்தில் இருந்து நாம் கற்கவேண்டிய அரசியல் 14

3. இறப்பிற்கு முன் பகைவராக இருந்து அழிந்தாலும் இறந்த பின்பாவது நட்பை உருவாக்குவோம் 16

4. இன நல்லிணக்கத்திற்குரிய அரசியலமைப்பு 20

5. மாசேதுங் இடம் இருந்து தமிழ் அரசியல் கட்சிகள் அறியவேண்டியவை 24

6. ஈழத்தமிழரின் போர் புறநாடூறுஉறு அளவும் போர்புற நானூறு உறு வீதமும் 34

7. முள்ளிவாய்க்கால் நினைவுநாள் 39

8. ஐ.நா நிபுணக்குழுவின் அறிக்கை 41

9. அராஜகதந்திரிகளின் இராஜதோல்வி 44

10. பாரதத்தின் புகையிரதப்பாதை நடவடிக்கை 46

11. யாழ் குடாநாட்டில் உள்ள மக்களது வாழ்வாதாரம், கல்வி மற்றும் சூழல் என்பவற்றினது பாதுகாப்பு 48

12. கல்வி மேன்மையடைய 52

13. போருக்கு பிந்தைய சூழலில் ஈழத்தமிழர்கள் 55

14. ஈழத்தமிழ் மக்களிற்கான மனிதநேயப்புரட்சி 74

15. இண நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தொடர்பாடல் இணைவுகள் 76

16. ஈழத்தமிழினத்தின் மீதான 2009ம் ஆண்டு நிகழ்ந்த “மனிதகுல நிந்தனைக்கு” உத்தேச தமிழ் நீதி ஆயத்தின் தீர்ப்பு 80




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

20ம் நூற்றாண்டில் யூத இனத்தின் வரலாறும் 21ம் நூற்றாண்டில் தமிழினத்தின் வரலாறும் ஒரே தன்மையது. எனவே தமிழ்மக்களின் சிறந்த கல்வி சார்ந்த சமூக முன்னேற்றமே இந்நூற்றாண் டில் எமது இருப்பினை தலை சிறக்க வைக்கம். மேலும் சிங்கள மக்களிற் கும் தமிழ் மக்களிற்குமிடையிலான இன வேற்றுமை, சீனப் பெருஞ்சுவரினை விட அகலமானதாகவும், இந்திய பாகிஸ்தான் எல்லைக்கோட்டில் உள்ள விரகியல் நிலையினை மோசமானதாகவும் 2009ம் ஆண்டில் வட பிரதெசத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் ஏற்படுத்தி உள்ளன. இவற்றினை வெளிப்படையாக கருத்துப்பகிர்வின் மூலமே குறைக்கலாம் என்பது திண்ணம்.

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மாறும் போது கவனிக்க வேண்டியவை.

1. தமிழ் மக்களின் உரிமைக்காக உயிரிழந்த மக்களின், போராளி களின் தியாகங்களை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.
2. தமிழ் மக்களை ஏமாற்றும் நாடகத்தினை நிகழ்த்தக்கூடாது.
3. சாமானிய தமிழ் மக்களிற்கே உலக அரசியல் சூழ்ச்சியும் ஒழுங்கும் விளங்கும் போது, பணத்தையும் போகத்தினையும் இலக்காகக் கொண்டு அரசியல் அபிலாசைகளை வென்றெ டுக்கும் இலக்கில் இருந்து பின் வாங்காதீர்கள்.
4. உலகில் எந்தவொரு இனமும் தனது இனம் அழியும் போது, அவ்வினத்தின் அரசியல் தலைவர்கள், மதகுருமார்கள், குரல் கொடுப்பர். எம்மினத்தில் அவ்வாறு நிகழவில்லை.
   மாறாக தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது சில தமிழ்தலைவர் கள் மக்கள் கொல்லப்படவில்லை என சிங்களத்திற்கு வக்காலத்து வாங்கினர்.

**Dr.S.யமுனாநந்தா,**
**12.10.2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனுவல் அணி

சோம்பலும் செயலிழந்த நிலையும்
கோழைகளுக்கே உரியது
அவை உனக்கு வேண்டாம்
பலவீனங்களை தூக்கியெறிந்து
வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆயத்தமாகு.
துக்கங்கள் ஏற்படுவது விதியென்று
கருதி அடிபணிகின்றவன் பாபம் செய்கின்றான்.
எதிர்ப்பைக்கண்டு அடிபணியாதே,
போராடக் கற்றுக்கொள்
ஓடி ஒளிந்து கொள்வது
பிரச்சினைகளுக்குத் தீர்வு ஆகாது.
எது வந்தாலும் முனைப்போடு எதிர்கொள்
உலகத்தை தலைகீழாக மாற்றக்கூடிய
சக்தி உனக்கு உண்டு.
அதை வெளிக்கொண்டு வர.
இந்த தர்ம யுத்தத்தை விட மேன்மை
தரக்கூடியது வேறு எதுவும் இல்லை.
இதில் உயிர்விட நேர்ந்தாலும் உயர்வே தான்.
தர்மயுத்தத்தில் இறக்கக் கூடியவனுக்கு
உலகில் எல்லாமே கிடைக்கும்.
கடமையிலிருந்து நழுவுகிறவன்
அனைத்தையும் இழக்கிறான்.
செயலில் இறங்க ஆயத்தமில்லாத தனி
மனிதனும், சமுதாயமும்
ஆபத்தை வரவழைத்துக் கொள்கின்றன.
எனவே எழுந்து நில்
எதிரிகளைத் தோற்கடித்து வளமான
இராஜபோகத்தை அனுபவி,
அழிவில்லாத வெற்றியை அடைவாய்
நல்வாழ்வும் செல்வங்களும் வீரனான
உனக்கே உரியவை.

கிருஸ்ணபகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## தொன்மைத்தமிழும் அண்மைத்தமிழும் இன்மைத்தமிழும் தொன்மைத்தமிழ் தமிழர் வரலாறும் பண்பாடும்

தமிழுணர்வும், பிரதேச உணர்வும் வளர்ந்த வரலாற்றை பற்றித் தனிநாயக அடிகளின் முடிவுகள் படி.

இவ்வுணர்வின் வளர்ச்சியை முழுமையாக அறிந்து கொள்வதற்கு இவ்வுணர்ச்சியின் தோற்றம் முதல் இன்று வரை அதன் வரலாற்றைச் சுருக்கமாக அறிந்து கொள்ளுதல் அவசியம்.

சரித்திர காலத்தில் தமிழ்நாடு நான்கு வகை நிலங்களாக இயற்கையாகவே பிரிந்திருந்தது. அவை குறிஞ்சி, முல்லை , மருதம் , நெய்தல் என்பன. குறிஞ்சி மக்கள் வேட்டுவ வாழ்க்கை மூலமாகவும், மருதநில மக்கள் உழவுப்பயன் மூலமாகவும், நெய்தல் நில மக்கள் மீன்பிடித்தல், உப்புக் காய்ச்சுதல் முதலிய தொழில்களின் மூலமாகவும், உணவும், உடையும், உறையுளும் பெற்று வாழ்ந்தனர்.

உழவுப்பயன் அதிகமாக அதிகமாக, மற்ற நிலப்பகுதிகளுக்குப் பண்டமாற்று வாணிபம் பரவிற்று. தமிழ் நிலப் பாகுபாடுகள் மறையத் தொடங்கின. இந்நிலையைத்தான் பத்துப்பாட்டும், புறநானூறும் சித்திரிக்கின்றன.

ஒவ்வொரு நிலப்பகுதியிலும் தோன்றிய கலைகள் நான்கு நிலப்பகுதிகளிலும் பரவின. இதனைப் பரப்பியவர்கள் பண்டைப் பாணர்களும், பொருநரும், விறலியரும், கூத்தரும், கூத்தியரும் ஆவார்கள். அவர்கள் நானிலங்களிலும் தோன்றி வளர்ந்த கலைகளைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பினர். கலை மரபுகளை அவர்கள் ஒருமுகப்படுத்தினர். இக்காலத்தில் தமிழகம் ஒன்றுபட்ட மரபின் நூற்றுக்கணக்கான குறுநில மன்னரும், முடியுடை மன்னர் மூவரும் சிறு சிறு நிலப்பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்தனர். பண்டைக்காலப் கலைப் பரிவர்த்தனையும் தமிழகத்தில் ஒற்றுமையுணர்வைத் தோற்றுவித்தன.

இக்கூற்றுக்குச் சில சான்றுகளாக அமைவன

1. பட்டாங்கொற்றன் என்னும் குறுநில மன்னனது வள்ளன்மையை கருவூர் கககதப்பிள்ளை சாத்தனார் பாடுகிறார். அவன் குதிரை சிறு குறவர் குடியொன்றின் தலைவன். அவனது ஆதிக்க வரம்பு மிகக் குறுகியதாயினும் அவனது புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. ஏனெனில் அவனிடம் பரிசில் பெற்ற புலவர் அவனது புகழைத் தமிழகம் முழுவதும் பரப்பிவிட்டார்கள். இதனைப் புலவர் பின்வருமாறு கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரார்க் குதிரைக் கிழவ, கூர் வேல்
நறை நார்த் தொடுத்த வேல்கையங் கண்ணி
வடி நவிலம்பின் வில்லோர் பெரும்,
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்தி,
பாடுப வென்ப பரிசிலர் நாளும்,
ஈயா மன்னர் நாண,
ஈயாது பரந்த நின் வசையில் வான் புகழே"

(புறம்.168)

2. இமய வரம்பன் நெடுஞ்சேரவாதனை குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் போற்றிப் பாடியுள்ளார். அவன் முடியுடை மன்னர் மூவரில் ஒருவனே யாயினும், அவன் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்தது என்று புலவர் கூறுகிறார்..

"அமைவரல் வேலி இமயம் விற்பொறித்து
இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன் கோல் நிற்க இ"

(பதிற்றுப் பத்துப் பதிகம்)

3. மதுரை நகரின் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்ததென பரிபாடல் (திரட்டு 9) கூறுகிறது.

தண் தமிழ் வேலித் தமிழ் நாட்டகம் எல்லாம்
நின்று நிலை இப்புகழ் பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை – கொடித்தேரான்
குன்றம் உண்டாகும் அளவு?

மொழி, கலை, பண்பாடு இவற்றால் ஒன்றுபட்டு வந்த தமிழகம் ஆட்சி முறையால் பிரிவுபட்டு நின்றது. அது மட்டுமல்ல சேரர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையேயும், சேரருக்கும் பாண்டிய சோழர் களுக்கும் இடையேயும், இடைவிடாமற் போர்கள் நிகழ்ந்து வந்தன. ஆயினும் தமிழுணர்வும், தமிழக உணர்வும் நிலை பெற்றிருந்தன. மூவரசுகள் ஒன்றுபட்ட பொழுதெல்லாம் புலவர்கள் மன்னர்களின் ஒற்றுமையைத் தமிழக ஒற்றுமையாகப் போற்றி வரவேற்றனர்.

இவை யாவும் கி.மு 3ம் நூற்றாண்டு முதல் கி.பி 3ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தைக் குறிப்பிடுவன.

கி.பி முதல் நூற்றாண்டு 4ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் சிற்றரசுகள் அழிந்தன. மூவரசுகளும் வலிமை பெற்றன. பெரிய அணைகள் கட்டப்பட்டன. தானிய விளைச்சல் மிகுதியாயிற்று. ஆற்றங்கரையோரங்களில் மக்கள் கூடினர். நகரங்கள் தோன்றின. வாணிபம் வளர்ச்சியுற்றது. முதல் நூற்றாண்டு முதலே அந்நிய நாட்டு வாணிபம் தொடங்கி வளர்ந்தது. இந்நிலையைப் பட்டினப்பாலையில் காணலாம். அதற்கும் மேலாக சிலப்பதிகாரத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வணிக வர்க்கம் பெருஞ் செல்வாக்கு பெற்றது. மூவரசர்களது நாடுகளிலும் அதற்கு வெளியிலும், கடல் கடந்த கீழ் நாடுகளிலும் அவர்களது வியாபாரம் பெருகியது. மூவரசு நிலங்களிலும் தங்குதடையற்ற வாணிபம் செய்ய ஒன்றுபட்ட தமிழ்நாடு வேண்டுமென வணிகர்கள் விரும்பினர். வாணிபத்துக்கு இடையூறான பாண்டியன் ஆட்சியைக் கண்ணகி அழித்தாள். அக்காலம் தமிழுணர்வும், தமிழ்ப் பிரதேச உணர்வும் மிகத் தெளிவாகத் தோன்றின.

இவ்வுணர்வைச் சிலப்பதிகாரம் பலவகையில் புலப்படுத்துகிறது. கதையில் மூன்று காண்டங்களும் முடியரசர் மூவருடைய தலைநகரங்களில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. புகார்க் காண்டம் சோழ நாட்டில் நடைபெறும் கதையையும் மதுரை காண்டம் பாண்டிய நாட்டில் நடைபெறும் கதையையும் நிகழ்ச்சிகளையும், வஞ்சிக் காண்டம் சேர நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றன. ஒவ்வொரு காண்டமும் அந்தந்த நாட்டின் கலை வளர்ச்சியையும் பண்பாட்டையும் புலப்படுத்துகின்றன. வாழ்த்துக் காதையில் மூன்று மன்னர்களும் வாழ்த்தப் பெறுகிறார்கள்.

"வாழியரோ வாழி
வருபுனல் நீர்ப் போருநை
சூழும் மதுரையார்
கோமான்தன் தொல் குலமே"

"வாழியரோ வாழி
வருபுனல் நீர்த்தண் பொருநை
சூழ் தரும் வஞ்சியர்
கோமான்தன் தொல் குலமே"

"எல்லா நாம்"
காவிரி நாடனைப் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார்"

ஒவ்வோர் காண்ட முடிவுக் கட்டுரையிலும், முறையே சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவரும் போற்றிப் பாடப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் மலையைக் கண்ணாடியிற் காட்டுவது இவை காட்டுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். தமிழ்நாட்டை ஒரு நாடாகக் குறிப்பிடும் அடிகள் வருமாறு:

"குமரி வேங்கடங்
குணகுட கடலா
மண்டிணி மருங்கில்
தண் தமிழ் வரைப்பில்
செந்தமிழ் கொடுந்தமிழ்
என்றிரு பகுதியில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி 7-ம் நூற்றாண்டு முதல் 13 நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் இப்பிணைப்பு இறுகி வந்ததென்றே சொல்லலாம். ஆழ்வார், நாயன்மார்களது பக்திப் பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பரவின . தமிழிசை வளமடைந்து . கடவுளைத் தமிழாசானாக சமயக் குரவர்கள் பாடினார். பக்திப்பாடல்களில் தமிழுணர்வும் கலந்தன. பக்தி வெள்ளத்தோடு தமிழுணர்வும் வெள்ளமாகப் பாய்ந்தது. இக்கால முடிவில் கம்பன் தோன்றினான். வால்மீகியின் காவியத்தைத் தமிழ்காவியமாக்கினான். அவனும் தமிழுணர்வை வளர்த்தான். நாட்டுப்பற்றையும் வளர்த்தான். இராமனைத் "தென்மொழி கடந்தான், வடமொழிக் கெல்லை தீர்ந்தான்" என்று அழைக்கின்றான். "தமிழேனும் அளப்பெரும் சலதி" என்று தமிழைக் கடக்க முடியாத கடலுக்கு ஒப்பி டுகிறான். தமிழ்நாட்டிற்கு தேவர் நாடு ஒப்பாகாது என்று காரணத் தோடு கூறுகிறான்.

நாயக்கர் காலம் தொடங்கி அவர்கள் காலம் முடியும் வரை சிறு பிரபந்தங்களில் தமிழுணர்வு மங்காமல் நிலவுவதாகக் காண்கிறோம்.

பள்ளுப் பாடல்களும், குறவஞ்சிகளும், இக்காலக் கவிஞர்கள் படைப்புக்களே ஆங்கில ஆட்சிக் காலமே தமிழுணர்வு மங்கிய காலம் ஏன்? அடிமைக்கு மொழிப்பற்று ஏது? ஆங்கில மொழியும் பண்பாடும் மனிதப்போலிகளைப் படைத்தது. நாட்டிலேயே அயல்நாட்டு ஆன்மாவுடன் நடமாடிய மனிதரைச் சிருஷடித்தது. இதனால் இலக்கிய ஊற்று உள்சுரந்தது. பண்பாடு உறங்கிப் போயிற்று.

பண்பாட்டின் ஒருமையையும் உணர்தல் அவசியம் எனப் பாரதி கண்டார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"
சொல்லில் உயர்வு தமிழச் சொல்லே,
இதைத் தொழுது படித்திடடி பாப்பா"
யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம். "

புதிய மறுமலர்ச்சி சுந்தரம்பிள்ளையின் தமிழ்வாழ்த்துப் பாடல் தோன்றிய காலத்திலிருந்து துவங்குவதாக அடிகள் கூறுகிறார். "கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய தென்னிந்திய மொழி களுக்குத் தமிழ்தான் தாய். இத்தனை மொழிகளைப்பெற்றெடுத்தும். தமிழ் ஆரியம் போல் முதுமையடைந்து அழிந்தொழிந்து போகாமல் இளமையோடு நிலவுகிறது. இத்திறத்தை எண்ணித் தமிழை வாழ்த்துவோம்" என்பது அப்பாடலின் கருத்து.

"ஆரியன் அல்லேன் எனும் போதில்
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி!"
"அயல் என்று கொட்டுசு முரசே, உறவான
திராவிடர் அல்லார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் வடநாட்டுப் பொய்யும் புனை சுருட்டும்
எங்கும் தலைவிரித்தே இன்னல் விளைந்தனவே."

(பாரதி தாசன் கவிதைகள்)

"மலங் கழித்து உலகவர் வானவராயினர்
வுலம் பெறு சுத்த சன்மார்க்கம் சிறந்தது.
பலம் பெரு மனிதர்கள் பண்புளராயினர்
ஏன்னுளத்து அருட் பெருஞ் சோதியார் எய்தவே."

"அண்டமும் அகிலமும் அருளர சாட்சியைக்
கொண்டன ஓங்கின குறை யெலாந் தீர்ந்தன
பண்டங்கள் பலித்தன பரிந்தென் னுள்ளத்தில்
எண்டரும் அருட் பெருஞ் சோதியார் எய்தவே."

"மதித்த சமய வழக் கெல்லா மாய்ந்தது.
வருணாச் சிரமம் எனும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப் பெலாம் ஒழிந்தது
கொலையையும், களவும் மற்றைப் புலையும் அழிந்தது."

இத்தகைய உலகம் தோன்ற வேண்டுமென இராமலிங்கர் கனவு காண்கிறார்.

சாதி சமய சண்டைகள் மலிந்திருந்த இராமலிங்கர் அவற்றை எதிர்த்துச் சாடி சமரசத்தைப் போதித்தார். ஏழை எளியவருக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு குமுறி அவற்றை நீக்கத் தமக்கு வலிமையளிக்க நடராஜனை வேண்டினார். பாரதியின் "வல்லமை தாராயோ" என்ற வேண்டுகோள் இக்கருத்தின் அடியாகப் பிறந்த தென்றே தோன்றுகிறது. போர் ஒழிந்து அமைதி நிலவ வேண்டுமென வள்ளலார் விரும்பினார். மக்கள் துயர் தீர்ந்து இன்பமுற்று வாழ வேண்டும் என்று விரும்பினார். உலகம் வாழத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் நல்லவர்களின் உள்ளமே கோயில் என்றும், அவர்கள் வழியைப் பின்பற்றுவதே சன்மார்க்கம் என்றும் நமக்கு போதித்தார். இதனைக் கண்டு பாரதியார் இராமலிங்கத்தை தமது ஆசானாக ஏற்றுக் கொண்டார். கருத்துக்களில் மட்டுமன்றி பாட்டு உருவங்களில் கூட பாரதி இராமலிகரைப் பின்பற்றினார். இன்றும் மனிதாபிமானத்துக்கும், சமூக சீர்திருத்தத்திற்கும் இராமலிங்கர் வழிகாட்டியாக திகழ்கின்றார். சமாதானம், சுதந்திரம், சோசுஷலிசம் என்னும் கோசுஷங்களை முழங்கிக் கொண்டு புத்துலகை நோக்கி மன்னேறும் முற்போக்கு மனித குலத்திற்கு இராமலிங்கரது திருமுறைப் பாடல்கள் பல்லாண்டு கூறுகின்றன.

**செவ்வியல் மொழி தமிழ்**

இந்திய மொழிகள் யாவும் தமிழின் உயிர், மெய் எழுத்துக்களின் அட்டவணையை ஒட்டியே அமைந்துள்ளன. ஆனால், ஐரோப்பிய மொழிகள் யாவும், உயிர்மெய் கலந்த "அவியல் அட்டவணையாக" உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50,000 ஆண்டுகள் உயிரோட்டமாக உள்ள தமிழ்மொழி முன்னைக்கு முன்னை மொழியாக உலகின் ஒரே முதல் மொழியாக உள்ளது தமிழ்மொழி.

தமிழ், உலகின் மூத்த மொழி. இது கன்னி மொழி. அறிவியல் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட மொழி, உயிர், மெய் என்ற எழுத்துப் பிரிவு, உயிரெழுத்தில் குறில் (5), நெடில் (5) என்ற வகை (ஐ, ஔ - இவை கூட்டொலிகள்) குறிலுக்குப்பின் நெடில் என்ற முறைவைப்பு, வல்லினம் (6), மெல்லினம் (6), இடையினம் (6) என்ற மூவகை, இவற்றின் சமமான எழுத்துக்களின் எண்ணிக்கை, வல்லினத்தின் பின் மெல்லினம் என்ற முறைவைப்பு ஆகியவை, தமிழ்மொழி திட்டமிட்டுத் தோற்றுவிக்கப பட்டது என்ற உண்மையை உரைக்கும்.

தமிழ் என்ற சொல்லும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. மெய் எழுத்தின் மூவினத்திலுள்ள ஒரு முக்கியமான எழுத்துடன் (த்,ம்,ழ்) உயிரெழுத்தின் மூன்று முக்கியமான எழுத்துக்களை (அ,இ,உ) இணைத்துத் தமிழ் என்ற சொல் உருவாக்கப்பட்டது. துளுமொழியில் தமிழ்மொழி, தமிழு என்றே குறிக்கப்படுகிறது. காலப்போக்கில் தமிழு என்பதன் இறுதி உகரம் மறைந்து, தமிழ் என்றாயிற்று.

தமிழ் என்ற சொல்லுக்கு மொழி என்பதோடு இனிமை, அகப்பொருள், வீரம் சைவம், இறைமை, மறவர், வேந்தர், நாடு ஆகிய பொருள்கள் காலப்போக்கில் படிந்தன. உலகில் மொழியைக் குறிக்கும் எந்த ஒரு சொல்லுக்கும் இது போன்று பல பொருள்கள் இல்லை. தமிழ், உலகின் முதல் செவ்வியல் மொழி.

**வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தமிழர்**

இராம வர்மா ஆராய்ச்சி நிலைய வெளியீடு ஒன்றில் திராவிடர் நாகரீகப்பண்புகளை உள்ளவாறு விளக்கும் சிறந்த கட்டுரை ஒன்று வெளிவந்தது. அது மேனன் என்னும் அறிஞரால் எழுதப்பட்டது. ஆதில் (1) தென்னிந்தியாவே மக்களின் தொட்டில், (2) இற்றைக்கு இருபதி னாயிரம் ஆண்டுகளின் மன் இநிதயாவிற் பேசப்பட்ட மொழி இன்றைய தமிழுக்கு முற்பட்ட பழந்தமிழ், (3) சுமேரியர் திராவிடரின் ஒரு கிளையி னர், (4) மொகஞ்சதாரோ நாகரிகம் ஐயத்தக்கு இடமின்றி திராவிடரு டையது. (5) இந்திய நாகரீகத்தின் அடையாளங்கள் பிலிப்பைன் தீவு களிற் காணப்படுகின்றன. (6) சுமத்திரா, யாவாத் தீவுகளின் நாகரிகத்தில் இந்தியப் பண்பாடுகள் ஊறியுள்ளன. (7) மத்திய அமெரிக்காவில் வாழும் மாயா மக்களின் திராவிட சம்பந்தமுண்டு. (8) இந்திய சமயமென்பது திராவிடர் சமயமே. என்னும் கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

மேனன் எழுதிய இக் கட்டுரைக்கு கருத்து வழங்கிய அவ்வெளி யீட்டின் ஆசிரியர் கூறியிருப்பது வருமாறு. "இவ்வாசிரியர் தமது கருத்துக்களைத் தக்க ஆதாரங்கொண்டு வலியுறுத்தியிருக்கிறார். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியர் நாகரிகம்தான் லோனத என்று நீண்டகாலமாக நினைத்துப் பழகி விட்டோம். இப்பிற்போக்கான மாயையால் மக்கள் மறைக்கப்பட்டி ருப்பதால் மேனன் அவர்கள் வலிய சான்றுகளைக் கொண்டு நாட்டில் உள்ள உண்மைகளை நம்புவதற்கு உருவன் இன்று பின்னடைவான்.

இவ் இரண்டாம் பதிப்பில் ஐயத்துக்கிடமான பலவற்றைத் தக்க மேற்கோள்களால் நிலைநாட்டியுள்ளோம்.

ஈழம் என்பது எல் என்னும் சொல்லின் திரிபு: எல்,இல் எனத் திரியும். (எல், எல் +அம் =எல்லாம் இல்லம் = ஈலம் = ஈளம் = ஈழம்) சிங்கவமிச அரசருக்குப் பின் (சிங்கவாகுவின் புதல்வனாகிய விசயனுக் குப்பின்) எல்லர் எனப்பட்ட ஈழத்து மக்கள் (சிங்க எல்லர் ) சிங்களர் எனப்பட்டனர். (சிங்க + எல்லர் = சிங்கலர் = சிங்களர்) இவ்வாறே அவர் மொழியாகிய எல் (சிங்க + எல் + அம் = சிங்கலம் = சிங்களம்) என்றாயிற்று. சிங்களம் என்றாவதற்கு முன் இலங்கைப் பழைய மக்களின் மொழி எலு எனப்பட்டது.

உலகின் பல மொழிகளுக்கும், நாடுகளுக்கும் பெயரும், உருவும். எல்லைகளும் உருக்கொள்ளும் முன்னரே தமிழ் என்னும் செந்தழிழ் மொழியும், செந்தமிழ் நாடும் உருக்கொண்டது. இச்செந்தமிழ் மண்ணில் உருக்கொண்ட முதல் மாந்தன் தமிழன்: பேசிய மொழி தமிழ் மொழி. இச்செந்தமிழ் இனத்தின் நாகரிகமும், பண்பாடும் உலக நாகரிகங்களுக்கு மூத்தது. உலகின் முதல் நாகரிக இனமாகவும், நாகரிக முன்னோடியாவும், நாகரிகத் தொட்டிலாகவும், நாகரிகப் பண்ணையா கவும், நாகரிக உயிர் நிலையாகவும் இருந்தது இத் தமிழ் நாகரிகமே. துமிழ்ப்பண்பு அன்று உலகப் பண்பாய்க் கோலோச்சியது. உலக சமயங்களுக்கெல்லாம் மூத்த சமயமாக தமிழ்ச் சமயம் இருந்தது. உலகில் முதல் கடலோடி இனமாகவும், உலகின் முதற் பேரரசு, கடல் பேரரசு கண்ட இனமாகவும் தமிழ் இனம் திகழ்ந்தது.

தமிழ் மொழி உலக மொழிகளுக்கு வேர் போன்றது. உலக மொழிகளுக்கு மூல மொழி தமிழ். மரத்தைப் போன்றது தமிழ் மொழி. கிளைகளைப் போன்றது உலக மொழிகள் என உணர்த்தும் நூல்கள்.

அன்னையின் மடியில் பால் அருந்திய காலம் முதல் கற்ற மொழி எம் தாய்மொழியாம் தமிழ் மொழி. இரத்தத்தோடு ஊறிய எம் தமிழ் மொழியின் பழங்கதைகளை நினைவுறுத்தும் செய்திகளும், தமிழ் மொழியின் நீளமும், அகலமும், ஆழமும் மேன்மையும், வீரமும், வினைத்திட்பமும் அடங்கிய செய்திகளும், தமிழர்களின் அறியாமை யைப் பயன்படுத்தி உலகில் ஆரியர்கள் மதிப்பும், நல்வாழ்வும் பெற்ற உண்மைச் செய்திகளும், மேலை நாட்டு அறிஞர்களால் எழுதப்பட்ட உண்மையான வரலாற்றையும், ஆரியர்தம் வரலாற்றையும் படித்தால்த் தான் தமிழர்தம் உண்மையான வரலாற்றை அறியமுடியும் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநிறுத்தும்செய்திகளும், ஆரியர்களின் பொய்க்கதைகளும், நம்பிக்கைகளும் நெருப்பின்முன் வைத்த வெண்ணெய்யைப் போலாகும் செய்திகளும் உள்ளடக்கிய நூல்களாகும்.

ஆரியர்கள் எழுத்து எழுதும் முறையை அறியாதவர்கள். தமிழர்கள் ஆரியர் வருவதற்கு முன்பே எழுத்தெழுதும் முறையை அறிந்தவர்கள். தமிழர்களிடமிருந்தே ஆரியர்கள் எழுத்தெழுதும் முறையை அறிந்தவர்கள். தமிழர்களிடமிருந்தே ஆரியர்கள் எழுத்தெழுதும் முறையைக் கற்றனர். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருமுன்னரே தமிழர்கள் வானநூல் அறிவும், இசைநூல் அறிவும், மொழிநூல் அறிவும் பெற்றுத் திகழ்ந்தனர். சிந்துவெளி மக்கள் தமிழரே.

இளங்கோவடிகளும், இறையனார் அகப்பொருள் உரையில் பெருந்தமிழ்ப்புலவர் நக்கீரனாரும, தொல்காப்பிய உரையகத்தே இளம்பூரனாரும், தமிழர்தம் பெருமையை எடுத்துக் கூறியுள்ளனர். வடமலை என்பது மேற்குத் தொடர்ச்சி மலை என்பதும் பதிவு செய்யப்பட்ட செய்திகளாகும். துமிழர் நாகரிகம் பழைய கறகாலம், புதிய கற்காலம், வெண்கலைக்காலம், இரும்புக்காலம் என்பதாக மலர்ச்சியும், வளர்ச்சியும் பெற்றது.

நாகரிகத்தின் உச்சநிலையை அடைந்து விளங்கியவர்கள் எகிப்தியர். சுமேரியர் என்னும் இரு மக்கள் கூட்டத்தினரே! எனபது உலக வரலாற்றாசிரியர்களின் முடிவாய் இருந்தது. அப்படிப்பட்ட முடிவுக்கு வருவதற்கு அம் மக்கள் பழைய நாகரிகச் சின்னங்கள் சான்றாய் அமைந்தன. துமிழர்தம் பழைய நாகரிகத்தை வெளிக்கொணரும் சின்னங்கள் அண்மை வரையில் கண்டு பிடிக்கப்படாமல் இருந்தமை யால் தமிழர்களது தொன்மை வரலாறு மறைவாகவே இருந்தது. 1922 களில் மொகஞ்சதாரோ, அரப்பா நகரங்கள் புதைபொருள் ஆய்வாளர் களால் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட பின்புதான் தமிழரையும், தமிழ் மொழியையும் பற்றிய ஆராய்ச்சி உண்மைகள் உலகெங்கும் பரவத்தொடங்கின. இவ்வகழ்வாய்வின் உண்மைகளுக்குப் பிறகுதான் உலக நாகரிகங்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தவர்கள் தமிழர்கள் என்னும் உணமை வரலாறு வெளிப்பட்டது. இவ்வெளிப்பாட்டிற்குப் பின்னரே உலக ஆராய்ச்சி விற்பன்னர்கள் மலைத்து நின்று மூக்கின் மேல் விரல் வைத்து நீண்ட சிந்தையராயினர் எனபதை இந்த நூலின் வாயிலாக அறிய முடிகிறது.

**அண்மைத் தமிழ் எதிர் கொள்ளும் சிக்கல்களின் அடிப்படைகள்**
**இனக்குழு இலக்கணம்**

இனக்குழு என்பதற்கு அகராதிப் பொருளாவது:

"இனம் மற்றும் தேசீயம் ஆகிய இரு தன்மைகளைத் தொடர்பு அடிப்படையில் கொண்டு ஒரு குழு இணைந்து காணப்பட்டு அடையாளப்படுத்தப்படுமெனில் அதனை இனக்குழு என்று கூறலாம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்குழுவினருக்கு இனப் பண்பாட்டு ஒருமித்த தன்மை அவ்வளவு இணைந்து காணப்படுவதால் இது குறித்துப் புரியாமலிருப்பார்: நுணுக்க அறிவு பெறாத வெளியாரும் இதனை வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் வகையில் இருக்க மாட்டார்கள்" என்றும் அவ்விலக்கணம் கூறுகின்றது.

இந்த இலக்கணம் மிகவும் குறுகிய வகையில், தற்காலச் சமூகத்தில் பல குழுக்களையும் இனக்குழு என்று வகைப்படுத்தும் நிலையில் உள்ளது.

இ.கே.பிரான்சிஸ் என்பார் கூறிய இலக்கணம் பின்பு அமெரிக்கச் சமூகத்திற்கு மில்டன் கார்டன் உட்படுத்தி வகைப்படுத்த உதவியாக இருந்தது. பிரான்சிஸ் முதன்முதலாக இனத்தன்மைக்குச் சமூக உளவியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பரந்த அளவில் விளக்கம் கூறினார். இனக்குழு என்பது குழு உறுப்பினர்களிடையே தாங்கள் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற ஒருமித்த தன்மை அடிப்படையில் உருவாகிறது என்று எவ்விளக்கம் கூறுகிறது.

அவர் கூறுவதாவது: "மானிடவியல் கூறுகின்ற விளக்கத்தின் அடிப்படையில் இனம் என்பது பொதுவான உடற்கூறுத் தன்மைகளைக் கொண்டது என்பதை வைத்து இனக்குழுவை ஒரு இனம் என்று கூற முடியாது. மேலும் இனக்குழு என்பது ஒரு தேசியமன்று தேசீயம் என்பது பொதுவான மொழி, எல்லை, பொதுப்பாரம்பரியம் ஆகியவற்றை உள்ளடக்கிப் பொதுவான அரசியல் அடிப்படையிலான அரசாங்கத்தைக் கொண்ட குழுவினர்"

இனக்குழு என்பது ஒரு குழுவினர்க்கு உள்ள "நாம் என்ற உணர்வு" ஆகும். இத்தகு நாம் என்ற உணர்வு ஒரு குழுவினர் எல்லோரும் முகத்துக்கு முகம் நேரிடையாகக் குடும்பத்திலிருப்பது போன்றோ. அண்டை அயலாரைப் போன்றோ இருக்க வேண்டுமென்பதில்லை. இத்தன்மை முதனிலைக் குழுவிலிருந்து இடைநிலைக்குழு உறவாகவும் மலரலாம் இத்தகு குழு ஏற்படும் போது தொடக்கத்தில் தனியான நில எல்லை, அரசியல் அமைப்பு, பொதுவான மொழி , பொதுவான மதிப்பீட்டு அளவைகள் ஆகியவை அடிப்படையானவையாக விளங்கும். இத்தகு இனக்குழுக்கள் ஒருங்கிணைந்து நல்ல வளர்ச்சியடைந்த பின்பு குழு உறுப்பினர்களிடையே மேற்குறித்த தன்மைகள் மாற்றமடைந்தாலும், மறைந்தாலும் இனக்குழுக்கள் மறையாமல் நிலைத்திருக்கும். உறுப்பினர்களிடையே நல்லிணக்கமான தனிப்பட்ட நெருங்கிய உறவு காணப்படும். உறுப்பினர்களிடையே நிலவும் உணர்ச்சி பூர்வமான ஐக்கியமும், பண்பாட்டு ஒருமித்த தன்மையையும் குழு ஒற்றுமையை வலுப்படுத்தும். இக்குழுக்கள் தன்னிறைவு கொண்டனவாகவும் தனிமைப்படுத்தப்படுவனவாகவும் விளங்கும். இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் ஓர் இனக்குழுவாகவும் அதனினுள் வடபகுதி, கிழக்கு, மலையகம் என்பன உப இனக்குழுக்களாகவும் அமைகின்றன.

இனக்குழுக்களுக்கு அவற்றுக்கே உரித்தான துணை அமைப்பும், தணைப்பண்பாடும் காணப்படும் மில்டன், கர்டன் இவ்விரு தன்மை களையும் விளக்கமாக இனக்குழுத்தன்மை என்று கூறுகின்றார். இனக் குழுவின் துணை அமைப்புத்தன்மை என்பது "ஒருவனது வாழ்க்கை முழுவதும் ஏற்படும் முதனிலை, இடநிலை உறவுமுறையைத் தனது குழுவுக்குள்ளே அமைந்துள்ள வகையில் சமூக ஊடாட்டத்திற்கு வழி செய்யும் வகையில் அமைந்த சமூக அமைப்பு ஆகும். (மில்டன், கார்டன்), துணைப் பண்பாடு என்பது பெரிய சமூகத்தினைப் போன்று இணையான ஒரு குழுவிலுள்ள பண்பாடு. இக்குழுவில் குடும்பம் என்ற அமைப்பும் ஆண்களும், பெண்களும் இருபாலர்களும் உட்படுவர். இவ்வமைப்பு ஒருவனது வாழ்நாள் முழவதும் பிறருடன் சமூக உறவு கொள்ளும் வகையில் பல குழுக்களையும், நிறுவனங்களையும் கொண்டிருக்கும். (மில்டன். கார்டன்).

ஒரு இனக்குழுவின் துணைப் பண்பாடு வேறொரு இனக்குழுவின் துணைப் பண்பாடு வேறொரு இனக்குழுவின் துணைப்பண்பாட்டி லிருந்து வேறுபடுத்தி அறியும் வகையிலும் எது ஆதிக்கம் வாய்ந்த பண்பாடு என்று அறியும் வகையிலும் காணப்படும்.

**மொழியும் வட்டாரமும்**

மொழியும் வட்டார உணர்வும், இனக்குழு என்று அடையாளப்படுத்தப்படுகின்றன. இதனை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும் போது பல்வேறு மொழி பேசுபவர்களை வெவவேறு இனக் குழுக்கள் என்றே கூற வேண்டும். இத்தகு வேறுபட்ட மொழியைப் பேசு வோர்கள் வட்டார வேறுபாடு கொண்டவர்களாகவும், காணப்படுவர் என்பது அறிந்ததே. இத்தன்மைகள் இவ்வாய்வுக்கு முக்கியமானவை யாகும். ஏனெனில் இரண்டு வேறுவேறு மொழிகளைப் பேசுகின்றவர் களைப் பற்றியே அவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழர்களும் மலையாளிகளும் திராவிட இனத்தைச் சேர்ந்த வர்கள் என்றும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இரு வேறுபட்ட இனக்குழு என்று கூறலாமா என்று கேள்வி எழும்புகின்றது. இதற்கு முன்னால் இனக்குழு என்னவென்று இலக்கணப்படுத்தியதைக் கேரளத் தமிழர்களுக்குப் பொருத்திப் பார்த்தால், அவர்களையும் இனக்குழு என்று கூறுவதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

திருவிராங்கூதரில் வாழ்ந்த தமிழர்களைப்பற்றிக் குறிப்பிடும் போது கே.எம் பனிக்கர் வேறுபட்டவர்கள் என்றுதான் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் - மலையாளிகள் பண்பாடுகள் வேறானவை என்பது ஒரே மொழிக் குடம்பத்தைச் சேர்ந்தவர்களாக இருவரும் விளங்கிய போதிலும், இருவேறு பண்பாடு கொண்டவர்களாகவே உள்ளனர். ஆதலால் அவர்கள் இரு வேறு இனக்குழுக்களாகக் கருதப்படுவர். "பெரும்பான்மையோருடன், வாழும் ஒரு குழுவினர் பண்பாட்டு அடிப்படையில் அவர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவர். என்றால் அவர்களை இனக்குழு என்று கூறவேண்டும்.

இனக்குழு என்பது ஒரு பெரிய உட்குளுவாகும். சமூக வகுப்புக்களுக்கும், முதநிலைக் குளுக்களும் குடும்பம் போன்ற பல நிறுவனங்களும் கொண்டது. இதனை வேறொறு வகையில் கூறினால், உயர்ந்த அமைப்பையுடைய இச்சமூகத்தின் எல்லைக்குள்ளேயே ஒருவன் விரும்பினால் தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் தன் வாழக்கையைப் பொருள் உள்ளதாகக் கழித்துக் கொள்ள முடியும். இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும், கேரளத்தில் மலையாளிகளும் தமிழர்களும் இருவேறு இனக்குழுக்களே.

**பண்பாட்டுத் தன்மையாதல்**

ஒரு நாட்டில் குடியேறியவர்கள் தங்களின் புதிய சூழலுக்கு இயந்து அதனைப் பின்பற்றுவதைப் பண்பாட்டுத் தன்மையாக்குதல் என்று கூறுகின்றோம். முழுப்பண்பாட்டுத் தன்மையாக்குதல் இரண்டு நிலையில் ஏற்படும். ஒரு நாட்டில் குடியேறியுள்ளவர்கள் தங்கள் சொந்த பண்பாட்டுத் தன்மைகள் அனைத்தையும் கைவிட்டுப் புதிய சமுதாயத்தின் தன்மைகளைப் பின்பற்றும்போது பண்பாட்டு தன்மயமாதல் ஏற்படும். குடியேறிய நாட்டில் உள்ளவர்களின் சமுதாயத்துடன் குடியேறியவர்கள் சமூகத் தொடர்பு முறைகளை எல்லா வகையிலும் ஏற்படுத்திக் கொள்ளும்போது குடியேறியவர்கள் சமூகத்தொடர்பு முறைகளை எல்லா வகையிலும் ஏற்படுத்திக் கொள்ளும்போது வேறொரு நிலையில் அவர்கள் பண்பாட்டுத் தன்மயமாகுதலுக்கு ஆளாவார்கள் இது தவிர்க்க முடியாதது என்றும் கூற முடியாது. அதேபோல் தமது பாரம்பரிய நிலத்திலும் வேற்றுச் சமூகத்தினால் பண்பாடுத் தன்மயமாக்கலிற்கு உட்படும் தன்மையியைக் காணலாம்.

**சிறுபான்மையர் சிக்கல்**

சிறுபான்மையர் தாங்கள் வாழும் நாட்டில் பெரும்பான்மையரின் சமூக, பண்பாட்டு, பொருளாதார முறைகளை ஏற்றுக் கொண்டவர்களாகக் காட்டிக்கொள்ள வேண்டும். சில நாடுகளில் பெரும்பான்மையர் சிறுபான்மையினரைச் சரிசமமாக நடத்துவதில்லை. சிலநாடுகளில் மனிதர்களாகக்கூடக் கருதுவதில்லை.

இம்மாதிரிச் சூழலில் பன்மொழி பேசி, இன மக்கள் வாழும் நாடுகளில் ஓர் இனம் தமது மொழியைப் பேணுவதுதான் பண்பாட்டைக் காப்பாற்றச் சிறந்த வழியாகும். சிறுபான்மையர் இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் பெரும்பான்மையர் வாழும் வழிகளைப் பின்பற்றித்தன் மயமாக்கும் முறைக்கு ஆளாகும் அபாயமும் இருக்கிறது. ஈழத்தமிழர் களைப் பொறுத்தவரையில் புலம்பெயர் சூழலில் இத்தாக்கம் மிகவும் அதிகமாக இருக்கும்.

சிறுபான்மையினரின் பொருளாதார அமைப்புக்கள் நசிந்து சமூக முறைமைகள் சிதறுண்டு, கைத்தொழில்கள், கலைப்பண்பாடுகள் அழிந்து நசிந்து சமூக முறைமைகள் சிதறுண்டு, கைத்தொழில்கள், கலைப்பண்பாடுகள் அழிந்து வரும் வேளையில் மொழி மட்டுமே அச் சமூகத்தின் பண்பாட்டுச்சாஎரமாக விளங்கும் மொழி மட்டுமே ஒரே ஓர் அடையாளச் சின்னமாகக் காணப்படும். இதன் காரணமாகத்தான் சிறுபான்மையர் எல்லா நாடுகளிலும் கல்வி அலுவல் மற்றும் பொதுத் தொடர்பில் தங்கள் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர். தமிழ்நாட்டில் வாழும் ஆந்திரர்கள்கூட தங்கள் தெலுங்கு மொழியில் தமிழ்நாட்டில் கல்வி போதிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர். அதே போல் ஈழத்தமிழர்களும் அந்நாட்டில் இருந்தாலும் தமிழ்மொழிக் கல்வியை கற்றலே இனத்திரிபு ஏற்படாது இருக்க ஏதுவாகும்.

தாய்மொழிக் மூலம் கல்வி பெறுவது ஒரு குழந்தையின் இளமைக் காலக் கல்வியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சிறுபான்மையர் குழுவிலுள்ள குழந்தைகள் வாழ்விலும், தாய்மொழிக்கல்வி மி முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

**மொழியும் ஆளுமையும்**

சிறுபான்மை மொழி பேசுவோர்க்கு வீட்டுமொழியும் கல்வி மொழியும் வேறாக இருப்பதனால் சிக்கல் ஏற்படும். குல்வி மொழியாக இருக்கும் பெரும்பான்மையர் பேசும் மொழிக்கு ஏற்ப சமமதிப்பு சிறுபான்மையர் மொழிக்கும் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறில் லாமல் இரண்டாந்தர நிலையில் இம்மொழி நடத்தப்படுமெனில் குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை ஏற்படும் கல்வி மொழி மாணவர்க்கு உயர்வு அல்லது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆங்கில மொழிமூலம் கற்றுக்கொள்ளும் மாணவர்க்கு உயர் மனப்பான்மை ஏற்படுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

**கல்வியின் சிக்கல்**

இலக்கியக் கல்வியும் இம்முறையில் அச்சமூகத்தின் பண்பாட்டை இளைய தலைமுறையினர்க்கு விளக்குவதாக அமையும். தமிழ் மாணவர்கள் ஆங்கிலம் மூலம் கற்கும்போது ஆங்கில இலக்கியத்தையே கற்கின்றனர். தமிழ் இலக்கியத்தையும், பாரம்பரியத்தையும் அவர்களுக்குப் போதிப்பது எப்படி? தங்களது வளமான இலக்கயப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு முறைகளைக் கேரளத் தமிழர்கள் போய்விடும் சூழல் ஏற்பட்டு விடுகிறதல்லவா?

பெரும்பாண்மையர் சிறுபாண்மையர் என்ற சிக்கல் ஏற்படும் போது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இணக்கமான சூழலை ஏற்படுத்த வேண்டும். தமிழர்களுக்கு சிங்களப் பண்பாட்டு முறைகள் கல்வி மூலம் அளிக்கப்பட்டு விடுகிறது. சிங்களவர்களுக்கு சிறுபாண் மையர் பண்பாடு குறிப்பாகத் தமிழர் பண்பாட்டு முறைகளையும் இலக்கியங்களையும் அறிந்து கொள்ளக் கல்வி துணை செய்கிறதா? இவ்வகையில் ஆராய்ந்து பார்த்தால் இப்போதய இலங்கையின் கல்விமுறை இதற்கு உதவி செய்யவில்லை. மாறாக சிங்கள பௌத்தம் பற்றியே பேனதிக்கின்றது மேலும் சிறுபாண்மையினர் பெரும் பாண்மையினப் பண்பாட்டிற்கு தன்மயமாகும் சூழல் அதிகரிக்கும்.

**இன்மைத் தமிழ்**

தமிழ் மொழி தனது செல்வாக்கினை உலகில் இளக்கின்றதா என்பதற்கு 2009 இல் இலங்கையில் ஏற்பட்ட அழிவுகள் கேள்வி யெழுப்பியுள்ளன. துரதிஸ்டவசமாக தமிழக ஆட்சியாளரிடம் தமிழின உணர்வு சற்றுக் குறைவாகவே உள்ளது. புணத்திற்கும் உலகியல் ஆசைகளிற்குமாக தமிழ் இனத்தின் மாணத்தை அடகுவைக்கும் கூட்டம் இன்று அரசியலில் மேலோங்குகின்றது. இதனை நாம் இன்மைத் தமிழ் என்ற அழகிய சொற்றொடரில் கூறிடலாம். இதனை எமது இளம் சந்ததியினரே மிகை நிரப்பல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# தமிழ் இலக்கியத்தில் இருந்து நாம் கற்க வேண்டிய அரசியல் தமிழ் இலக்கியத்தினூடு தமிழர் எதிர்பார்க்கும் அரசமைப்பு

தமிழ் மக்களிற்கு அரசியல் தீர்வு இன்றியமையாதது என்பதனைக் கம்பராமாயணத்தின் (அயோத்தி) ஆற்று 7) இருந்து உறுதி கொள்ளலாம்.

"வள் உறு வயிரவாள் அரசு இல் வையகம்
நள் உறு கதிர் இலாப் பகலும் நாள் ஒடும்
தெள் உறு மதியிலா இரவும் தேர்தரின்
உள் உறை உயிர் இலா உடலும் ஒக்குமே"

அதாவது எமது சமூகத்திற்கு என அரசியல்தீர்வு இல்லாமை சூரியன் இல்லாப்பகல் போல் உள்ளது.

அடுத்து எவரோடும் பகை கொள்ளாது அரசாட்சி அமைய வேண்டும் என்பதை வசிட்டர் இராமபிரானுக்குக் கூறியதாக கம்பர் கூறுகிறார்.

"யாரொடும் பகை கொள்கிலன் என்றபின்
போர் ஒங்கும் புகழ் ஒங்காது : தன்
தார் ஒடுங்கல் செல்லாது : அது தந்த பின்
வேரோடும் கெடல் வேண்டல் உண்பாடுமே!"

2009ஆம் ஆண்டுத் தமிழ் அழிவுகள் எமக்கு அறநெறி நிற்றலைக் கடிந்து கூறுகின்றது. பல சிவாலயங்கள் அழிந்து காணப்படும் காட்சி,

"வாடுக இறைவரின் கண்ணி ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எறிந்தலாளே"
என்ற பாடலை மீள நிறுத்துகின்றது.

ஐ.நா அறிக்கை, தருஸ்மன் அறிக்கை என்பவற்றிற்கு மேலாகப் போர் அறம் என்பது என்ன என்பதனை புறநானூற்றின் 9வது பாடல் கூறுகின்றது.

"ஆவும் ஆண் இயல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு, அரும்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறா அதீரும்
எம் அன்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின்!"

தமிழ் தெரிந்தோர்க்கு மட்டுமே எமக்கு எவ்வளவு தூரம் போர் அறம் மறுக்கப்பட்டுள்ளது என்பது புரியும். சுமாதானத்திற்கான யுத்தம், மனிதநேய மீட்பு நடவடிக்கை என்ற பெயர்களிற்குள் போர் அறம் எவ்வாறு காவுகொள்ளப்பட்டது என்பதனை நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பச் சான்றுகள் துல்லியமாகக் காட்சிப்படுத்தி உள்ளது. ஆனால் இவை நீரின்மேற் தோன்றும் பளிக்கட்டி போன்றதே.

தமிழர்களின் வரலாற்றின் பெரும்பகுதி எம்மினத்தக அழிவுகளின் கதையாகவே உள்ளது. இதனைப் புறநானூற்றின் 49வது செய்யுளிலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே
இருவர் வேறல் இயற்கையும் அன்றே, ஆனால்
முடிப்பொருள் அன்ற நும் செய்தி...."

தமிழர்களாக இருந்து முரண்படும் தன்மை இனத்தின் அழிவுக்கு ஏதுவாகும் என்று அன்று உரைக்க மெய்மை இன்றும் சாலவும் பொருந்துமே.

அறநெறி முக்கியமானது என்பதனை அரசுடன் இணைந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள் அறிதல் அவசியமானது. இதனைப் புறநானூற்றுப்பாடல் 55ல் காணலாம்.

"கடும் சினத்த கொல்களிறும்
கதழ் பரிய கலிமாவும்
நெடும் கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும் என்
நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"

மேலும் நீதி என்பது என்ன என்பதனை மதுரைக் காஞ்சி 484-492இல் கூறப்பட்டுள்ளது.

"அச்சமும் அவலமும், ஆர்வமும் நீக்கிச்
செற்றமும், உவகையும் செய்யாது காத்து
ஞமன் கோல் அன்ன செம்மைந்து ஆகிச்
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"

இத்தகைய நிலையில் மக்களின் ஏக்கத்தினை திருவள்ளுவரின் வரிகளினாலேயே அறியலாம்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்டு
இறை என்று வைக்கப்படும்"
அடுத்து

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலாறும் கெடும்"

சிறந்த அறிவுரை இல்லாத அரசு தானாகவே அழியும் என்பது இதன் பொருள்.

இறுதியாக எமது சமூகத்தினைச் கொல் ஆயுதத்தினால் அடிபணிய வைக்கும் முயற்சியினை முற்றாகத் துறத்தல் அவசியம்.

"அரங்கினில் படைகொண்டு உயிர்கொலை புரியும்
ஆறக்கடையவரினும் கடையேன்"
என்ற வரிகள் இதனை வலியுறுத்துகின்றது.

இவ்வாறாகத் தமிழில் உள்ள அறநெறிகளை தமிழ் அரசியல்வாதிகள் கருதுவார்களானால் தமிழ் மக்களிற்கு மீண்டும் ஓர் அழிவு ஏற்படாது என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## இறப்பிற்கு முன் பகைவராக இருந்து அழிந்தாலும் இறந்த பின்பாவது நட்பை உருவாக்குவோம்.

**போராடிய பின் நடுகற்கள்**

"போராடிய பின் நடுகல்" என்ற சொற்றொடர் பல கருத்துக்கள் பொதிந்தது. போர் ஆடிய பின் நடுகல் என்றால் யுத்தத்தின் பின்பான நினைவுத்தூபி என்றும் ஆடிக்குப்பின்னான போரின் நடுநிலைமை என்றும் அதாவது 1983ஆம் ஆண்டு ஆடிக் கலவரத்திற்கு பின்பான தமிழருக்கான நடுநிலைமை என்பது யாது? எனவும் போர் ஆடி ஒய்ந்த பின் ஏற்பட்டுள்ள வடக்கு கிழக்கின் நிலைமை, நீதி, மனிதநேயம், அபிவிருத்தி என்பவற்றிற்கான கால்கோள்கள் பற்றியதாகவும் கருதலாம். அடுத்து உலகத்தமிழ் செம்மொழி மாநாடு என்ற பதத்தினையும் இலங்கைத்தமிழரின் போராடியபின் நடுகல் என குறித்தால் தவறில்லை. இலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களும் தமிழ் பிரமுகர்கள் சிலரது வேடங்களும் போராடிய பின் ஏற்பட்ட நடுகல் என்றால் அதுவும் மிகையில்லை.

தமிழரின் வரலாற்றில் புறநானூற்றில் கூறப்பட்ட போரின் வேதனையை ஈழத் தமிழ் மக்கள் அனுபவத்தினை,

எல்லையுமிரவு மெண்ணா பகைவர்
ஊர் சுடு விளக்கத் தழு விளிக்கம்பலைக்
கொள்ளை மேவலையாகலின்"

எனவும்

"விளைவயல் கவர் பூட்டி
மனை மரம் விறகாகக்
கடிதுறை நீர்க் களிறு படீஇ
எல்லுப்படவிட்ட சுடு தீ விளக்கம்
செல் சுடர் ஞாயிற்றுச் செக்கரில் தோன்ற
புலங்கொட விளங்கும் வரம்பில் தானை"

எனவும்,

"தாயி றூவாக் குழவி போல
ஏவாது கூஉ உநன் னுடற்றியோர் நாடே"

எனவும்

யுத்தத்தின் வேதனையை உணர்த்தின புறநானூற்றுப்பாடல்கள். ஆனால் தமிழகத்துத் தலைவர்களிற்கு அன்றைய புறநானூற்றின் பொருள் இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பத்தால் விளங்கியிருத்தல் வேண்டும். அதனால் தான் அன்றே புதிய புறநானூற்று ஆய்விற்கு செம்மொழி மகாநாடு கூடுவதாயிற்றோ.

"வில் தோன்றி நாண்தொன்றாக் காலத்திற்கு
முன்தோன்றிய மூத்த குடி
குழல் தொன்றி பல்குழல் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்த போதும்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு
முன் தோன்றிய மூத்த குடி
கல்லாகி போனது கண்டு கலங்குவர்
கண்கள் உலகில் உள்ளதோ"

தமது கொள்கைக்கு அப்பால்பட்டவர்களை சதியாக கொல்லும் தன்மைக்கு தமிழினம் அகப்பட்டு விட்டது. "என்னை முன் நில்லன் மின் தெல்விர் பலர் என்னை முன்நின்று கல்நின்றவர்" என்ற திருக்குறளின் மொழிக்கேற்ப பலர் கல்லாகி அதாவது நடுகல்லாகி விட்டனர்.

பதிற்றுப்பத்தில் வரும்:

"துளங்கு நீர் வியலக மாண்டினிது கழிந்து
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே"

என்ற பாடலிற்கு ஏற்ற வரலாற்று நிலையோ என்னும் சர்வதேசத்தின் போர்க் குற்றசாட்டுகளிற்கான மறுப்பு. **1958** இனகலவரம், **1977** இனக்கலவரம், **1983** இனக்கலவரத்திற்கு பின் **2009** ஆண்டு நிகழ்ந்த சம்பவங்கள் இதனை நியாயப்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறு நோக்குகையில் உலக தமிழ் ஆராய்ச்சிக்கான செம்மொழி மகாநாட்டிற்கான தொனிப்பொருளாக,

"தமிழால் தமிழைக் கொல்லாதே
தமிழால் தமிழனைக் கொல்லாதே
தமிழா தமிழைக் கொல்லாதே
தமிழர் தமிழனைக் கொல்லாதே"

எனும் பாடலைக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் போரில் இறந்தவர்களிற்கு நடுகல் இட்டு வணங்கியமை தமிழர் பண்பாகக் காணப்படுகின்றது. இத்தகைய மரபினை தற்போதம் பேணுவது இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலை அளிப்பதுடன் இறந்த ஆத்மாவிற்கும் ஒரு நிம்மதியினைக் கொடுக்கும்.

புறநானூற்றில் நடுகல்லினை மக்கள் எவ்வாறு வணங்கினார்கள் என்பதனை

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லினாட் பலியூட்டி
நன்னீராட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழும்.

அதாவது வீடுகளில் காச்சப்படுகின்ற கள்ளையுடைய சில குடிகள் வாழ்கின்ற சிறிய ஊரின் பக்கத்தில் நடப்பட்ட நடுகல்லிற்கு விடியற்காலத்தில் பலியிட்டு, நன்னீரால் நீராட்டி, நெய் விளக்கேற்றி, அதன் புகைமேகம் போல எழுந்து தெருவில் மணக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெடுங்கல் அகலிடக் குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவரை மஞ்சனீரம் புறம் பொலிய"

என நீண்ட நடுகற்களை நீராட்டி நறுமணமுள்ள மஞ்சள் பூசி வழிபட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே தமிழ் பண்பாடு எமது காலத்திலும் யுத்தத்திடையிலும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும்.

இறப்பிற்கு முன்தான் பகைவராக இருந்து அழிந்தாலும் இறந்த பின்பாவது நட்பினை உருவாக்க முயற்சிகள் எடுத்தால் அது நிச்சயம் நிஜவாழ்விலும் நட்பினையம் சமாதானத்தினையம் சாந்தியினையும் ஏற்படுத்தும்.

யுத்தத்தின் பின்பே பௌத்தசமயம், சமணசமயம், அறநெறியைப்பரப்பியது. அதுபோலவே இலங்கையின் இராணுவத்தளபதியும் யுத்த முடிந்த பின் சீருடையைக்களைந்து சமூகசேவை செய்ய விளைகின்றார்.
இந்நிலையில் நாம்

"என்பே சவம் என்ற போதினிலும்
தென்பே தவம் என்று ஆராதனையில்
அன்பே சிவம் என்று போதனையினை
பண்பே சுபம் எனது வேதனையில் இறைஞ்சுவோம்"
மேலும் அஃதியோ அஃதையோ அருளுவாய்
இஃது இல்லிடம் இனிரேத எஃகிட
எஃது வேலவந்த வீதியில் வலம்வரும்
வெஃகல் காட்சி நலமே நல்லையில்"

என நல்லூர் முருகனை வேண்டுவோம்.
அடுத்து

"வேலில் ஈமிழ் கேடில்
ஊரில் வீடில் நாடில்
வேலில் அருளளில் கோடில்
ஆறில் யாழில் சந்தியில்"
என சந்நிதி முருகனை வேண்டுவோம்.

யுத்தத்திற்கு பின்பான சமூகத்தில் அறநெறியினை நிலைநாட்டுவதில் தெய்வழிபாடு மிகவும் இன்றி அமையாதது. இது சமூக ஒழுக்கத்தினையும் சாந்தியினையும் கொடுக்கும்.

நவீன புறநானூற்றுக்கு பின்பான அறநெறிகளாக இவை அமையும்.

"தீ நதிவீரத்தில் மீ உயர் துயரத்தில் எம்மினம்
தீயவர் வைத்திடும் புயலினில் வேகுதே எம்மினம்
வாழ்வு இழப்பு ஆயிரம் ஆயிரம்
வாழ்விட இழப்பு ஆயிரம் ஆயிரம்"
"உதிரம் உதிரமாய்த் தமிழ் உயிர் பாயுதே
வேய்ங்குழல் கேட்டிடும் மழலைகள் கேட்கும் குழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேய்ந்திடும் நிலவு போல் ஏங்கிடும் மீட்சியே வீதியில் வந்து
மாட்சி பெறக் காட்சி தா காமாட்சி"

என அம்மனை வேண்டிப் பாடும் போது ஏற்படும் துன்பம் இறைவனால் போக்கப்படும்.

மேலும்

தேரோடும் வீதியல் தேரோட்டம் இல்லை ஏரோடும் பூமியில்
வேரோட்டமில்லை கார்மேகம் கண்டாடும் மயிலுடையோன் போர்
மேகம் கண்டலடலல் உறும்.

"தமிழர் துயர் துடைக்க வா முருகா" இறைவனை வேண்டுவதால் எமது ஏமாற்றம் குறைக்கப்படும். அடுத்து

"மடம் கொண்டு அமுதலிக்கும் மணித்தீவில்
வடம் கொண்டு வலம்புரியும் வலம்புரியேவிடம் கொண்ட
சர்ப்பம்தனைத் தன் மேல் கொண்ட நாயகியே நாகபூசணியே
இடமின்றி அலையும் இடரினைக் களை"

என அம்மனை வேண்டுவதாக நவீன புற போர் பின்பான அறநெறி வளரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## இன நல்லினக்கத்திற்குரிய அரசியலமைப்பு

எந்த ஒரு நாட்டிலும் அரசியலமைப்பானது அதன் சிறுபான்மை குடிகளுக்கு உரிய உரிமைகளை அளிக்காத விடத்து சிறுபான்மை மக்களது உரிமைப்போராட்டங்கள் ஏற்படவது தவிர்க்க முடியாது. இதனை நாம் இலங்கை காஸ்மீர், திபெத்து, பாக்கிஸ்தான், எரித்திரியா, யூகோசிலாலியா போன்ற நாடுகளில் அண்மை காலத்திலும் ஐக்கிய அமெரிக்காவில் மாட்டின் லூதர்கிங் காலத்திலும் கண்ணுற்றுள்ளோம்.

அரசியல் உரிமைக்கான போராட்டங்கள் கருத்து வெளிப்பாடு, அகிம்சை போராட்டங்கள், சிறிய அளவிலான வன்முறைகள் பாரிய அளவிலான வன்முறைகள் பயங்கரவாத நடவடிக்கைகள் என பல்வேறு விதமாக உருமாற்றம் பெறும் இத்தகைய போராட்ட உருமாற்றங்கள் ஒரு நாட்டில் ஒரே தடவையில் நிகழலாம். அன்றேல் போராட்டங்கள் வேறாக அமையலாம்.

இதனை கணிதவடிவில் மாதிரிக் கற்கையால் எதிர்வு கூறலாம். இவற்றினை கணணித் தொழில் நுட்பத்தின் உதவியுடன் எதிர்காலத்தில் எவ்வாறு மக்களுக்கு சமூக்கதிற்கும் அழிவு ஏற்படாது பாதுகாக்கலாம் என எடுத்து கூறலாம். இது இன்றைய தொழில் நுட்ப விருத்தியில் மிகவும் இன்றி அமையாதது. தோழில் நுட்பத்தின் உதவியின் பெரும்பாலான முதலீட்டின் அளவும் அரசியலில் சிறுபான்மையினது உரிமைகள் பற்றி அதிக கவனம் செலுத்தாது சில சலுகைகளுக்காக கையேந்தும் நிலையினை ஏற்படுத்தி உள்ளது. இது இலங்கையின் அரசியலிலும் தெளிவாகப்புலப்படுகின்றது.

சிறுபான்மை மக்களது உரிமைப்போராட்டமானது கணித வடிவில் பின்வருமாறு எழுதப்படலாம்.

$$L = \cos\theta \; {}^{t2}\!\int_{t1} \frac{di}{dt} \; {}^{t4}\!\int_{t3} \frac{de}{dt} + \lambda$$

இங்கு

L- அரசியரமைப்பு மாற்றத்திற்கு ஏற்ப சிறுபான்மை மக்களது உரிமைப் போராட்ட உருமாற்ற அளவு.

J - மாறிலி

$$\cos\theta = 1-\alpha$$

α- அரசியமைப்பில் சிறுபான்மையினருக்கு எடுக்கப் பட்ட உரிமைகளின் விகிதம்.

- சிறுபான்மையினரது உரிமைப் போராட்டத்தில் உள்நாட்டு காரணிகளின் தாகக்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுபான்மையினரது உரிமைப் போராட்டத்தில் வெளிநாட்டுக்காரணிகளின் தாக்கம்.

$\lambda$ - மாறிலி

மேற்கூறிய கணித மாதிரியினை இலங்கையின் அரசியமைப்பு மாற்றத்திற்கு பிரயோகித்தால் சிறுபான்மைத் தமிழர்களது உரிமைப்போராட்ட மாற்றங்களின் வடிவங்கள் பின்வரும் வரைபினால் அறியலாம்.

$$L = \cos\theta \int_{t1}^{t2} \frac{di}{dt} \int_{t3}^{t4} \frac{de}{dt} + \lambda$$




இக் கணித மாதிரி, இலங்கையில் ஏற்பட்ட அரசியமைப்பு மாற்றங்களிற்கு ஏற்ப தமிழர்களின் உரிமைப்போராட்டம் 7 அவத்தைகளில் நடைபெற்று வந்துள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. **அவத்தை 1** ஆனது 1931ம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியாகும். அதாவது டொனமூர் அரசியலமைப்பில் இருந்து சோல்பரி அரசியலமைப்பு வரையிலான காலப்பகுதி. இங்கு இணக்க அரசியல் காணப்பட்டது. தமிழர்களின் தலைவராக திரு.ஜ.ஜ. பொன்னம்பலம் அவர்கள் செயற்பட்டார். அகில இலங்கைத் தமிழர்க்காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது.

**அவத்தை 2** ஆனது 1948ஆம் ஆண்டு தொடக்கம் 1972ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியாகும். இக் காலப்பகுதியில் இவர்களிற்கு இடையிலான முரண்பாடு அதிகரித்தது. மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. தனிச் சிங்களச்சட்டம் உருவாக்கப்பட்டது. பெரும்பான்மை ஆட்சியாளர் தமது ஆட்சியை நீடிக்கவும் சிறுபான்மை மக்களது சலுகைகளை குறைக்கவும் அரசியலமைப்பில் மாற்றத்தினைச் செய்தனர். இதன்போது தந்தை செல்வா அவர்கள் தமிழர்களின் உரிமைக்காக போராடும் தலைவரானார். தமிழரசுக்கட்சி உருவாக்கம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவத்தை 3** (முதலாவது குடியரசு யாப்பில் இருந்து இரண்டாவது குடியரசு யாப்பு வரை) 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1978ஆம் ஆண்டு வரையானகாலப்பகுதியாகும். பெரும்பான்மையினரின் பலத்தை அதிகரிக்கும் அரசியல் முறைகள் ஏற்பட்டது. தமிழ் மக்களின் அகிம்சை போராட்டத்திற்கு எதிராக வன்முறைகள் தொங்கப்பட்டது. உலக தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டின் போது தமிழ் இளைஞர்கள் தீவிரத்தன்மை பெற்றனர். தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியல் கட்சியாக உருவெடுத்தது. தளபதி அமிர் தமிழர்களின் தலைவரானார்.

**அவத்தை 4** ஆனது 1972ஆம் ஆண்டு தொடக்கம் 1987ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியாகும். அதாவது 2வது குடியரசு யாப்பில் இருந்து 13வது திருத்தச்சட்டம் வரை. இக்காலப்பகுதியில் வன்முறைகள் தீவிரமடைந்தன. 13வது திருத்தச்சட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. தமிழர்களின் உரிமைப் போராட்டம் வெளி உலகிற்கு பயங்கரவாதமாக மாற்றப்பட்டது. எதிர் பயங்கரவாத நடவடிக்கைகளால் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டனர்.

**அவத்தை 5** ஆனது 13வது திருத்தச்சட்டம் தொடக்கம் 17வது திருத்தச்சட்டம் வரையான காலப்பகுதியாகும். பாரிய சமூக அழிவுகள் ஏற்பட்டன. இதனால் சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்தது.

**அவத்தை 6** ஆனது 17வது திருத்தச்சட்டத்தில் இருந்து 2009ஆம் ஆண்டு ரையான காலம். சர்வதேச அழுத்தங்களினால் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால் உள்நாட்டு அழுத்தங்களிற்கு சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழர்களிற்கு உரிய நிவாரணம் அளிக்கப்படவில்லை. மேலும் உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களால் 2006ஆம் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகியது. 2009ஆம் ஆண்டு யுத்தம் முற்றாக நிறைவடைந்தது. ஆனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு போதிய நிவாரணமொ மீள் குடியேற்றமோ முற்றாகச் செய்யப்படவில்லை. மாறாக தமிழ் பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்பும் அத்து மீறிய குடியேற்றங்களும் கலாச்சார வன்பறிப்புகளும் நடைபெறுகின்றது.

எனவே எதிர்பார்க்கப்படும் அரசியலமைப்பு மாற்றத்தில் அதாவது அவத்தை 7இல் இன நல்லிணக்கத்தினை நீடிக்கவும் சமாதானத்தினை ஏற்படுத்தக் கூடியதாகவும் அரசியலமைப்புச் சட்டங்கள் அமைதல் வேண்டும்.

அதாவது a=>0 அவ்வாறு அமையின் இலங்கையில் தமிழர்களின் வாழ்வுரிமை அவர்களது கலாச்சாரம், பாரம்பரிய வாழ்விடம் சார்பாகப் பேணப்படும். இதற்காக தமிழர்கள் அகிம்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் கடினமாக நிற்றல் வேண்டும். பாரதத்தில் நாகாஸ்திரம் ஏவும் போது எவ்வாறு பாண்டவர் அணி ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு நின்றார்களோ அவ்வாறே தமிழர்களும் அகிம்சை வழியில் உறுதியாக நின்று நீடித்த சமாதானத்திற்கு உதவவேண்டும். தமிழர்களுக்கு தரவேண்டிய உரிமைகளை ஆணித்தரமாகக் கூறல் வெண்டும். அரசியலமைப்பில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டல் வேண்டும். தமிழ் பிரதேசத்தில் உள்ள இராணுவ ஆட்சிமுறை அகற்றப்படல் வேண்டும் என வலியுறுத்தல் வேண்டும். மாறாக நிறைவேற்று அதிகாரத்தினை இரு தடவைக்கு மேல் அதிகரிக்க முனைவது தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைக்குரிய தீர்வினை எட்டாத் தூரத்திற்கு தள்ளிவிடும். இதனை உணர்ந்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழினத்திற்கு பாரிய துரோகத்திற்கு துணை போதல் கூடாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் இன நல்லிணக்கத்திற்கு துணைபோதல் வேண்டும். மாறாக பண நல்லிணக்கத்திற்கு துணை போதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## மாசேதுங் இடம் இருந்து தமிழ் அரசியல் கட்சிகள் அறிய வேண்டியவை

*1894ஆம் ஆண்டு சீன, ஜப்பான் யுத்தம் தொடங்கிய போது சீனா துண்டாடப்படப் போகின்றது என்பதனை உணர்ந்தவர்கள் "ஐயோ! சீனா அழியப்போகிறதே" என்ற அபாயச் செய்தியை பரப்பினர்.* அதனைப் பெற்ற மாசேதுங் அவர்களின் அரசியல் வழிகாட்டலே இன்று சினாவை உலகின் ஏகாதிபத்திய முதலாளித்துவ பொதுவுடமை வல்லரசாக்கி உள்ளது. அதே போல் ஒரு நிலையே இன்று வடக்கு கிழக்கில் ஈழத்தமிழர்களில் ஏற்பட்டு உள்ளது. எனவே தமிழ்க்கட்சிகள் மாசேதுங் வழி காட்டலை நோக்கவேண்டும்.

நாம் பொதுமக்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் கட்சி மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இவை இரண்டு ஆதாரக் கோட்பாடுகள், இந்தக் கோட்பாடுகளில் நாம் சந்தெகம் கொண்டால் நம்மால் ஒன்றையுமே சாதிக்க முடியாது.

ஒரு மகத்தான புரட்சி இயக்கத்துக்கு வழி காட்டும் எந்த ஒரு அரசியல் கட்சியும் புரட்சிகரத்தத்துவம், வரலாற்று அறிவு நடைமுறை இயக்கம் பற்றிய ஓர் ஆழ்ந்த விளக்கம் ஆகியவற்றைப் பெற்றிரா விட்டால், அதை வெற்றிக்கு வழி நடத்துவது சாத்தியமாகாது.

சிறந்த ஒரு வாழ்வை உத்தரவாதம் செய்வதும், பொருளா தாரத்திலும், கலாச்சாரத்திலும் பின் தங்கிய நமது நாட்டை வளங் கொழிக்கும், பலமும் உயர்ந்த கலாச்சாரத் தரமும் உடைய ஒரு நாடாக மாற்றுவதும் ஒரு கடினமான கடமையாகும். இந்தக் கடமைக்கு மேலும் திறமையாகத் தோள் கொடுத்து, உன்னத இலட்சியங்களால் உந்தப் பட்டு, சீர்திருத்தங்களை நிறைவேற்றும் திடசித்தமுடைய கட்சிக்கு வெளியேயுள்ள எல்லாருடனும் நன்றாய் வேலை செய்யக்கூடியவர்கள் ஆக வேண்டுமானால், நாம் இன்று மாத்திரமல்ல, எதிர்காலத்திலும் சீர் செய் இயக்கங்களை நடத்த வேண்டும். இடைவிடாது தவறானவை எல்லாவற்றையும் நம்மிடமிருந்து நீக்க வேண்டும். இதனைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் கருதல் வேண்டும்.

கொள்கை என்பது ஒரு புரட்சிகரக் கட்சியின் சகல நடை முறை நடவடிக்கைகளினதும் தொடக்கப்புள்ளி, அது கட்சி நடவடிக்கை களின் வளர்ச்சிப் போக்கிலும், இறுதி விளைவிலும் தன்னைத் தானே வெளிப்படுத்துகிறது. ஒரு புரட்சிகரக் கட்சி எந்த ஒரு நடவடிக்கையை எடுக்கும்போதும், ஒரு கொள்கையை அமுல் நடத்துகின்றது. அது ஒரு குறிப்பிட்ட கொள்கைளை உணர்வுபூர்வமாக நடாத்தாவிட்டால் அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடித்தனமாக அமுல் நடத்துகின்றது. ஒரு கொள்கையை அமுல் நடத்தும் வளர்ச்சிப்போக்கையும், இறுதி விளைவையுமே நாம் அனுபவம் என்று கூறுகிறோம்.

வர்க்கங்கள் போரிடுகின்றன: சில வர்க்கங்கள் வெற்றியடைகின்றன: சில வர்க்கங்கள் ஒழிக்கப்படுகின்றன. இத்தகையது தான் வரலாறு. இத்தகையது தான் ஆயிரமாயிரம் ஆண்டு கால நசாகரீகத்தின் வரலாறு. இந்தக் கண்ணோட்டத்திலிருந்த வரலாற்றை விளக்குவது வரலாற்றியல் பொருள் முதல்வாதம்: இந்தக் கண்ணோட்டத்திற்கு எதிராக நிற்பது வரலாற்றியல் கருத்து முதல் வாதம்.

வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றார். ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

சமுதாய மாற்றங்கள் பிரதானமாகச் சமுதாயத்தில் காணும் அக முரண்பாடுகளின் வளர்ச்சியால் அதாவது, உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்குமடையிலுள்ள முரண்பாடு, வர்க்கங்களுக்கிடையிலுள்ள முரண்பாடு, பழமைக்கும் புதுமைக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியால் ஏற்படுகின்றன. இந்த முரண்பாடுகளின் வளர்ச்சிதான் சமுதாயத்தை முன்னேற்றச் செய்கின்றது. பழைய சமுதாயத்தின் இடத்தில் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றது.

எதிரி தானாகவே அழிய மாட்டான். பிற்போக்கு வாதிகளோ அல்லது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளோ கூட வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்க மாட்டார்கள். இந்த உண்மை தமிழர்களைப் பொறுத்தலரை மிகவும் உண்மையானதாகும்.

அவை உண்மையான பகைவர்களைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறியதேயாகும். புரட்சிகரக்கட்சி என்பது பொதுமக்களின் வழிகாட்டி அது பொது மக்களை தவறான பாதையில் வழிநடத்தினால், புரட்சி என்பது தோல்வி அடையாமல் இருக்க முடியாது. மக்களை நாம் தவறான பாதையில் இட்டுச் செல்லாமல், நமது புரட்சியின் நிச்சய வெற்றியை உத்தரவாதம் செய்ய வேண்டுமானால், நாம் உண்மையான விரோதிகளைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களையும் ஐக்கியப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில், ஒரு தனிநபர், ஒரு அரசியல் கட்சி, ஒரு படை அல்லது ஒரு கல்வி நிலையம் எதிரியால் தாக்கப்படா விட்டால், அது தீயது. ஏனென்றால் அது எதிரியின் மட்டத்துக்கு நாம் தாழ்ந்து விட்டோம் என்று உண்மையில் அர்த்தமாகும் என நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றேன். நாம் எதிரியால் தாக்கப்பட்டால் அது சிறந்தது, காரணம் எதிரிக்கும் நமக்கும் இடையில் நாம் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்துள்ளோம் என்பதை அது நிரூபிக்கின்றது. எதிரி நம்மை பிசாசுபோலத் தாக்கி, நமக்கும் இடையில் நாம் ஒரு தெளிவான எல்லைக்கோட்டை வரைந்திருக்கின்றோம் என்பதை மாத்திரம் அல்ல. நமது வேலையில் பெரும் சாதனைகளை ஈட்டியள்ளோம் என்பததையும் அது காட்டுகின்றது. இது 2009ஆம் ஆண்டில் வன்னியில் தமிழ்மக்களிற்கு ஏற்பட்ட அழிவுகள், தமிழ்மக்களின் எதிரியை வரையறை செய்து உள்ளது.

வறட்டுவாதம், திரிபுவாதம் இரண்டும் மார்சியத்துக்கு விரோதனமானவை. மார்க்சியம் நிச்சயமாக முன்னேறி வளரும். நடைமுறை அனுபவத்தின் வளர்ச்சியுடன் அதுவும் நிச்சயம் வளரும். அது முன்னேறாமல் தேங்கி நிற்க முடியாது. அது முன்னேறாது மாறாத நிலையில் நின்றால் அது உயிரற்றதாகிவிடும். இருந்தும் மார்சியத்தின் அடிப்படைக் கொள்கைகளை அத்துமீறக்கூடாது. ஆத்துமீறினால் தவறுகள் இழைக்கப்படும். ஒரு நிலையியல் கண்ணோட்டத்திலிருந்து மார்சியத்தை அணுகுவதும், அதனை ஏதோ ஒரு விறைப்பான ஒன்றாகக் கருதுவதும் வறட்டுவாதம் ஆகும். மார்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தால், அதன் அனைத்தும் தழுவிய உண்மையை நிராகரித்தால், அது திரிபுவாதம் ஆகும். திரிபுவாதம் என்பது முதலாளித்துவ வர்க்க சித்தாந்தத்தின் ஒரு வடிவம். சோசலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள வேற்றுமை களை, பாட்டாளிவர்க்கச் சர்வதிகாரத்துக்கும், முதலாளித்துவ வர்க்கச் சர்வதிகாரத்துக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளை திரிபுவாதிகள் மறுக்கின்றனர். அவர்கள் வக்கலாத்து வாங்குவது உண்மையில் முதலாளித்துவ மார்க்கத்திற்கன்றி சோசலிய மார்க்கத்திற்கல்ல. இன்றைய நிலைமைகளில் திரிபுவாதம் என்பது வறட்டுவாதத்தைக் காட்டிலும் ஆபத்தானது. இன்று சித்தாந்தத் துறையில் தமது முக்கியமான கடமைகளில் ஒன்று திரிபுவாதத்திற்கு எதிரான விமரி சனத்தை மலரச்செய்வதாகும். இலங்கை அரசில் இடதுசாரிகளாகக் கூறிக்கொள்வோர் திரிபுவாதிகளேயாவார்.

பாரதூரமான பிரச்சினை விவசாயிகளுக்குப் பயிற்றுவிப்ப தாகும். வியாபாரிகளின் பொருளாதாரம் எங்கும் சிதறுண்டு கிடக்கின்றது. சோவியத் ஒன்றியங்களின் அனுபவத்திலிருந்து பார்த்தால், விவசாயத்தைச் சமூகமயமாக்குவதற்கு ஒரு நீண்டகாலமும், அக்கறையுடன் கூடிய உழைப்பும் தேவை. விவசாயத்தை சமுதாய மயமாக்காவிட்டால், முற்றான உறுதிபடுத்தப்பட்ட சோசலிசம் என்பது இருக்க முடியாது. நிலபிரபுத்துவ கால்ததில் சோசலிசம், பொதுவுடமை கொள்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இன்றைய உலகப் பொருளியல் நிலையில் இது சில மட்டத்திற்கு அப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாது ஆகிவிடுகின்றது. அதனாலேயே ரஸ்சியா, சீனா என்பவற்றில் தற்போது பாதி முதலாளித்துவ சர்வதிகாரம் உருவாகி உள்ளது.

கட்சியின் தலைமை தவிர, தீர்மானகரமான இன்னொரு அம்சம் யாதெனில் நமது 10 கோடி தமிழ் மக்கட்தொகை ஆகும். கூடுதலான மக்கள் என்றால், கூடுதலான கருத்துக்கள், கூடுதலான உற்சாகம், கூடுதலான ஆற்றல் என்று பொருள். புரந்துபட்ட மக்கள் இன்றுபோல என்றும் இவ்வளவு உற்சாகமடையவர்களாக, இவ்வளவு எழுச்சியுடையவர்களாக, இவ்வளவு துணிவுடையவர்களாக இருந்ததில்லை.

தமிழகத்தினையும் வடக்குக் கிழக்கினையும் பொறுத்தவரை "வறுமையும், வெறுமையும்" உடையவர்கள். இது ஒரு தீமையான விடயம் போலத் தோன்றலாம். ஆனால் யதார்த்தத்தில் இது நல்லது. வறுமை என்பது மாற்றத்திற்கான ஆசையை, செயலுக்கான ஆசையை, புரட்சிக்கான ஆசையைத் தூண்டுகின்றது. அழுக்குப்படியாத ஒரு வெள்ளைத்தாளில் மிகப் புதிய, மிக அழகான எழுத்துக்களை வரைய முடியும். மிகப் புதிய, மிக அழகான சித்திரங்களைத் தீட்ட முடியும்.

யுத்தம் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நடேடுகள், அரசியல் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்படுகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும், அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதி உயர்ந்த போராட்ட வடிவம், தன்யுயமை முறையும், வர்க்கங்களும் தோன்றியது முதல் யுத்தமும் இருந்து வருகின்றது.

"அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது" இந்த அரசியல் யுத்தத்தின் அரசியலாகவும், யுத்தம் தான் அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. புராதனகாலம் முதல் அரசியல் குணாம்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை.

"ஏகாதிபத்தியம் பயங்கரமானது" என்று நாம் கூறும்போது, அதன் இயல்பு ஒருபோதும் மாறாது. ஏகாதிபத்தியவாதிகள் தமது கசாப்புக்கடைக் கத்திகளைக் கீழே போடமாட்டார்கள். தாம் அழியும் வரை புத்தர்களாக மாறமாட்டார்கள் என்று நாம் கருதுகின்றோம்.

போராட்டம், தோல்வி, மீண்டும் போராட்டம், மீண்டும் தோல்வி, மீண்டும் போராட்டம் நமது வெற்றி வரை இதுதான் மக்களின் தர்க்கம். அவர்களும் இந்தத் தர்க்கத்திற்கு எதிராகச் செல்லாமாட்டார்கள். இது இன்னொரு மார்க்சிய விதி, ருஷிய மக்களின் புரட்சி இந்த விதியைப் பின்பற்றியது. அப்படியே சீன மக்களின் புரட்சியும் இவ்விதியைப் பின்பற்றுகின்றது. இதனைத் தமிழ்மக்களும் பின்பற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வெற்றி பெற்றதன் காரணமாக, ஏகாதிபத்தியங்களும் அவர்களுடைய வேட்டை நாய்களும், பழிவாங்குவதற்குப் போடும் பைத்தியக்காரத்தனமான சூழ்ச்சிகளுக்கு எதிராக நமது விழிப்புணர்வை ஒருபோதும் தளர்த்திவிடக்கூடாது. யார் தமது விழிப்புணர்வைத் தளர்த்துகிறாரோ, அவர் தம்மை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி தம்மை ஒரு செயலற்ற நிலைக்குள் தள்ளிவிடுவார்.

ஏகாதிபத்தியம் நீண்டகாலம் வாழமாட்டாது. காரணம் அது எப்பொழுதும் திமைகளையே செய்கின்றது. சகல நாடுகளிலும் மக்களுக்கு எதிரான பிற்போக்குவாதிகளை எப்பொழுதும் ஊட்டி வளர்த்து வருகின்றது.

எதிரியை எதிர்க்கும் போராட்டத்துக்காக, நாம் ஒரு நீண்டகால கட்டத்தில் பின்வரம் கருத்தை வளர்த்துள்ளோம். யுத்ததந்திரி ரீதியில் நாம் எல்லா எதிரிகளையும் துச்சமாக மதிக்க வேண்டும். போர்தந்திர ரீதியில் நாம் அவர்களைப் பாரதூரமாக எடுக்க வேண்டும். அதன் அர்த்தம் முழுமையாக நோக்கும் போது நாம் எதிரியைத் துச்சமாக மதிக்க வேண்டும். ஆனால் பருண்மையான ஒவ்வொரு பிரச்சினையிலும் நாம் அவனைப் பாரதூரமாக எடுக்க வேண்டும். முழுமையாக நோக்கும்போது நாம் எதிரியைத் துச்சமாக மதிக்காவிட்டால் நாம் சந்தர்ப்பவாத தவறு இழைத்தவர்கள் ஆவோம். மாக்சும் எங்கெல்சும் இரண்டு தனி நபர்களாக இருந்தபோதிலும், உலக முழுவதிலும் இருந்து முதலாளித்துவம் தூக்கி எறியப்படும் என்று அந்தக் காலத்திலேயே பிரகடனம் செய்தார்கள். ஆனால் பருண்மையான பிரச்சினைகளில், ஒவ்வொரு எதிரியையும் பொறுத்த வரையில், நாம் அவர்களைப் பாரதூரமாக எடுக்காவிட்டால், நாம் துணிச்சல்வாதத் தவறுகள் இழைத்தவர்கள் ஆவோம். யுத்தத்தில் சமர்கள் ஒவ்வொன்றாகத்தான் நடத்தப்பட முடியும். ஏதிரிகள் ஒவ்வொருவராகத்தான் ஒழிக்கப்பட முடியும். தோழிற்சாலைகள் ஒவ்வொன்றாகத்தான் கட்டப்பட முடியும். விவசாயிகள் நிலத்தைத் துண்டு துண்டாகத்தான் உழமுடியும். ஒரு சாப்பாட்டைப் பொறுத்தவரையில் கூட இது பொருத்தமாகும். யுத்த தந்திர ரீதியில் நாம் உணவு உண்பதை லேசாக எடுக்கின்றோம். அதைத் தின்று முடிக்க முடியும் என்பதை நாம் அறிவோம். ஆனால் யதார்த்தத்தில் அதை உண்ணும்போது கவளம், கவளமாக உண்கிறோம். ஒரு விருந்து முழுவதையும் ஒரே வாயில் விழுங்கி விடுவது அசர்ததியம். இது பகுதி பகுதியாகத் தீர்வு காண்பது என்றும், இராணுவ விஞ்ஞானத்தில் எதிரிப்படைகளை ஒவ்வொன்றாக ஒழிப்பது என்றும் கூறப்படுகின்றது.

சர்வதேசிய சூழ்நிலை இன்று ஒரு புதிய திருப்புமையத்தை அடைந்துள்ளது என்பது கருத்து. இன்று உலகில் மேல்காற்று, கீழ்காற்று என இரண்டு காற்றுக்கள் வீசுகின்றன. "ஒன்று கீழ்க்காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்காற்றை வெல்ல வேண்டும் அல்லது மேல்காற்று கீழ்காற்றை வெல்ல வேண்டும்" என்பது ஒரு சீனப்பழமொழி. கீழ்க்காற்று மேல்காற்றை வெல்வதுதான் இன்றைய நிலைமையின் குணாம்சம் என நான் கருதுகின்றேன். அதாவது சோசலிச சக்திகள் ஏகாதிபத்திய சக்திகளை வெல்லும் பூரண மேம்பாடுடையவர்களாக மாறிவிட்டன. இதன் உண்மையே ஐ.நா. பாதுகாப்புச்சபையில் தமிழ்மக்களுக்குச் சார்பான நிலை இன்மையே.

நம் மத்தியிலுள்ள பலவீனமான சிந்தனை எல்லாவற்றையும் நாம் நீக்க வேண்டும். எதிரியின் பலத்தை அதிகப்படியாக மதிப்பது, மக்களின் பலத்தைக் குறைத்து மதிப்பது போன்ற கருத்துக்கள் எல்ாம் தவறானவை.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் தமது விடு தலைக்கான தன்னம்பிக்கையை ஏகாதிபத்தினதும், அதன் அடிவருடி களினதும் "விவேக"த்தின் மீது வைக்கக்கூடாது. தமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி, போராட்டத்தில் அழுந்தி நிற்பதன் மூலம்தான் அவர்கள் வெற்றி பெற முடியும்.

"பியானோ வாசிக்க" பழக வேண்டும். பியானோ வாசிக்கும போது பத்து விரல்களும் இயங்குகின்றன. சில விரல்களை மட்டும் அசைத்து, ஏனையவற்றை அசைக்காவிட்டால் பியானோ வாசிக்க முடியாது. ஆனால் பத்து விரல்களையும் ஏககாலத்தில் அழுத்தினாலும் இசை என்பது பிறக்காது. நல்ல இசை பிறக்க வேண்டுமானால் அவை பரஸ்பரம் இயைந்தோடும் இசையாகவும் இயங்க வேண்டும். கட்சிக் கமிட்டி அதன் கேந்திர கடமையை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். அதே வேளையில் அதன் கேந்திர கடமையைச் சுற்றியுளள் இதர துறைகளிலும் வேலை செய்ய வேண்டும். இன்று பல துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதனை இன்றைய தமிழ் இளைஞர்கள் உணரல் வேண்டும்.

அகங்காரத்திற்கு எதிராக விழிப்புடன் இரு. தலைமையிலுள்ள எவரையும் பொறுத்தவரையில், இது கோட்பாடு தழுவிய ஒரு விடயமும், ஐக்கியத்தைப் பேணுவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையும் ஆகும். தமிழ்கட்சிகளின் தலைமைகள் இதனை முக்கியமாகக் கருதல் வேண்டும்.

1. கட்சியின் தலைமை உறுப்புக்கள் சரியான வழிகாட்டுதல் களைக் கொடுத்து, பிரச்சினைகள் தோன்றும்போது அவைகளுக்கான தீர்வுகளைக் கண்டு தம்மை தலைமை மையங்களாக நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்.
2. மேல்மட்ட அமைப்புக்கள் கீழ்மட்ட அமைப்புகளின் நிலைமைகளையும், மக்களின் வாழ்க்கையையும் பற்றி நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதலை அடைவதன் மூலம் சரியான தலைமை அளிப்பதற்கு ஒரு புறநிலை அடிப்படையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. பல்வேறு மட்டங்களிலுள்ள கட்சி அமைப்புக்களும், பிரச்சினைகளைத் தீர்க்கும்போது பெரும்போக்கான முடிவுக்கு வரக்கூடாது. ஒரு முடிவு எடுக்கப்பட்டதும், அது உறுதியாக அமுல் நடத்தப்படவேண்டும்.

4. கட்சியின் மேல்மட்ட அமைப்புக்களுடைய முக்கியமான முடிவுகள் எல்லாம் கீழ்மட்ட அமைப்புக்களுக்கும், கட்சி அணிகளுக்கும் உடனுக்குடன் அறிவிக்கப்படவேண்டும்.

5. கட்சியின் கீழ்மட்ட அமைப்புக்களும், அணிகளும் மேல்மட்ட அமைப்புகளின் கட்டளைகளை முற்றாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு விபரமாக விவாதிப்பதும் அவைகளை அமுல் நடத்தும் முறைகளைத் தீர்மானிப்பதும் வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு இதனைக் கடைப்பிடித்தால் நல்லது.

மக்கள், மக்கள் மட்டுமே, உலக வரலாற்றைப் படைக்கும் உந்துசக்தி ஆவர்.

மக்கள்தான் உண்மையான வீரர்கள், ஆனால் நாம் அடிக்கடி சிறுபிள்ளைத்தனமுடையவர்களாகவும், நகைக்கத்தக்கவர்களாகவும் இருக்கின்றோம். இதை விளங்கிக் கொள்ளாவிட்டால் மிக ஆரம்ப அறிவைக்கூடப் பெறுவது சாத்தியமாகாது.

மக்கள் எல்லையற்ற படைப்பாற்றல் உடையவர்கள். அவர்கள் தம்மை அமைப்புரீதியில் அணிதிரட்டி, தமது ஆற்றலை முற்றாக வெளிப்படுத்தக்கூடிய இடங்களிலும், வேலைப் பிரிவுகளிலும் தமது கவனத்தைக் குவிக்க முடியும். ஊற்பத்தியை ஆழமாகவும், அகலமாகவும் பெருக்க கவனத்தைக் குவிக்க முடியும்.

மக்கள் திரள் வழிபற்றிப் பேசி வந்திருக்கின்றது. புரட்சி என்பது மக்கள் திரளைச் சந்திக்க வேண்டும். அதில் ஒவ்வொருவரும் பங்கு பெற வேண்டும். உத்தரவுகள் பிறப்பிக்கும் ஒரு சிலரை மட்டும் சார்ந்திருப்பதை எதிர்க்க வேண்டும் என்று நாம் எப்பொழுதும் கூறி வந்திருக்கின்றோம். இருந்தும் சிலரின் வேலையில் மக்கள் திரள் வழி இன்னும் முற்றாக அமுல் நடத்தப்படவில்லை. அவர்கள் தனிமையில் ்வேலை செய்யும் ஒரு சில நபர்களை மட்டும் இன்னும் சார்ந்திருக்கின்றனர். இதற்கான ஒரு காரணம் என்னவென்றால், தாம் ஒரு விடயத்தைச் செய்யும்போது, அதைத் தாம் தலைமை தாங்கும் மக்களுக்கு ஒரு போதும் விளக்கிக்கூற விரும்பவில்லை தாம் மலைமை தாங்கும் மக்களின் முன் முயற்சியையும், படைப்பாற்றலையும் எப்படி வெளிப் படுத்த வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. வேலையில் எல்லோரும் கலந்து கொள்வதை அவர்களும் உள்ளூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்றனர். ஆனால் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்று பிறர் அறிவதை அவர்கள் அனுமதிக்கின்றார்களில்லை. விடயம் இப்படி இருக்கும்போது எல்லோரும் இயங்குவர் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? விடயங்களை எப்படி நன்றாகச் செய்ய முடியும்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், உண்மையான அடிப்படையில் மக்கள் திரள் வழியில் சித்தாந்த கல்வியை நடத்த வேண்டும். அதே வழியில் கட்சித் தொண்டர்களிற்கு உருப்படியான பல வேலைமுறைகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

சரியான கடமை, சரியான கொள்கை, சரியான வேலை நடை ஆகியவை ஒரு குறிப்பிட்ட இடத்துப் பொது மக்களின் கோரிக்கைகளுடன் என்பொழுதும் இசைவாக இருக்கும். பொதுமக்களுடன் நமது தொடர்பைப் பலப்படுத்துவதாக இருக்கும். தவறான கொள்கை, தவறான கடமை, தவறான வேலை நடை ஆகியவை குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட இடத்து பொது மக்களின் கோரிக்கைகளுக்கு எப்பொழுதும் பொருந்தாமல் இருப்பதோடு, அவர்களிடமிருந்து தம்மைப் மனிமைப்படுத்தியும் விடும். வறட்டுவாதம், அனுபவவாதம், கட்டளைவாதம், வால்வாதம், குறுங்குழுவாதம், அதிகாரத்துவம், வேலையில் செருக்கு மனோபாவம், ஆகியவை நிச்சயம் ஊறு விளைவிப்பவை: சகிக்க முடியாதவை: இந்த நோய்களால் பாதிக்கப் பட்ட எவரும் அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும். காரணம் மக்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்துகின்றன.

கட்சியின் நடைமுறை வேலை அனைத்திலும் சரியான தலைமை என்பது “மக்களிடமிருந்து மக்களுக்கு” என்றிருப்பது அவசயிம். இதன் பொருள் மக்கள் திரளின், கருத்துக்களை (சிதறுண்டு ஒழுங்கின்றி கிடக்கும் கருத்துக்களை) எடுத்து, அவற்றை (ஆராய்ந்து, செறிந்த, ஒழுங்கான கருத்துக்களாக ஒன்று செறிப்பது, பின்னர் மக்களிடையே சென்று பிரச்சாரம் செய்து, விளக்கி மக்கள் அவற்றைத் தமது கருத்துக்களாக்கி, அவற்றில் உறுதியாக நின்று, அவற்றைச் செயற்படுத்தச் செய்வது, மக்கள் திரளின் நடவடிக்கையில் அக்கருத்துக் களின் சரி, பிழையினைச் சோதிப்பதாகும். பின்னர் மக்கள் திரள்களின் கருத்துக்களை ஒன்று திரட்டி, மீண்டும் மீண்டும் முடிவில்லாத சுருள் வட்டம்போல நடைபெறும் ஒவ்வொரு தடவையும், இக்கருத்துக்கள் மேலும் சரியானவையாக, மேலும் ஜீவ சக்தியுடையவர்களாக, மேலும் செழுமையுடையவையாக வளரும். இதுவே அறிவு பற்றிய மார்க்சிய தத்துவம்.

நாம் மக்களிடையே சென்று அவர்களிடமிருந்து கற்று, அவர்களுடைய அனுபவங்களைத் தொகுத்து, அவற்றைச் சிறந்த ஒழுங்கான கோட்பாடுகளாகவும், வழிமுறைகளாகவும், மக்களிடையே பிரச்சாரம் செய்து, அவற்றைச் செயற்படுத்துமாறு அறைகூவல் விடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இவ்வாறு அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு விடுதலையும் இன்பமும் பெற அவர்களுக்கு உதவ வேண்டும். இடம்பெயர்ந்த மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களில் நாம் இப்பணியினைச் செய்தல் வேண்டும்.

சில இடங்களில் தமது தலைமை நிறுவனங்களிலுள்ள சிலர் கட்சியின் கொள்கைகளைத் தலைவர்கள் மட்டும் அறிந்தால் போதும், மக்கள் திரள் அறிவது அவசியமில்லை என்று எண்ணுகின்றனர். தமது வேலையில் சிலவற்றை நன்றாகச் செய்ய முடியாமல், இருப்பதன் அடிப்படைக் காரணங்களில் இது ஒன்றாகும்.

மாணவர்கள் அறிவுத்தறையினர் மத்தியில் அண்மையில் சித்தாந்த அரசியல் வேலையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டு, சில ஆரோக்கியமற்ற போக்குக்களும் தோன்றியுள்ளன. அரசியல் பற்றியோ அல்லது தாய்நாட்டின் எதிர்காலம் பற்றியோ, மனிதகுலத்தின் இலட்சியங்கள் பற்றியோ அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை என்று சிலர் எண்ணவதுபோல் தோன்றுகின்றது. ஒரு காலத்தில் பொது வேட்கையோடு படித்த மார்க்சியம் இன்று அவ்வளவு தேவையற்றதெனக் கருதுவதுபோல் தோன்றுகிறது. நாம் நமது சித்தாந்த அரசியல் வேலையைப் பலப்படுத்த வேண்டும். மாணவர்களாயினும் சரி, அறிவுத்துறையினராயினும் சரி, விடாமுயற்சியுடன் படிக்க வேண்டும். தங்களுக்கு உரிய சிறப்பான பாடங்களைப் படிக்கும் அதேவேளையில், அவர்கள் சித்தாந்தரீதியிலும், அரசியல் ரீதியிலும் முன்னேற்றம் அடையவேண்டும். அதாவது அவர்கள் மார்க்சியம், நடப்பு விவகாரங்கள், அரசியல் ஆகியவற்றைப் படிக்க வேண்டும். சரியான அரசியல் கண்ணுொட்டம் இல்லாமல் இருப்பது, உயிரில்லா திருப்பதகுச் சமம் எல்லாத் துறைகளும், நிறுவனங்களும் சித்தாந்த, அரசியல் வேலையிலுள்ள தமது பொறுப்புக்களுக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

ஐக்கியப்படு! விழிப்போடிரு! அக்கறையாயிரு! சுறுசுறுப்பாயிரு! ஏன்பது வடக்கு கிழக்கு மக்களுக்கு வலுவூட்டும் செய்தியாகும்.

நாம் மக்களைச் சார்ந்திருக்கும் வரை, மக்களின் வற்றாத படைப்பு ஆற்றலை உறுதியாக நம்பும் வரை, இவ்வாறு அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, நம்மை அவர்களுடன் இணைத்துக்கொள்ளும் வரை, நாம் எந்த இடர்பாடுகளையும் கடந்து செல்ல முடியும். எந்த ஒரு எதிரியும் நம்மை நசுக்க முடியாது: அதே வேளையில் எந்த எதிரியையும் நம்மால் நசுக்க முடியும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

நாம் எங்கிருந்தாலும் சரி, மனித ஆற்றலைஞயும், பொருளாதாரச் செல்வங்களையும் பொன் போலப் பேண வேண்டும். குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்தில், விரயத்திலும் ஆடம்பர செலவிலும் ஈடுபடக் கூடாது. நாம் எங்கிருந்தாலும் சரி, ஒரு புறம் நாம் விரயம் செய்பவர்களாகவும், வீண் செலவு செய்பவர்களாகவும் இருக்கக்கூடாது. மறுபுறம் ஊக்கமாக உற்ப்ததியைப் பெருக்க வேண்டும். முன்பு சில இடங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதற்குக் காரணம் தொலை நோக்குக் கண்ணோட்டமின்றி மனித ஆற்றல், பொருளாதாரச் செல்வா தாரங்கள் இரண்டிலும் சிக்கனத்தையும் உற்பத்திப் பெருக்கத்தையும் அலட்சியம் செய்வதாகும். இந்தப் படிப்பினை நமக்கு இருக்கின்றது. இதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தலைமைப் பதவியில் உள்ள எவரும் கீழ்மட்டத்தில் குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்ட தனி நபர்களிடமிருந்து அல்லது நிகழ்ச்சிகளிலிருந்து உருப்படியான அனுபவத்தை சேர்க்காவிட்டால், அவர் எல்லாப்பி பிரிவுகளுக்கும் பொது வழிகாட்டல் கொடுக்கத் தகுதியற்றவராவர். எல்லா மட்டங்களிலுமுள்ள தலைமை ஊழிளர் களும் இந்த முறையைப் படித்துப் பிரயோகிப்பதற்காக, இதை எல்லா இடங்களிலும் பரப்ப வேண்டும். குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இவற்றைக் கருதின் தமிழ் மக்களின் பலமிக்க அரசியல் சக்தியாகப் பரிணமிக்கும்.

அடுத்து நம்மிடையே உள்ள இன அக முரண்பவடுகளைக் களைய வேண்டும். உண்மையான சோசலிசத்தில் முரண்பாடுகள் இருக்கும். ஆனால் பகை இராது. என்று லெனின் கூறினார். நாம் எவ்வளவு சமத்துவக் கொள்கையை பின்பற்றுகின்றோமோ எம்மிடையே பகைமை ஏற்டாது. சிங்களவருக்கும் தமிழருக்கும் இன முரண்பாட்டிற்கு மேலாக இனப்பகைமையே உருவாகியமைக்கு சமத்துவக் கொள்கை இன்மையே காரணம். ஆனால் தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் சமத்துவக் கொள்கை இன்மையே காரணம். ஆனால் தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் சமத்துவக் கோட்பாட்டினால் தம்மிடையே பகைமையை அகற்றி முரண்பாடுகளை நடைமுறையில் இல்லாது செய்யலாம். குறிப்பாக தமிழ்கட்சிகளில் சில சரணாகதி வாதத்திற்கு சென்றமை தவறானதாகும். அதே போல் சாங்கோதௌ சீன்புரட்சியில் உருவானதுபோல் பல காளான்களும் எம்மிடையே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## ஈழத்தமிழரின் போர்புறநாடுறுஉறு அளவும் போர்புற நானூறு உறு வீதமும்

**கணித மொழியிலான சமூக மருத்துவம்**

இலங்கையின் வடபகுதி தமிழ்மக்கள் அடைந்த போர்த் துன்பங்களை போர்புறநாடுறு அளவு எனும் அளவையில் அறியலாம்.

**போர் புறநாடுறு அளவு**

R - மொத்தப்போருக்குப் பின்பாக நாடுஊறு அடைந்த அளவு.

K - மாறிலி

$\alpha, \beta, \delta, \omega, \gamma$ - மாறிலி

n1 - போர் புறநாடுறு உறுவில் தொலைந்த மக்கள்


n3 - போர் புறநாடுறு உறுவில் காயமடைந்த அல்லது சித்திரவதைக்கு உட்பட்ட மக்கள்

n4 - போர் நாடுறு உறுவில் இடம் பெயர்ந்த மக்கள்.

வட இலங்கையில் கடந்த காலங்களில் மக்களிற்று ஏற்பட்ட புறுநாடுறு உறுவின் அளவுகள்

| ஆண்டு | அளவு |
|---|---|
| *1987* | *10 அலகுகள்* |
| *1988* | *20 அலகுகள்* |
| *1990* | *10 அலகுகள்* |
| *1995* | *20 அலகுகள்* |
| *1996* | *10 அலகுகள்* |
| *2000* | *10 அலகுகள்* |
| *2004 (கடல்கோள்)* | *10 அலகுகள்* |
| *2006-2008* | *30 அலகுகள்* |
| *2009* | *1000 அலகுகள்* |
| *மொத்தம்* | *1120 அலகுகள்* |

*1120* அலகுகள் போர்புறநாடுறு உறு வடபகுதியில் ஏற்பட்டு உள்ளது. இது *112* கடல்கோள் அழிவிற்குச் சமனாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த அனத்தின் தனிப்பட்ட பாதிப்புத் தாக்க வேகத்தினை போர் புறநானூறு உறு வீதம் என வரையறுக்கலாம்.


அதாவது அனர்த்தத்தினால் ஒருவர் தனது சாதாரண வாழ் நிலையில் இருந்து விலகும் வேகம் பாதிப்புத்தாக்க வேகம் என வரையறுக்கப்படகின்றது. இது யுத்த அனர்த்தத்தின்போது ஏற்பட்ட தனிப்பட்ட பாதிப்புக்களாலோ, குடும்பப்பாதிப்புக்களாலோ, சமூகப் பாதிப்புக்களாலோ ஏற்பட்டு இருக்கலாம்.

போர்புறநானூறுஉறு விதம் $F(r) = dx$


$F(r) = F(i) + F(f) + F(s)$

இது பாதிக்கப்படும் ஒருவரின் வயதிற்கு ஏற்ப வேறுபடும். மேலும் ஒருவரில் இப் பாதிப்புத்தாக்க வேகம் அவரின் வயதுடன் அதாவது காலத்துடன் மாறுபடும்.


யுத்த அனர்த்தம் தனிநபரில் ஏற்படுத்திய பாதிப்புப் பாதிக்கப்படும் நபரின் வயதிற்கு ஏற்ப ஏற்படுத்தும் போர்புற நானூறுஉறு வீதம்




யுத்த அனர்த்தம் தனிநபரில் ஏற்படுத்திய பாதிப்புப் பாதிக்கப்படும் நபரின் வயதாதலுடன் ஏற்படுத்தும் போர்புறநானூறுஉறு வீதம்





யுத்த அனர்த்தம் ஏற்படுத்தும் குடும்பப் பாதிப்புக்கள் தனி தனநபரில் அவர்களின் வயதிற்கு ஏற்ப ஏற்படுத்தும் போர்புறநானூறுஉறு வீதம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யுத்த அனர்த்தம் ஏற்படுத்தும் குடும்பப் பாதிப்புக்கள் தனிநபரில் அவர்களின் வயதாதலுடன் ஏற்படுத்தும் போர்புறநானூறுஉறு வீதம்.




யுத்த அனர்த்தம் ஏற்படுத்தும் சமூகப் பாதிப்பு தனிநபரில் அவர்களின் வயதிஉறு வீதம்.




யுத்த அனர்த்தம் ஏற்படுத்தும் சமூகப் பாதிப்பு தனிநபரில் அவர்களின் வயது மாற்றத்துடன் ஏற்படுத்தும் போர்புறநானூறுஉறு வீதம்.




யுத்த அனர்த்தினால் சிறுவர்களிற்கு ஏற்பட்ட பாதிப்பினை அளவிடலும் உதவி நல்கலும்

யுத்த அனர்த்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பருமட்டான உளசமூகத் தாக்க அளவீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| யுத்த அனர்த்தம் ஏற்படுத்திய குடும்பப் பாதிப்பு | புள்ளிகள் |
|---|---|
| 1. தாய், தந்தையை இழத்தல் | 50 |
| 2. தாயை இழத்தல் | 40 |
| 3. தந்தையை இழத்தல் | 30 |
| 4. அங்கவீனம் அடைதல் | 25 |
| 5. சகோதரர்களை இழத்தல் | 20 |
| 6. இடம்பெயர்வு | 05 |

50 புள்ளிகளுக்கு மேல் அனர்த்தப் பாதிப்பினை உடையவர் களிற்குக் குறைந்தது 5 வருடங்களிற்கு சமூக உதவிகள் தேவை. 25 தொடக்கம் 50 வரையிலான அனர்த்தப் பாதிப்புப் புள்ளியை உடையவர்களிற்குக் குறைந்தது 3 வருடங்கள் சமூக உதவிகள் தேவை. 20 -25 வரையிலான அனர்த்தப் பாதிப்பினை உடையவர்களிற்குக் குறைந்தது 2 வருடங்கள் சமூக உதவி தேவை. 5 -20 வரையிலான அனர்த்தப் பாதிப்பினை உடையவர்களிற்கு ஒரு வருடமாவது சமூக உதவிகள் தேவை.

தனி மனிதரில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய யுத்த அனர்த்தம் ஏற்படுத்திய சமூகப் பாதிப்புக்கள்

1. சமூக அங்கத்தவர்களது ஒரு கிராம மக்களது இழப்பு.
2. சமூகக் கட்டமைப்புகளான ஆலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றின் இழப்பு.
3. தொடர்பாடல் இழப்பு.
4. வேலைவாய்ப்பு இழப்பு.
5. பாதுகாப்பு இன்மை.

யுத்த அனர்த்தம் ஏற்படுத்திய தனமனித பாதிப்புக்கள்

1. காயமடைதல் ஃ அங்கவீனமடைதல்
2. அவயங்கள் இழப்பு
3. சித்திரதைக்கு உட்படல்
4. வன்முறைகளிற்கு சாட்சியமாதல்
5. இறப்பிற்கு அண்மையாகச் செல்லல்
6. உடலில் துப்பாக்கிச் சன்னங்கள், எறிகணைத்துகள்கள் காணப் படல்.

போர்புறநானூறு உறுவீதம் ஒருவரில் தாக்கம் ஏற்றட்ட வயதில் தங்கி உள்ளது. ஒருவரின் வயதுடனும் மாறுபடும். மேலும் ஒருவரின் தனிப்பட்ட பாதிப்பு, குடும்பப் பாதிப்பு, சமூகப் பாதிப்பு என்பனவற்றி லும் பாதிக்கப்படும் வயதிற்கு ஏற்பவும் வயதாதலுடனும் மாற்ற டைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும். எனவே இதனை ஆராய்ந்தே நீண்ட நாட்களில் சமூக உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

| அனர்த்தம் ஏற்படுத்திய பாதிப்புப் புள்ளிகள் | சமூக உதவி தேவைப்படும் குறைந்த பட்சகாலம் |
|---|---|
| < 50 | 5 வருடங்கள் |
| 25 – 49வரை | 3 வருடங்கள் |
| 20 - <25வரை | 2 வருடங்கள் |
| 05 - <20வரை | 1 வருடங்கள் |

தனிப்பட்ட பாதிப்புக்களின் தாக்கம் 5 வயதிலும் பதின் வயதிலும் அதிகமாகக் காணப்படும்.

குடும்பப் பாதிப்பின் தாக்கம் 5 வயதில் இருந்து பதின் வயதுவரை அதிகமாகக் காணப்படும்.

சமூகப்பாதிப்பின் தாக்கம் பதின் வயதில் அதிகமாகக் காணப்படும். இவ்வாறு போர்புறநானூறுஉறு வீதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அனுமானித்து சமூக உதவிகளை நல்கல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## முள்ளிவாய்க்கால் நினைவு நாள் கவிதை
## வைகாசி 18

முல்லைக்கொலைகள் - எம்
எல்லை விலைகள்
தொல்லை வலைகள் - இனி
இல்லை மலைகள்

நான் உனக்குப் பயங்கரவாதி
நீ எனக்குப் பயங்கரவாதி என்றில்லா
நாள் உனக்கு வரும் போது
நீ எனக்கு நண்பனாவாய்.

அப்பனைக் கொன்றவன் பயங்கரவாதி
அப்பனைக் கொன்றது பயங்கரவாதம்
அப்பன் கொன்றது பயங்கரவாதம்
உன்னை நீ உணர்ந்தால்
உலகை நீ உணர்வாய்
உலகை நீ உணர்ந்தால்
உவகையினை உவப்பாய்
வன்முறை வேண்டாம் இவ்வையகத்தில்
வன்முறை செய்தோர் வழிவிடுங்கள்

சமாதானமே எமக்கு சிறந்ததானம் - அதற்காக
ஏங்குகின்றோம் நாம் நயவஞ்சகர்களிடம்
சோரம் போய் அரசியலை நடத்துவதை விடுத்து
ஓரம் போய் இருந்திடுங்கள் எமக்காக என்றும்
நம்பிக்கை நமக்குண்டு நாளை நமதே என்றிட
சோர்ந்திடோம் சுறுசுறுப்பாய் மிடுக்கிடுவோம்.

மனிதநேயம் சயனிக்கும்போது
மௌனம் மௌனிக்கவேண்டும் - இதற்கு எம்
கணிதம் கவனிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதம் அவனியில் அணிவகுக்க,
துள்ளித்திரியும் பள்ளிச் சிறார்கள் பச்சிளம் பாலகர்கள்
முள்ளிவாய்க்கால்தனில்
தாயை இழந்து தந்தையை இழந்து
உடன் உறவுகளையே இழந்து
தம்மையே இழந்து
ஆண்டுகள் ஒன்று இரண்டு உனப் பலவாயினும்
தாயில் தூவாக் குழவிபோல்
ஓயாது கூஉம் நம் தமிழ்நாடு
அடுநையாயினும் விடுநையாயினும்
அறனோ மற்று இது சிங்களத்திற்கு
அறமும் மறமும் அகன்றதுவே
உரமான எம்மினத்தின் சீர்வேரினை
கோரமான போர் அழித்ததுவே.
நண்ணார் நாணுவர் நம் அழிப்பை உணரின்
நகுமின் நம்மை வஞ்சிக்கா நாளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## ஐ.நா நிபுணக்குழுவின் அறிக்கை

**1. ஐ. நா நிபுணத்துவக்குழுவின் அறிக்கைக்கு இலங்கையராகிய தமிழ் மக்களது பிரதிபலிப்பு என்ன?**

2009ஆண்டு யுத்த அழிவுகள் தமிழ் சமூகத்தினை பொறுத்தவரை வெள்ளிடைமலை. இது தமிழ் சிங்கள மக்களிற்கு இடையிலான உறவில் மற்றுமொரு தீர்க்கப்படாத விரிசலாகும்.

ஆனால் இவ்வறிக்கையானது இலங்கையின் நீடித்த அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் மிகவும் இன்றியமையாது. நாம் தமிழர், நாம் சிங்களவர் என்ற வேறுபாடு இன்றி ஒன்றுபட்ட இலங்கையர்களாக இவ்வறிக்கையில் உள்ளவற்றினை ஆராய்தல் வேண்டும்.

**2. ஐ. நா அறிக்கை தொடர்பாக, தமிழர்களது கருத்தினை எவ்வாறு அறிதல் வேண்டும்?**

தமிழர் தரப்பினை பொறுத்தவரையில் குறைந்தது 1000 தமிழ் கல்வியியளாளர்களது கருத்தினை இலங்கை வெளிவிவகார அமைச்சர் கேட்டறிதல் வேண்டும். இதில் 200 வைத்தியர்கள், 200 சட்ட அறிஞர்கள், 200 பல்கலைக்கழக ஆசிரியர்கள், 200 பாடசாலை அதிபர்கள், 200 மதத்தலைவர்கள் அடங்கின் சிறப்பானது.

**3. அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டியதை இராஜதந்திரமற்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது நல்லதா?**

வெறுமனே ஆர்ப்பாட்டம் நடத்துவது அறிவியல் பூர்வமானது அல்ல. நடந்தன எல்லாம் நடந்து விட்டன இனி நடப்பவை நல்லதாக அமைய நாம் ஒற்றுமையாக செயல்படல் வேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள் இத்தருணத்தில் சாமர்த்தியமாகச் செயல்பட்டு இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தல் வேண்டும்.

**4. சிங்கள மக்கள் மட்டும் ஏகோபித்த எதிர்ப்பினைக் காட்டுதல் ஜனநாயகமா?**

இலங்கையின் ஜனநாயகம் என்பது 85மூ பெரும்பான்மை மக்களது ஏகபோகம். அதனை பயன்படுத்தி சிறுபான்மை மக்கள் தண்டிக்கப் படல் ஆகாது. 180 இலட்சம் சிங்கள மக்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும் தமிழர்களது உரிமைகள் காக்கப்பட வேண்டும்.

**5. தற்போதைய ஐ. நாவின் நிபுணர் குழு அறிக்கைக்கும், தமிழர்களின் அரசியல் நிலைக்கும் உள்ள தொடர்பு யாது?**

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந் தவர்கள் அனைவரையும் உலகநாடுகள் பயங்கரவாதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதியது. அக்காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் உலக அரங்கில் தமிழர்கள் அடக்கப்பட்டனர். யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இலங்கையில் மனித நேய பணிகள் திருப்பியளிக்காத சூழலில் இன்னமும் தமிழர்கள் உலகில் அகதிகளாக அலைகின்றனர் இந்நிலையில் ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய வெளியுறவு கொள்ளை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சர்வதிகாரிகளிற்கு எதிரான ஆட்சி மாற்றத்திற்கு ஆதரவு அளித்தல் என்பதாகும். இந்நிலையிலேயே ஈழத்தமிழர்களது தற்போதைய அரசியல் சிக்கல் நிலைக்கு ஐ.நா ஊடான பிரதிபலிப்பு ஏற்பட்டு உள்ளது.

**6. ஈழத்தமிழர்கள் தமது உரிமையினைப் பெறுவதில் ஐ. நா நிபுணர் குழுவின் தீர்மானம் எத்தகைய பாத்திரத்தினை வகிக்கின்றது?**

தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்களது உரிமைக்கான போராட்டம் சென்ற ஊடகங்கள் கடந்த காலத்தில் செப்பாக, பித்தளையாக, வெள்ளியாக, இரும்பாக அமைந்தாலும் தற்போது தங்கத்தின் ஊடாகப் பயணிக்கின்றது. எனவே இச்சந்தர்ப்பத்தினை நாம் தவற விட்டால் தமிழர்கள் யாவரும் செவ்வாய்க்கிரகத்தில் தான் குடியேற வேண்டி வரும்.

**7. இலங்கை தொடர்பான ஐ. நா நிபுணர் குழுத்தீர்மானத்தினை உலக நாடுகள் எவ்வாறு எதிர்நோக்கும்?**

மாறிவரும் உலகில் சிறுபான்மை இனங்களை பேணுவதில் ஐக்கிய நாடுகள் சபை அதிக கரிசனை செலுத்துகின்றது. அந்தவகையில் சிறுபான்மை இனங்களை அடக்கும் இந்தியா, சீனா, ரஸ்சியா போன்ற நாடுகள் இலங்கையில் இன நல்லிணக்கமும் சம உரிமை கிடைப்பதனை எதிர்க்க முனையும். ஏனெனில் இலங்கையில் தமிழர்களிற்கு சிங்களவர்களால் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டால் நாளை காஸ்மீர், அசாம், தீபெத் போன்றவற்றிற் கும் அரசியல் உரிமைகள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

**8. இலங்கை யுத்தம் தொடர்பான ஐ. நா நிபுணர் குழுவின் தீர்மானத் திற்கு இந்திய அரசின் நிலைப்பாட்டில் கவனத்தில் கொள்ள வேண்டி யது?**

யுத்தத்தில் இறந்த பொது மக்களில் 20,000இற்கு அதிகமானவர்கள் இந்திய வம்சாவழித்தமிழர்கள் ஆவார்கள். இவர்கள் 1958, 1977, 1986 இனக்கலவரத்திற்கு பின் வன்னிப்பகுதியில் குடியேறியவர்கள். எனவே இந்திய தனது சொந்தப்பிரஜைகளை அல்லது இரத்த உறவுகளை எவ்வாறு கையாளக்கின்றது என்பதனை இந்திய அரசின் செயற்பாடுகள் காட்டும். மேலும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைப்படி புனர்வாழ்வு அளிக்கப்படின் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மீளவும் இங்கு குடியேறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

**9. இலங்கையராக இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு இதனை பயன்படுத்தலாமா?**

இலங்கை ஆசியாவின் ஆச்சரியமாக மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஏனெனில் ஐக்கிய இலங்கையில் ஐ.நாவின் அனுசரணையில் யுத்தத்திற்கு பின்பான புனர்வாழ்வு முன்னெடுக்கப்பட்டால் அது ஏனைய ஆசிய நாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும். இதனையே ஐக்கிய அமெரிக்காவும் எதிர்பார்க்கின்றது.

யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களாகும் நிலையில் துப்பாக்கி முனையில் தொடர்ந்து தமிழ் மக்களை அடக்குதல் கூடாது. இராணுவ அதிகாரிகள் குடியியல் வேலைகளில் ஈடுபடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

பொதுமக்களின் இடங்களில் இருந்தும் பொது இடங்களில் இராணுவம் அகல வேண்டும். மீள் குடியேற்றமும் மனிதநேய புனர்வாழ்வும் அளிக்கப்படல் வேண்டும். இராணுவத்தலையீடு இன்றி.

ஐக்கிய நாடுகளினால் குற்றம் சாட்டப்படல் எவ்வாறு எம்மினத்தின் காவலர்களாக அமையமுடியும் என்ற கேள்வி தமிழ் மக்களில் இயல்பாகவே எழுகின்றது. ஆனால் அதனை மாற்ற வேண்டிய கடமை இலங்கை அரசுக்கு உண்டு. இது வெறுமனே பாமர மக்களின் ஆர்ப்பாட்டங்களால் அல்ல. மாறாக அறிவு ஜீவிகளின் ஆக்கபூர்வ மான கருத்துக்களாலேயே அன்றேல் இனவாதம் மேலிட்ட முடிவுகள் இலங்கை அதிபரை ஆசியாவின் கடாஃபியாக மாற்றிவிடும் என்பதில் ஐயமில்லை.

**10. நவீன விஞ்ஞானத்தொழில் நுட்பத்தினால் யுத்த அழிவுகளை துல்லியமாக ஆவணப்படுத்தக் கூடியதாக இருந்தும் இலங்கை அரசு அதனை எதிர்ப்பது எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களை எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்?**

யுத்தத்தில் சுமார் 2 இலட்சம் வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். சுமார் 2 இலட்சம் வரையிலானவர்கள் அங்கவீனமாகி விட்டனர். இந்த உண்மையினை சிங்கள அரசோ சிங்கள மக்களோ ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் எதிர்காலத்தில் இதே மாதிரியான அழிவுகளை தமிழ் மக்கள் மீளவும் எதிர் கொள்ளலாம். எனவே ஐ.நா அனுசரணையிலான தீர்வு மிகவும் இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## அராஜகதந்திரிகளின் இராஜதந்திரத்தோல்வி

இலங்கையில் நிகழ்ந்த மனிதகுல நிந்திப்பு நிகழ்வுகளின் சிறுபகுதி, இன்று உலகில் விவரணக் காணொளிக் காட்சியாக பலரது நெஞ்சினையும் உறுத்துகின்றது. இது இலங்கை, இந்தியா, ஐ.நா அராஜகதந்திரிகளின் இராஜதந்திரத்தோல்வியினை எடுத்து காட்டு கின்றது. தமிழ் மக்கள் மீது குறித்த சில வாரங்களில் மட்டும் இழைக்கப் பட்ட அநீதிகளை ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கை காட்டமாகக்கூறி, தமிழ்மக்களுக்கு நீதியான தீர்வினை அளித்தல் வேண்டும். என்பதனை விளம்பி நிற்கின்றது. இதற்கும் மேலாக எமது பிரதேசத்தின் கடந்த 60 வருட கால வரலாறும் தற்போதைய அடக்குமுறைத் தன்மையும் தமிழர்கள் தம்மைத்தாமே இரண்டாம்தரப் பிரஜைகளாகத் தரம் தாழ்த்தும் நிலைக்கு தள்ளப்பட்டு, ஆட்சியில் உள்ளவர்களிற்கு சிரம் தாழ்த்திக் கரம் கூப்பும் கையறு நிலையில் தாயகத்தில் வாழத் தலைப்பட்டு விட்டனர்.

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த வடக்குக் கிழக்குப் பகுதியினை இழந்துவிடாது இருப்பதற்காக அரசியல் ரீதியில் பல கோரிக்கைகளைக் காலத்திற்குக்காலம் முன்வைத்துள்ளனர். சுயாட்சி அதிகாரம், மாநில ஆட்சி, தனிநாட்டுக் கோரிக்கை, மாகாணசபை நிர்வாகம், மாவட்ட சபைகள் என ஒரு இனம் தன் வாழ்விடத்தில் தனக்கேயுரிய அரசியல் நிர்வாகத்தை மேற்கொள்ள முனைந்தது. இதற்கு சிங்கள அரசிடம் இருந்துவரும் எதிர்ப்பும், ஆக்கிரமிப்பும் திபெத்து நாட்டினைச் சீனா ஆக்கிரமித்து வைத்துள்ளமைக்கு ஒப்பானது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைக்காகப் போராடிய வர்களில் தற்போது இருவகையான தன்மையும், இருவகையான நோக்கங்களும் காணப்படுகின்றது. ஒன்று உள்நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களிற்காக நிவாரணத்தினைப் பெற்றுக்கெடுத்து ஒடுக்கப்பட்ட சூழலில் ஓரளவு சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க முனைவது. இதில் ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்படவர்களும், அரசின் கைக்கூலி களாச் செயற்படுகின்றவர்களும் அடங்குகின்றனர். சிலர் ஆயுதமுனை யில் அரசியல் செய்கின்றனர். அரச நிர்வாக அதிகாரிகளும், நீதித்துறை யைச் சார்ந்தவர்களும் தமது மனச்சாட்சியில் இருந்து சற்று நகர்ந்தே தமது பணிகளைப் புரிகின்றனர்.

அடுத்து தமிழர்கள் நலனுக்காக புலம்பெயர் தேசங்களில் அமைந்துள்ள நாடுகடந்த அரசாங்கம், சர்வதேச இராஜதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்வுகளை மேற்கொள்கின்றது. இதன் பலன் தாய மக்களிற்கு சர்வதேச அளவில் மனிதநேய ஆதரவினை அடைய உதவியாக அமையும்.

அடுத்து தமிழகத்தில் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றம், உலகின் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் கிடைத்தது. இது பாரத தேசத்தின் சகல மாநிலங்களிலும் அடுத்து வரும் வருடங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தும். இதனால் காங்கிரஸ் கட்சி தனது சுவடு தெரியாது அழிந்துபோகும் நிலை ஏற்படும்.

உண்மையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த அராஜகதந்திரிகளினாலேயே தமிழ் மக்களுக்கு மாபெரும் அழிவு ஏற்பட்டது. இந்நிலையில் 10 கோடி தமிழ் மக்களது பிரதிநிதியாக தமிழக முதல்வர், செல்வி ஜெயலலிதா அம்மா அவர்களது ஈழத்தமிழர் ஆதரவுநிலைய வட இலங்கையில் மீளக்குடியேற்றத்திற்கும் புனர் வாழ்வுக்கும் உறுதுணையாக அமையும்.

இலங்கையில் இன நல்லிணக்கம் ஏற்படுவதற்கு தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளைச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். சிங்கள அரசிடம் இன மேலாதிக்க நிலை இருத்தல்கூடாது. மோழித் திணிப்பு, பிரதேச அதிகரிப்பு என்பவற்றைக் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளக்கூடாது. நடந்த சம்பவங்களிற்கு மன்னிப்புக் கேட்டல் வேண்டும். சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்படவ் வேண்டும்.

வடபகுதிக்கு உரிய அரசியலை, ஆயுதங்களை மதவாச்சிக்கு அப்பால் வைத்துவிட்டு ஜனநாயகரீதியில் நடத்தல் வேண்டும். சிவில் நிர்வாக அதிகாரிகள் இராணுவ அதிகாரிகளாகவோ, இராணுவத்தின் வழிகாட்டலில் நடப்பவர்களகவோ அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## பாரதத்தின் புகையிரதப்பாதை நடவடிக்கை

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசின் கொள்கை தொடர்பாக இந்தியப்பிரதமர், மறுமலர்ச்சி திராவிட கழகத்திற்கு தெளிவாகக் கூறி உள்ளார். இது தொடர்பாக இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு.கிருஸ்ணா அவர்கள் மிகவும் அலட்சியமாக செயற்பட்டதை கேள்விபதில் நேரத்தில் அவதானிக்க முடிந்தது. அவருடன் வினாவிய போது இலங்கையில் புகையிரதப்பாதை நடவடிக்கை வெற்றிகரமாக நடைபெறுவதாகக் கூறினார்.

இலங்கையின் வடபகுதிக்கான புகையிரதப்பாதை செப்பனிட இந்திய மத்திய அரசு உடன்பட்டு உள்ளது. ஆனால் புகையிரதப்பாதை நடைவடிக்கை என்பது சங்கேதமொழி. அதாவது இந்தியப்புலனாய்வு அமைப்பினாலும், இந்திய வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்களினாலும் இலங்கை தொடர்பான இராஜதந்திர நகர்வுக்கு சில திட்டங்கள் அடுத்த 10 ஆண்டுகளிற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. அதில் இலங்கையில் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையே இன நல்லிணக்கத்திற்கான தற்போதைய இடைவெளி குறையாத வகையில் இந்தியத்தலையீடுகள் அங்கு தொடர்ந்து இருக்கும்.

தமிழ் மக்கள் தொடர்பாக, தமிழக அழுத்தத்தினை சமாளிப்பதற்காக இலங்கை அரசிற்கு அரசியல் தீர்வு காணுமாறு காலத்திற்கு காலம் வற்புறுத்தல்களை இந்திய அரசு வலியுறுத்தும். அடுத்து தமிழ் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை இலங்கை அரசின் ஊடாக நிகழ்த்தும் மறுதலையாக இலங்கையின் சீன, பாகிஸ்தான் ஆதிக்கத்தினை குறைப்பதற்கு பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள், இராணுவ ஒத்துழைப்பு ஒத்திகைகளை நடத்தும். அடுத்து உலக ஒழுங்கில் நிகழும் மாற்றங்களாக அமெரிக்க அரசினால் கையாளப்படும் மனித உரிமை ஆயுதம் இலங்கை மீது தாக்காது இருப்பதற்கான கவசத்தினையும் இந்தியா இலங்கைக்கு வழங்கும். இதன் மூலம் இலங்கையுடனான வெளியுறவை இறுக்கி வைக்க முனையும்.

பாகிஸ்தான் அல்லது இஸ்லாமிய தீவிரவாதிகளின் மையமாக இலங்கை உருவாவதை தடுப்பதற்காக இலங்கை இஸ்லாமியக்கட்சிகளிலும் தனது செல்வாக்கினைச்செலுத்தும். அடுத்து தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாகக் கையாள இந்தியா விரும்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரதப்பாதையில் தண்டவாளங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று சேராமல் குறித்த இடைவெளியில் சமாந்திரமாகச் செல்கின்றதோ அவ்வாறே பாரதத்தின் இலங்கை தொடர்பான அணுகுமுறையும் அமைகின்றது.

இந்நிலையில் சிறுபான்மைத்தமிழினம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். இனநல்லினக்கத்தினை அடையமுடியாது சமாந்தர அணுகுமுறையில் இருந்து விலகமுடியாதவாறு தொடர்ந்து இன அழிவினை பொருளாதார, கலாச்சார பாரம்பரிய ரீதியாக எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

தமிழர்களிற்கு என ஒரு அரசியல் மையம் இலங்கையில் உருவாகுவதனை இந்தியா விரும்பவில்லை. அவ்வாறு உருவாகின் இந்து சமுத்திரத்தின் வலுச்சமநிலையினை தான் இழக்க நேரிடும் என அஞ்சுகின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியப்பாதுகாப்பு, மூலவளங்களை கையகப்படுத்தல் என்பன மூலம் உலக வல்லரசாகும் எண்ணம் இந்தியாவிற்கு உள்ளது இதனை தமிழ் மக்கள் எதிர்கொள்ளவே அமெரிக்க அரசு நாடு கடந்த தமிழீழ இராஜதந்திரத்தினை நகர்த்து கின்றது.

தமிழ்மக்களைப்பொறுத்த வரையில் தற்போது இலங்கை, இந்திய, சீனா, அமெரிக்கா போன்ற இராஜதந்திரபொறிக்குள் அகப்பட்ட நிலையில் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் மிகவும் சாமர்த்திய மான செயல்திட்டங்கள் மூலமும் வன்முறைகளை விலத்துவதன் மூலமும் "பூமறங்" போல் எறிந்த விடத்தே மீளும் உபாயத்தை ஏற்படுத்தல் வேண்டும். இனப்பேரிடர் ஏற்பட்டு 3 (2009, 2010, 2011) வருடங்கள் கடக்கும் நிலையில் ஐ.நா கூட்டத்தொடரிலோ மனித உரிமைகள் அமைப்பினாலோ அழுத்தமான முடிவுகள் ஏற்படவில்லை. இந்நிலையில் எமது வைரிகள் யாவர் என்ற கேள்விக்கு முதலாவதாக சில தமிழ் அரசியல் பிழைப்பாளர்களும் இந்திய மத்திய அரசம், சர்வதேசமும் ஒரு வகையில் சிங்களத்துடன் கைகோர்த்த படியே யுத்த அழிவு சார்பாக செய்வடு, மறைவடு, திரிபுவடு என்பனவற்றை நிகழ்த்தி வருகின்றன.

மாறிய பொருளாதார ஒழுங்கில் பொருளாதாரத் தழும்பல் உள்ள நிலையில் பொருளாதாரத்தடை இலகுவில் ஏற்படுத்த முடியாது. ஆனால் தனிமனித நீதி, சமூக, நீதி என்பனவற்றிற்கு ஒருங்கமைந்த விடை பகிரப்படல் வேண்டும்.

மாறாக அநீதியினால் விறைப்படையும் இனம் தன்னிருப்பை நிலை நிறுத்த தனக்கு என நீதியை உருவாக்கத் துடிக்கப்போவதனை எவராலும் தடுத்து விட முடியாது என்பதற்கு எதிர்காலம் தனது பதிலை வைத்துக்கொண்டுதான் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## யாழ் குடாநாட்டில் உள்ள மக்களது வாழ்வாதாரம், கல்வி, மற்றும் சூழல் என்பவற்றினைப் பாதுகாத்தல், சமூக ஆர்வலர்களிற்கான நோக்கு

யாழ். குடாநாட்டு மக்களின் மொழி, இலக்கியம், பண்பாடு என்பன உலகில் முதன்மையான தொன்மையான கலாச்சாரத்தின் வெளிப்பாடு ஆகும். இதனைப் பாதுகாப்பது யாழ்ப்பாண மக்களது கடமையாகும்.

யாழ். மக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாப்பது என்பது யாழ்பாணத்தின் சனத்தொகைப் பரம்பலின் உண்மையான அளவு தற்போது எவ்வளவு என்பதிலும் அதில் இல்லாதுபோன சனத்தொகையையும் அளவையும் கொண்டு ஆராய்தல் வேண்டும். 1981ம் ஆண்டு சனத்தொகைக்கணக்கெடுப்பின் படி 2009ஆண்டில் புலம்பெயர்ந்த மக்கள் தவிர்த்து 12இலட்சம் மக்கள் வாழ வேண்டும். ஆனால் தற்போது 6 இலட்சம் மக்களே வாழ்கின்றமை அதாவது சமூகத்தில் 50ஃ வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதனை நிரவ ஒரு குடும்பத்திற்கு குறைந்தது 4 பிள்ளைகளும் 20 வயதிற்கு மேல் திருமணமும் ஊக்குவிக்கபடல் வேண்டும். யுத்த அழிவுகளைச் சந்திக்க சமூகத்தில் அதனை மீள எழுப்ப இத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்படுவது வழக்கம். குறிப்பாக உலகில் அழிந்த யூத இனம், தனது இனத்தின் அளவைக்க கூட்டுவதில் கூடிய கரிசனை உள்ளது. அதேபோல் அராபிய மக்களும் தமது வளத்தினை பெருக்கும் நடவடிக்கையில் பின்னிற்பதில்லை. ஆனால் தமிழ் மக்கள் தமது சேமிப்பாக பிள்ளைகளைக் கருதாது பணத்தினையும் நகையினையும் காணிகளையும் கருதி வந்தனர். ஆனால் இன்றைய காலத்தின் முதலீடு, அதிக குழந்தைகளை பெற்று ஆராக்கியமாக வளர்த்தலே ஆகும். எமது பாட்டிமார் எவ்வித மருத்துவ வசதிகளும் அற்ற 50 ஆண்டுகளிற்கு முற்பட்ட காலத்தில் 10 இற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்று ஆராக்கியமாக 100 ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.

அடுத்து வன்னியில் முகாம்களில் உள்ள எமது உறவுகளையும் யாழ்ப்பாணத்தில் குடியேற்றி மனித நேயமேம்பாடு அளித்து, மாணவர்களிற்கு சிறந்த கல்வி அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. யாழ்ப்பாணத்தின் பெருமை மிக்க கல்லூரிகளாக மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி, சோமஸ்கந்தா, காரைநகர் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி போன்றவற்றில் இடம்பெயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை இணைத்து சிறந்த கல்வி ஊட்ட வேண்டியது கடமையாகும்.

அடுத்து வன்னி முகாம்களில் இருந்து வரும் மக்கள் பாரிய உளதாக்கத்திற்கு உட்பட்டு உள்ளார். அவர்களை வீடுகளிற்கு விடுவித்தாலும் அவர்கள் ஒரு சிறிய வட்டத்தில் சுற்றி நிற்கின்றனர். அவர்கள் ஓர் உளவியல் ரீதியாக முள் கம்பிக்குள் தான் உள்ளனர். இதனையும் அகற்றுதல் வேண்டும். அடுத்து அங்க வீனமுற்றவர்களுக்கு அவயங்கள் பொருத்துதல், மீளவும் செயற்பட வைத்தல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும். இதனை அரசாங்கமோ தனி ஒரு நிறுவனமோ தனித்து நின்று செய்ய முடியாது. பல்வேறு சமூக அமைப்புக்கள் சிறு சிறு பணி செய்தாலே சுமார் 20,000 மேற்பட்ட அங்கவீனர்களிற்கு நீண்ட புனர்வாழ்வு அளித்திடலாம். இதற்கு ஆலய நிர்வாகங்கள், சனசமூக நிலையங்கள் உதவ முன்வரவேண்டும்.

உண்மையான இறைவன் ஏழைகளிலும் பாதிக்கப்பட்டவர் களிலும் தான் உள்ளனர். அவர்களிற்காக நாம் சேவை செய்தலே இறைவனுக்குச் செய்யும் தொண்டாக அமையும். மூாறாக குளக்கரையில் இருந்து பௌர்ணமி தினத்தில் பத்திரிகைகளுக்கு புகைப்படப் பொருளாவது சமூகத்திற்கு நல்லதல்ல. மழைகாலத்தில் முகாம்மக்கள் நெருக்கடியினை சந்தித்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள் தான் கைகொடுக்க வேண்டும்.

இழவு என்பது எத்தகையது, மரணத்தினை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கு சமூகப் பெரியார்கள் அரசாங்கஅதிகாரி களுக்கு விளக்கப்படுத்த வேண்டும். 30 வருட யுத்தத்தில் சுமார் 2 இலட்சம் தமிழ்மக்கள் அழிந்த நிலையில் உண்மையான சமாதானம் நிலைநாட்ட இறந்தவர்களை கௌரவப்படுத்தி அதன் மூலம் அவர்களின் உறவினர்களுக்கு சாந்தி ஏற்பட ஒரு நாளினை இலங்கை அரசு தேசிய விடதலை தினமாக அறிவிக்க வேண்டும். இதன் மூலம் தமிழ்மக்கள் மனதிற்குள் பிளவுபட்டு இராது வெளிப்படையாகவே தமது கவலைகளை வெளிப்படுத்தி ஆறுதல் அடைவார்கள். இதனை மனித நேயம், ஆத்மீகம், மறுவாழ்வு என்பவற்றின் அடிப்படையில் நோக்க வேண்டும். அரசியல் ரீதியாகவோ இன் ரீதியாகவோ, நோக்கக் கூடாது.

யாழ்ப்பாணத்தின் வாழ்வாதாரத்தில் உலக அரசியல் மாற்றமும் இந்திய சீனா என்பவற்கு இடையிலான போட்டியும் நேரடிப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இலங்கை அரசிற்கு இவை இராஜதந்திர ஆதரவு, பொருளாதார ஆரதவு, தொழில்நுட்ப ஆதரவு, இராணுவ ஆதரவு, பொருளாதார ஆதரவு, தொழில்நுட்ப ஆதரவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஆதரவு என பல்வேறு வழிகளில் தமது பாதங்களைப் பரப்ப முனைந்து நிற்கின்றன. இவற்றிற்கு மேலதிகமாக தென்கிழக்காசிய பௌத்த நாடுகளும் தமது பங்களிப்பினை நல்கிவருகின்றன.

எனவே யுத்த காலத்தில் இவர்களின் ஆதவரு பாரிய மனித அழிவுகளுக்கும் மனித நேயச சீர்த்திட மிடமின்மைக்கும் காரணமானது. ஆனால் யுத்தத்திற்கு பின்பான சூழலில் இவை சூழல் மாசடைதலுக்கும் பூமி வெப்பமடைதலுக்கும் காரணமாக அமைகின்றது.

சீன அரசின் உதவியுடன் யாழ்ப்பாணத்தின் வீதிகள் யுத்தகால அடிப்படையில் அகலமாக்கப்பட்டு, வருகின்றன. இவை இந்தியக் கரையோரத்தினை இலக்குவைப்பனவாகவே உள்ளன. ஒரு சமூகத்தின் மனிதநேயப் பிரச்சினை தீர்க்கப்படாமல் அபிவிருத்தித்திட்டம் என்பது தவறானது. உதாரணத்திற்கு இலங்கையில் அபிவிருத்தித்திட்டம் என்ற பெயரில் கல்லோயாதிட்டம் முதல் மகாவலித்திட்டம் வரை குடியேற்றப்பட்ட மக்களில் நிகழும் தற்கொலைகளின் வீதம் இலங்கை யின் தற்கொலை செய்யவோரில் அதிகமான வீதமாக உள்ளமை எடுத்துக்காட்டாக அமைகிறது.

எனவே யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி என்று தற்போது நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் சீன இந்திய அரசுகளின் தண்போர் நிலையே. அதனாலேயே இந்திய நிறுவனம் காங்கேசன்துறை சீமேந்து ஆலையினை தொழிற்பட முயற்சிக்கின்றது.

காங்கேசன்துறை சீமேந்து ஆலை தொழிற்பட்டால் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை கடல் நீர் ஆக்கிரமித்து விடுவதோடு, நிலக்கீழ் நீரும் உவராக மாறிவிடும். மேலும் வலிகாமப்பிரதேசம் சூழல் மாசுபட்டதேசமாக உருமாறிவிடும். சீமேந்துச் தொழிற்சாலையை வைத்து வேலைவாய்ப்பை கொடுக்கலாம் என வாதிடுவோர், காங்கேசன்துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்பிடித்தொழிலை விருத்தி செய்து, கடல்சார் உற்பத்தியினை விருத்தி செய்வதன் மூலம் மக்களிற்கு வேலைவாய்ப்பினை கொடுக்கலாம். சமூகத்திற்கு போசாக்காகவும் அமையும்.

எனவே அரசயல்வாதிகளும் அரசியல் வாதிகளுடன் இணைந்து செயற்படும் சமூகப் பெரியவர்களும், சமய ஆசிர்வதிப்பவர்களும் யாழ். மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பில் தீர்மானம் எடுப்பதில் முக்கிய சக்தியாக விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே அவர்கள் இவற்றினைக் கருத்தில் எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதில் தனிமனிதரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. போலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும். பனை ஓலை, வாழை மடல், தாமரை இலை என்பவற்றின் பாவனை ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

நிலக்கீழ் நீர் சேமிப்பில் ஒவ்வொரு குடும்பமும் ஈடுபடல் வேண்டும். மூடப்பட்ட 10x10x10 அடி குழியில் மழை நீரை ஓட விடாது சேமித்தால் யாழ்ப்பாபணத்தில் ஏற்படக்கூடிய நிலநீர் உவராதல், வரட்சி என்பவற்றை எதிர்கொள்ளலாம். மூாறாக விரைந்தோடும் கால்வாய்கள் அமைத்து கடலிற்குள் விட்டால் நமது பிரதேசம் பாலைவனமாக மாறிவிடும். சூழலிற்கு குளிர்ச்சியை தரக்கூடிய வித்தில் தாவரங்களை நடலையும் ஊக்கவித்தல் வேண்டும். விவசாயம் செய்யக்கூடிய நிலங்களில் கட்டடங்கள் கட்டுவதையோ, கைத்தொழில் நிறுவதையோ தவிர்க்க வேண்டும். சூழலுக்கு நட்பான முறையில் கட்டடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## கல்வி மேன்மை அடைய

எமது இளம் சமூகத்திற்கான சமூக பொறியிலமைப்பினை நெறிப்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்க லாம். இதற்குச் சமூக மட்டத்தில் உதவக்கூடிய அமைப்புக்கள்.

- கிராம நற்பணி மன்றங்கள்
- ஆலயங்கள்
- திருப்பணிச்சபை
- குருக்கள்/மதத்தலைவர்கள்
- தொண்டு நிறுவனங்கள்
- பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி
- பாடசாலை மருத்துவர்
- பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
- சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்
- சமூக சேவை உத்தியோகத்தர்
- கிராம சேவகர்
- சமுர்த்தி உத்தியோகத்தர்
- பிரதேச செயலர்
- பிரதேசசபை/உள்ளூராட்சி சபைகள்

மாணவர்களிற்கு கல்வியினை அளிக்கும் அமைப்புக்கள்.
முன்பள்ளி
மாலை நேரக் கல்விக்கூடம்
அறநெறிக் கல்விக்கூடம்
பாடசாலை

இவை ஒவ்வொரு கிராமத்திலும் சிறப்பாக இயங்கல் வேண்டும்.

மாணவர்களின் கல்வியில் உதவ வேண்டியவர்கள்

- பெற்றோர்
- பாதுகாவலர்
- உறவினர்
- சமூக ஆர்வலர்


**எமது இளம் சமூகத்திற்கான சமூக பொறியிலமைப்பினை (Social Engineering System) எவ்வாறு நெறிப்படுத்துவது?**

பிள்ளைகள் கல்வி கற்கவில்லை. கலாச்சார சீரழிவுக்கு உட்படுகின்றனர். வன்முறைகளில் நாட்டம் கொள்கின்றனர். மதுபானம், புகைத்தலிற்கு அடிமையாகின்றனர். இளவயதுத்திருணம், பாலியல் துஸ்பிரயோகம் என்பன நாம் எமது அன்றாட செய்திகளாக காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவர்களின் கல்வியை நெறிப்படுத்தும் சமூக பொறியியல் வலையமைப்பு – மாதிரி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய யுத்த அழிவுகளைச்சந்தித்த சமூகத்தில் அதன் மீள் உயர்ப்பிற்கு இவை பெரும் சவால்களே ஆகும். ஆனால் நாம் எமது சமூகத்தாரின் பொறியிலமைப்பை சிறப்பாக நெறிப்படுத்துவதன் மூலம் இவற்றின் தாக்கத்தினை குறைக்கலாம்.

சமூக இயக்கம் என்பது மின்சுற்றுப் போன்றது. இதிற் பல சமூகக்கட்டமைப்புக்கள் இயக்க சக்தியினை அளிக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வாறான கட்டமைப்புக்களை நாம் உருவாக்கல் வேண்டும்.

எமது சமூகத்தின் நிர்வாகக்கட்டமைப்புகளை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தி, ஒவ்வொருவரும் எதிர்காலச் சந்ததிக்காக தமது கடமைகளைச் செய்யும் போது பாரிய சமூகப்பிறழ்வுகள் தடுக்கப்படுவதுடன் சீரிய சமூகமும் உருவாக்கப்படும்.

**சிறுவர்களின் சமூக உளத்தேவையின் அளவு (பரப்பளவால்) தரப்படுகின்றது**




கல்வியினை இடையில் கைவிட்டோருக்கு தேவைப்படும் உதவிகள் பலவாக இருக்கும்.

பத்தாயிரம் ஆண்டின் இரண்டாவது தசாப்தத்தினை தமிழ் மக்கள் கல்விப்புரட்சிக்கான தசாப்தமாக மாற்றல் வேண்டும். 2010 ஆண்டளவில் எமது குழந்தைகளில் இருந்து இருவரை சுவாமி விவேகானந்தர் போலவும், இருவரைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் போலவும், இருவரை தத்துவமேதை இராதாகிருஸ்ணன் போலவும், இருவரை அறிஞர் அண்ணாத்துரை போலவும், இருவரை அறிவியல் மேதை அப்துல்கலாம் போலவும் நாம் உருவாக்க வேண்டும். இதற்கு கல்விக்கான ஆரோக்கியத்தினை நாம் வழங்கவேண்டும். ஆரோக்கியமான கற்பித்தலை நாம் மேற்கொள்ள வேண்டும். இதனால் ஆரோக்கியமான சமூகம் தானாகவே உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## போருக்குப் பிந்தைய சூழலில் ஈழத்தமிழர்கள் (ஜீலை, 2011 கள நிலவரம்)

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசு தொடுத்த கொடூரமான போர் முடிவுக்கு வந்து (மே 2009) இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இலங்கையின் வடக்குக் பகுதியில் முழுமையான அமைதி திரும்பிவிட்டதாகவும், அங்கு வசிக்கும் தமிழர்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதாகவும், போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தேவையான நிவாரண மறுவாழ்வுப் பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாகவும் இலங்கை அரசு தொடர்ந்து ஊடகங்களில் பிரச்சாரம் செய்து வருகிறது. இந்நிலையில் போரில் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளுக்கு நேரில் சென்று உண்மை நிலரத்தைத் தெரிந்து கொள்ளவும், இன்றைய சூழலில் ஈழத்தமிழ் மக்களின் நாழ்நிலையைக் கண்டறிந்து, உண்மை நிலவரத்தை வெளிக்கொண்டு வரவும், போரில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குத் தேவைப்படும் மறுவாழ்வுப் பணிகள் மற்றும் அவர்களுக்கான அரசியல் தீர்வுகள் தொடர்பில் தமிழக அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டியவை குறித்து சில பயனுள்ள பரிந்துரைகளை முன்வைக்கவும், கடந்த ஜீலை

நேரில் சென்று பார்வையிட்ட இடங்கள்

1. விடத்தல்தீவு, மடுமாதா தேவாலயம், முழங்காவில் (மன்னார் மாவட்டம்)
2. யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி தீவு, மண்கும்பான், சுண்ணாகம் (சபாபதிப்பிள்ளை முகாம்)
3. கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம், உருத்திரபுரம், இரணைமடு, முருகண்டி, பரந்தன், (கிளிநொச்சி மாவட்டம்)
4. முரசுமோட்டை, தர்மபுரம், விசுவமடு, (மாணிக்கபுரம்), மூங்கிலாறு, உடையார்கட்டு, தேவிபுரம், வள்ளிப்புணம், புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு மாவட்டம்)
5. மாங்குளம், ஒமந்தை (வவுனியா மாவட்டம்)

அ. கள ஆய்வில் கண்டறிந்தவை

- தமிழர் பகுதிகள் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும் இலங்கை இராணுவ முகாம்கள்
- போர் முடிவுக்கு வந்து இரண்டாண்டுகளுக்கு மேலாகியும், மன்னார், யாழ்ப்பாபணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளும் சிங்கள இராணு வத்தின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளன. A9 நெடுஞ்சாலையிலும் (ஒமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி யாழ்ப்பாணம் வரை), பிற சாலைகளிலும் (மன்னார் - கிளிநொச்சி சாலை, பரந்தன் - புதுக்குடியிருப்பு யு35 சாலை, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சாலை), சராசரியாக 300 / 400 மீட்டருக்கு ஒரு இராணுவச் சோதனைச் சாவடியும், நான்கைந்து கிலோ மீட்டருக்கு ஒரு இராணுவ முகாமும் அமைக்கப்பட்டு உள்ளது.

- முக்கியமான நகரங்களின் உள்ளே செல்லும் அல்லது உள்ளேயிருந்து வெளியே வரும் அனைத்து வாகனங்களும் இராணுவச் சோதனைச் சாவடிகளில் பதிவு செய்யப்பட வேண்டும். மன்னார், கிளிநொச்சி, ஆனையிரவு, விசுவமடு, ஒமந்தை போன்ற நகரங்களில் நுழையும் / வெளியேறும் இடங்களில் காலையில் தடுப்புகள் அமைக்கப்பட்டு, உள்ளே நுழையும் வாகனங்களின் எண்கள் பதிவு செய்யப்பட்டு, செல்லுமிடம் மற்றும் என்ன நோக்கத்திற்காக செல்கிறது என்பதும் பதியப்பெற்று, ஒட்டுநரின் கையெழுத்து பெறப்பட்ட பின்னரே வண்டிகள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றன அல்லது வெளியே விடப்படுகின்றன.
- இலங்கையின் வட பகுதியில் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் இராணவத்தினரின் கடுமையான நேரடிக் கண்காணிப்பில் உள்ளது. தமிழ் மக்களின் சதந்திரமான நடமாட்டம் முற்றிலுமாக தடுக்கப் பட்டுள்ளன. நெடுஞ்சாலைகளில் மட்டுமல்லாது, நகரங்களின் பிரதான வீதிகளிலும், தொலைதூரக் கிராமச் சாலைகளிலும் இராணுவ வாகனங்கள் குறுக்கும் நெடுக்குமாக அடிக்கடி கடந்து செல்கின்றன.
- இராணுவத்தினர் அனைவருமே சிங்களவர்களாக இருப்பதால், அவர்களுக்குத் தமிழ் தெரியாததால், அங்கு வசிக்கும் தமிழ் மக்களுக்கும், இராணுவத்திற்குமான இடைவெளி மிகப்பெரியதாக உள்ளது. தென்னிலங்கையிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக தமிழர் பகுதிகளுக்கு வரும் சிங்களவர்கள் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களோடு மிகவும் இயல்பாகப் பழகுவதும், போரில் பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு அவர்கள் சுதந்திரமாகச் செல்வதையும் பார்க்கலாம்.
- கோவில்களில், கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பாக ஏதாவது நிகழ்ச்சி ஏற்பாடு செய்தால் கூட இராணுவத்தின் அனுமதி பெறாமல் ஏதும் செய்ய இயலாது. இராணுவத்தின் அனுமதி இல்லாமல் நடக்கும் நிகழ்ச்சிகளை ரத்து செய்யும் அதிகாரம் அங்கே இருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு உள்ளது. அவ்வாறு ஏற்பாடு செய்யும் குழுக்களோ, தனிநபர்களோ இராணுவத்தின் தொடர்ந்த கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதும், மறைமுகமாக அச்சுறுத்தப்படுவதும் உள்ளது.
- கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான அல்லது அவர்கள் பயன்படுத்திய பல கட்டடங்களைச் சீரமைத்து அங்கே சிங்கள இராணுவப் படையணி கள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன.ஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ விடுதலைப்புலிகள் நேர்த்தியாக வடிவமைத் பேணிக்காத்து வந்த மாவீரர்களின் துயிலும் இல்லங்களைச் சிதைத்து, உருக்குலைத்து, தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் பற்றி நினைவுகளை முற்றிலுமாக அழித்தொழிப்பதில் இராணுவம் தீவரமாக இருக்கிறது.

**2. சிங்கள பௌத்தமயமாக்கல்/சிங்களக் குடியேற்றங்கள்**

➢ இறுதிப்போருக்குப்பின் (மே 2009), ஈழத்தமிழர்களின் தாயக் பூமியான வடக்குப் பகுதிகளில் சிங்கள பௌத்தமயமாக்கல் இலங்கை அரசால் பலவகைகளில் தொடர்ந்து திட்டமிட்டு தீவரமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. யு9 நெடுஞ்சாலையின் முக்கிய பகுதிகளிலும் (எ.காகிளிநொச்சி, மாங்குளம்), பிற பகுதிகளிலும் (எ.கா இரணை மடு நீர்த்தேக்கம்), புதிய புத்த விகாரைகள் அமைக்கப்பட்டு, அங்கே புத்தர் சிலைகள் நிறுவப் பட்டு, அவை சிங்களவர்களுக்கான வழிபாட்டுத் தலங்களாக பாவிப்பதையும் காண முடிகிறது. பெரும்பாலும் தமிழர்கள் இவ்விடங்களக்குச் செல்வதைக் தவிர்க்கின்றனர்.

➢ கிளிநொச்சி, ஆனையிறவு போன்ற முக்கியமான இடங்களில் (A9 நெடுஞ்சாலையில்) போர் நினைவுச் சின்னங்களை இலங்கை அரசு எழுப்பியுள்ளது. இந்த நினைவுச் சின்னங்களில் சிங்கக்கொடி பறக்கிறது. அவ்வழியே செல்லும் அனைத்து சிங்கள சுற்றுலாப் பயணிகளும் அவற்றை நின்று பார்வையிடுவதும், அவ்விடங்களில் பெருமிதத்தோடு புகைப்படம் எடுத்துக் கொள்வதுமாக இருக்கி றது. அனைத்து வார இறுதி நாட்களில் நிறைய சிங்களவர்கள் இவ்வாறு வந்து செல்கின்றனர். (தமிழர்களை போரில் வென்று ஒடுக்கிவிட்ட பெருமிதமும், செருக்கம், ஆணவமும் அங்கு நட மாடும் பெரும்பாலான சிங்களவர்களிமும், சிங்கள இராணு வத்திமும் காண முடிகிறது. இது போன்ற நினைவுச் சின்னங்களின் அருகே தமிழ் மக்கள் செல்வதைக் தவிர்க்கின்றனர். இராணுவம் நினைத்தால் எதையும் செய்வதற்கும், தடுப்பதற்கும், அனுமதி கொடுப்பதற்கும் மறுப்பதற்கும் உரிமை பெற்றுள்ள நிலையைக் காணமுடிகிறது.

➢ யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களின் பல இடங்களில் தமிழர்களுக்கச் சொந்தமான இடங்களை யும், வளமான விளைநிலங்களையும் இராணுவம் ஆக்கிரமித்து அவற்றில் தங்களது இராணுவ முகாம்களை அமைத்துள்ளனர். இந்த இடம் இராணுவத்திற்கு சொந்தமானது. இதில் மற்றவர்கள் அனுமதியின்றி நுழையக்கூடாது. என்று எழுதிய பலகைகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்கிளல் பல இடங் களில் வைக்கப்பட்டுள்ளன. இந்த முந்திரித்தோட்டம் அரசாங் கத்துக்கச் சொந்தமானது" என்பது போன்ற பலகைகள் உடையார் கட்டு தேவிபுரம் - புதுக்குடியிருப்பு (A35) சாலையை ஒட்டியுள்ள பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளதைக்காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரண்டு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சிங்கள இராணுவத்தினர் /கடற்படையினர் தாங்கள் முகாமிட்டு இருக்கம் இடங்களில் உள்ள தமிழர்களின் வீடுகளுக்குச் சென்று குடும்ப உறுப்பினர்களைப் பட்டியல் எடுப்பதும், புதிதாக நபர்கள் வந்திருந்தால் அவர்களைக் குறிப்பதுமாக உள்ளது. இராணுவ முகாம் அதிகாரிகள் மாற்றலாகி புதிய இராணுவ அதிகாரிகள் அங்கு பொறுப்பேடுக்கும் போதும் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு அடிக்கடி இராணுவம் வீடுகளுக்கு வந்து சோதனையிடுவதும், ஆட்களை விசாரிப்பதும், அங்கு வசிக்கும் தமிழ் மக்களிடையே ஒரு விதமான அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது.
- கடலோரப்பகுதிகளில் வசிக்கும் தமிழ் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதற்கானதடை பொதுவில் தளர்த்தப்பட்டு சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், உள்ளூர் பகுதிகளில் உள்ள கப்பற்படையினர் நினைத்தால் அம்மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவிடாமல் தடுக்கலாம் என்ற நிலையே உள்ளது. சில வேளைகளில் மீன் பிடித்து விட்டு திரும்புகையில் மீனவர்கள் கொண்டு வரும் நல்ல மீன்களை கப்பற்படையினர் எடுத்தக் கொள்வதும், தரமறுக்கும் மீனவர்களை கூடுதல் கண்காணிப்பில் வைத்திருந்து, அவர்களை அச்சுறுத்துவதும் தொடர்கதைகளாக உள்ளன.
- நல்ல விளைநிலங்கள் இராணுவத்திற்குத் தேவைப்படுகிறது எனில் அங்கு வசிக்கும் தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு, அவற்றை உயர் பாதுகாப்பு வலயங்கள் என்று குறிப்பிட்டு, அத்தமிழ் மக்களை வேறு எங்காவது முகாம்களில் தங்க வைத்துவிடுகிறது.
- பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோ, காணாமல் கொண்டு செல்லப்பட்டு அல்து கொலை செய்யப்பட்டு அல்லது தடுப்பு முகாம்களில் எந்த விசாரணையுமின்றி வைக்கப்படடிருப்பதால் வீடுகளில் பெரும்பாலும் பெண் களும், குழந்தைகளுமே உள்ளனர். அதிகமான தமிழ் இளைஞர் களைப் பார்க்க முடியவில்லை. எனவே தமிழ்ப்பெண்கள் இராணுவத்திற்குப் பயந்து இரவு நேரங்களில் வெளியே நடமாடவோ அல்லது தன்னந்னியெ கதவுகள் இல்லாத வீடுகளில் தங்கவோ பயப்படுகின்றனர். மின்சாரம் இல்லாத சூழலில் ஆண்கள் இல்ாமல் தனியே தங்கினால் சிங்கள இராணுவத்தினரின் பாலியல் தொல்லைகள் இருக்கின்றன.
- ஆனையிரவை விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து இலங்கை இராணுவம் மீட்ட நடவடிக்கையில் ஒரு சிங்கள இராணுவத் தளபதியின் முக்கியமான பங்கை பறைசாற்றி மிகப்பெரிய பலகை ஒன்றை கிளிநொச்சியிலிருந்து ஆனையிரவு செல்லும் வழியில் வைத்துள்ளனர். அந்த இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்தப் பட்ட இராணுவ கனரக வாகனத்தையும் மக்களின் பார்வைக்கு அங்கே வைத்துள்ளனர். "பயங்கரவாதிகளிடமிருந்து தேசத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றிய படைத்தளபதியின் வீரம்" என்ற ரீதியில் அப்பலகையில் அவலைப்பற்றி சிலாகித்து எழுதப்பட்டுள்ளது. சிங்களச் சுற்றுலாப்பயணிகள் பலரும் அங்கே நின்று வேடிக்கை பார்ப்பதும், புகைப்படம் எடுத்துக் கொள்வதுமாக உள்ளது.

➢. இதுபோன்ற இடங்களுக்கு அருகேயும், சிங்களவர்கள் அதிகமாக வந்து செல்லும் A9 நெடுஞ்சாலையின் பல இடங்களிலும் சிங்கள இராணுவமே பெரிய பெரிய பல்பொருள் அங்காடிகளையும், உணவகங்களையும் நடத்துகிறது. சிங்களவர்களே இந்த அங்காடிகளிலும், உணவகங்களிலும் சென்று பொருட்கள் வாங்குவதும், உண்டு வருவதுமாக உள்ளனர். தமிழர்கள் பெரும்பாலும் சிறு சிறு பெட்டிக் கடைகள், தள்ளுவண்டிகள் வைத்து வணிகம் நடத்துவதையே காணமுடிகிறது.

➢ வட மாவட்டங்களின் பல இடங்களில் சிங்கள மொழியில் மட்டுமே பெயர்ப்பலகைகள், பதாதைகள் இருப்பதைக் காண முடிகிறது. போருக்கு முன்னர் தமிழ் மொழியில் மட்டுமே இவை இருந்தன. முக்கியமான இடங்களில் பெயர்ப் பலகைகளில் சிங்களம் முதன்மையான இடத்திலும், தமிழ் அதற்கடுத்தும் இடம்பெற்றிருப்பதை காணமுடிகிறது.

➢ தமிழ் மக்கள் சிங்கள மொழியை கட்டாயப்படுத்தி படிக்க வேண்டிய சூழலை இலங்கை அரசு உருவாக்குகிறது. போருக்குப் பின் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு சிங்களமொழி வகுப்புகளை இராணுவம் நடத்தியதாகக் கூறுகின்றனர். தமிழர் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளிலும் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக சிங்களம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

➢ யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு இப்போது அதிகமான சிங்களவர்கள் வந்து செல்கின்றனர். கொழும்பு மற்றும் இலங்கையின் தென்பகுதிகளிலிருந்து சிங்களச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த பேரூந்துகள் இக்கோவிலைச்சுற்றி நிறைய நிற்பதைக் காண முடிகிறது.

➢ இறுதிக்கட்டப் போரில் (சனவரி மே,2009) அதிகமாக பாதிக்கப்பட்ட A35 சாலையின் (பரந்தன் - புதுக்குடியிருப்பு) இருமருங்கிலும் தமிழ் மக்கள் இடம் பெயர்நது செல்கையில் ஆங்காங்கே தாங்கள் கொண்டு வந்த வாகனங்களை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். அவ்வாறு விட்டுச் சென்ற வாகனங்களில் சைக்கிள், இருசக்கர மோட்டார் வண்டிகள், மூன்று சக்கர, நான்கு சக்கர வண்டிகள், பேரூந்துகள், டிரக்குகள் ஆயிரக்கணக்கில் இருக்கம். ஏராளமான இவ்வண்டிகளின் இயங்திரங்களை ஏற்கனவே இராணுவத்தினர் கழற்றி, எடுத்துவிட்டுச் சென்றுவிட்டதாகவும், இப்போது இந்த வண்டிகளின் பிறபாகங்களை (தகரங்கள்/ இரும்பு மற்றும் அலுமினியத் தகடுகள், கம்பிகளை) வெட்டியெடுத்து டிரக்குளிலும், லாரிகளிலும் இராணுவத்தினரின் அனுமதியோடு இசுலாமியர்களும், சிங்களவர்களும் ஏற்றிக்கொண்டு விற்பதற்காகத் தென்பகுதிகளுக்குக் கடத்திச் செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. தமிழர்கள் கடத்தப்படுதல், காணாமற்போதல், கொலை செய்யப்படுதல்

- நான்காவது ஈழப்போர் தொடங்கியலிருந்து (2006 முதல் 2009வரை) பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் என்றும், புலிகளின் ஆதரவாளர்கள் என்று சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினராலும், இராணுவக் கூலிப்படையினராலும் கடத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒவ்வொரு ஊரிலும் 30,40 தமிழ் இளைஞர்கள் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் கடத்தபட்பட்டு, காணாமல் போயுள்ளது. பேரதிர்ச்சியாக உள்ளது. இவர்களில் பலர் மேற்கு மற்றும் தென்னிலங்கையின் பல சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் மேற்கு மற்றும் தென்னலங்கையின் பல சிறைகளில் (வெலிக்கடை, போகம்பரா, கொழும்பு) எந்த விசாரணையுமின்றி பல ஆண்டுகளாக விசாரணைக் கைதிகளாகவே உள்ளதாக ஒவ்வொரு ஊருக்குச் செல்லும்போது பெண்கள் ஆதங்களோடும், வேதனையோடும் சொல்கிறார்கள்.
- ஒவ்வொரு வீட்டிலும் உயிரிழப்புகள் அல்லது காணமால் போனவர்கள் கை,கால் இழந்து அங்கவீனர்களாக இருக்கின்ற சோகம் கேட்போரது நெஞ்சைப் பிழிவதாக உள்ளது. ஒரு சில வீடுகளில் இரண்டு அல்லது மூன்று பேர் இராணுவத்தால் கொடுரமாக கொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தால் நடத்திச் செல்லப்பட்டது, காணமால் ஆக்கப்பட்டது என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.
- காணாமல் போனவர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே இலங்கை அரசு தற்காலிக மரண சான்றிதழ்களை வழங்கியுள்ளது. மற்வர்களைப் பற்றிய விபரம் சரிவரத் தெரியாத நிலையில், குடும்ப உறுப்பினர்கள் (மனைவி அல்லது குழந்தைகள்) தென்னிலங்கையில் சிங்களப்பகுதியில் இருக்கும் சிறைகளுக்குச் சென்று தங்களது உறவுகளைத் தேடுகின்றனர். இந்தத் தேடுதல்களை மெற்கொள்ளும் பெண்கள் எதிர்கொள்ளும் சிரமங்களையும், நடைமுறைச் சிக்கல்களையும், சொல்லிமாளாது. தங்களது குழந்தைகளை வீட்டில் யார் துணையுமின்றி விட்டுவிட்டு, கொழும்பு வரை தனிய பயணம் செய்வது, சிங்களம் மட்டுமே பேசும் சிறை அதிகாரிகளிடம் தமிழில் விபரங்களைச் சொல்லி புரிய வைப்பது, இலங்கையின் தென்பகுதிக்குச் சென்று வர இரண்டு நாட்கள் பயணபடுவதற்கான தொகையைச் சேகரிப்பது, ஒரு சிறையில் தங்கள் உறவுகள் இல்லை என்று அடுத்தடுத்த சிறைகளில் சென்று யாருடைய உதவியுமின்றி அலைந்து தேடுவது, சிங்கள வழக்கறிஞரின் உதவி என்றும், ஏதும் இல்லாத நிலையில் சிங்களச் சிறைகளைத் தேடி அலைவதும், பல நாட்கள் அலைந்த பின்பு எந்தப் பயனும் தராதநிலை போன்ற சிரமங்கள் - இறுதியில் காணாமல் போன தங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன்மார்கள் / தந்தையர் / மகன்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்று உறுதி செய்யப்படாத நிலையில் மீண்டும் எந்தப் பலனுமின்றி சொந்த ஊருக்கு மீண்டும் திரும்புதல் இதுபோன்ற வேதனையைச் சுமந்தபடி ஆயிரக்கணக்கான இளம்பெண்கள் வெறும் நம்பிக்கையை மட்டுமே வைத்துக்கொண்டு உயிர் வாழ்வதைக் காண்பது கொடுமையிலும் கொடுமையாக உள்ளது.

- விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள், ஆதரவாளர்கள் என்று இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக தடுப்ப முகாம்களில் சிறை வைக்கப்பட்டு, விசாரணைக்குப் பின் வெளியே அனுப்பப் பட்ட தமிழ் இளைஞர்கள் இராணுவத்தின் தொடர் கண்காணிப் பிற்கும், அச்சுறுதலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இராணுவ முகாம்களில் சென்று கையெழுத்திடவும், இராணவம் அவ்வப்போது அவர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களைப்பற்றி விசாரிப்பதும், அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிப்பதுமாக தொடர்ந்து கொண்டிருக் கிறது. இதுபோன்ற இராணுவத்தின் செயல்பாடுகள் இவர்களுக்கு உளவியல் ரீதியாக சித்திரவதையைக் கொடுப்பதோடு, ஒட்டு மொத்த குடும்ப்தததினாின் மனநிலையையும் மிகவும் பாதிப்பதாக அமைகின்றன.
- இறுதிக்கட்டப்போரில் தப்பி வந்த இளம்பெண்கள்பல இடங் களில் இராணவத்தினரால் நிர்வாண சோதனைக்கு உள்ளாக்கப் பட்டனர். உடுத்தியிருந்த அனைத்துத் துணிமணகளையும் அவிழ்க்கச்சொல்லி நிர்வாணவானமாக வீடியோ கேமரா முன் பதிவு செய்யப்பட்டடு சற்றுதூரம் நடக்கவிட்டு முழுக்க சோதனை செய்த பின்னரே மீணடும் துணிமணிகள் அணிய அனுமதிக்கப் பட்டதாக பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் தெரிவித்தனர். போரின் கொடுமையிலிருந்து படகில் தப்பியோடி யாழ்ப்பாணம் மாவட்டதின் பிற இடங்களில் வந்திறங்கிய இளம்பெண்களும் இதுபோன்ற நிர்வாண சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் வெட்கத்தோடும், வேதனையோடும் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட னர்.

**கூலிப்படைகள் / துணை இராணுவப் படைகளின் அட்டூழியங்கள்**

- கூலிப்படைகளே துணை இராணுவப்படைகளாக தமிழர் வசிப் பிடங்களில் அதிகமாக செயல்படுகின்றன. விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களைக் காட்டிக் கொடுப்பதும், தங்களுக்கோ, அரசுக்கோ வேண்டாத ஜனநாயக சக்திகளை இனங்கண்டு கடத்துவது, அடித்து அச்சுறுத்துவது, மிரட்டுவது, கொலை செய்வது, கட்டப்பஞ்சாயத்து செய்து பணம் பறிப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுவதாக பலரும் தெரிவித்தனர். ஆளும் கடசியோடு இணைந்து அதிகாரத்தில் இருப்பதால் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று ஆட்டம் போடுகிறார்கள் என்று மிகவும் வேதனைப்பட்டு மக்கள் தெரிவிக்கின்றனர்.

- பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடும் பல அமைப்புகளும், தனி நபர்களும் மனித உரிமை ஆர்வலர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்த கூலிப்படையினரின் அச்சுறுத்தலுக்கம், தொடர் மிரட்டலுக்கம் உள்ளாக்கப்படுகின்றனர். எதிர்த்துப் பேசினால் கடத்தப்பட்டு கொலை செய்யப்படும் அபாயமும் உள்ளது.
- ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் ஆங்காங்கே மிகப்பெரிய தாதாக்கள் போலச் செயல்பட்டு தமிழ் மக்களுக்கு தொடர்ந்து பல வகைகளில் இடையூறுகளைக் கொடுத்து வருவதாத் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணம் பகுதிகளில் பல இடங்களில் சட்டத்திற்குப் புறம்பாக மணல் அள்ளுவதும், அவற்றை மிக அதிகமான விலைக்கு மக்களிடம் விற்று பணம் சம்பாதிப்பதுமாக அடாவடி செய்து வருகின்றனர். இதுபோன்ற அனைத்து வேலைகளுக்கும் இலங்கை அரசாங்கத்தின் முழு ஆதரவும், உத்துழைப்பும் இருப்பதாக மக்கள் தெரிவக்கின்றனர்.

**5. மீள்குடியமர்த்தப்படல்**

- கொடூரமாக யுத்தம் நடந்த பகுதியான விசுவமடு - மூங்கிலாறு புதுக்குடியிருப்பு நந்திக்கடல் பகதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னம் மீள்குடியமர்த்தப்படவில்லை. இப்பகுதிகளில் சேதமடைந்த தங்களது வீடுகளை / உடமைகள் வந்து பார்ப்பதற்கு கூட இராணுவம் இவர்களை அனுமதிப்பதில்லை. புதுக்குடியிருப்பு முதல் - இரணப்பாலை முல்லைத்தீவு மாத்தளன் - வட்டுவால் - நந்திக்கடல் பகுதிகள் அனைத்தும் முழுக்க முழுக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டிலே இன்றும் உள்ளது. போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் ஆன பின்ரும் பொதுமக்களுக்காக இப்பாதை திறக்கப்படாமல் இராணுவத்தின் பயன்பாட்டில் மட்டுமே இருக்கிறது.
- யுத்தத்தின் கடைசிப் பகுதிகளில் வெளியேறிய பொதுமக்கள் அனைவரும் இன்னும் செட்டிகுளம் முகாம்களில் இராணுவத்தால் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 60.000 பேர் இவ்வாறு இன்னும் வீடுகளுக்கு அனுப்பப்படாமல் முகாம்களிலே இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டால் இறுதிக்கட்ட யுத்தத்தின் அழிவு களிலிருந்து மீண்டும் பழைய நினைவுகள் திரும்பி பிரச்சினைகள் உருவாகக்கூடும் என்று இலங்கை அரசு எண்ணுவதாகத் தெரிவிக் கின்றனர். எனவே இவர்களை வேறு எங்காவது குடியமர்த்த அரசு திட்டம் வைத்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. போருக்குப் பின் நிவாரணம்**

- போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பலருக்கு முகாம்களில் இருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பப்படும் போது ரூ.25.000/- (சிங்கள ரூபாய் மதிப்பில்) வழங்கப்பட்டுள்ளது. ரூ.5.000/- அல்லது ரூ.10.000/- பணமாவும், மீதித்தொகை வங்கியில் கையிருப்பாகவும் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதவிர நான்கைந்து மாதங்களுக்கு கொஞ்சம் அரிசி, சர்க்கரை, மாவு ஆகியவை நிவாரணப் பொருட்களாக வழங்கப்பட்டுள்ளன. அதைத்தவிர பெரிய அளவில் நிவாரணம் என்று ஏதுவும் வழங்கப்படவில்லை.
- போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்திய அரசு (3½ இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பில்) 50,000 வீடுகள் கட்டித் தரும் என்ற அறிவிப்பு ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டதே தவிர, அதற்கான பூர்வாங்க வேலைகள் பெரிய அளவில் ஏதும் தொடங் கப்படவில்லை. இலங்கை அரசம் ரூ3.25 இலட்சம் மட்டுமே (இலங்கை ரூபாய் மதிப்பில்) பாதிக்கப்பட்டோருக்கு தரப்போவ தாக செய்திகள் வெளிவந்துள்ளதாகக் கூறுகின்றனர். இந்த வீடுகளில் பெரும்பாலானவை சிங்களவர்களுக்கம், போரில் ஈடு பட்ட சிங்கள இராணுவத்தினருக்குமே இலங்கை அரசால் கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் நடப்பதாக பலரும் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.
- போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நாடுகளால் வழங்கப் பட்ட நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வசதிகளை சில இடங்களில் சிங்கள இராணுவமே அனுபவித்து வருகிறது. (மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு என்ற கிராமத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட அஸ்பெஸ்டாஸ் மற்றும் அலுமினியத் தகடுகள் இராணுவ முகாம்களில் பயன்படுவதைக் காணமுடிகிறது.
- சிறப்பாக அனைத்து வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட இலங்கை இராணுவ முகாம்களுக்கு மறுபுறம் (சாலைகளுக்கு எதிரில்) பரிதக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் தகர சீட்டுகள் (அல்லது) அஸ் பெஸ்டாஸ் கூரை போடப்பட்ட குடிசைகளில் மின்சார வசதியோ, தண்ணீர் வசதிகளோ எதுவும் இல்லாமல் ஒட்டுகின்றனர்.

**7. வாழ்வாதாரங்கள் பாதிப்பு தொழில் செய்ய இயலாமை**

- சிங்களக் கப்பற்படையின் கெடுபிடியால் மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் சுதந்திரமாக செய்யமுடியவில்லை. நல்ல இறால்கள் கிடைக்கும் நந்திக்கடல் பகுதியில் சீனக் கம்பெனிகள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர். தரமான மீன்கள், நல்ல இறால்கள் அனைத்தும் பதப்படுத்தப்பட்டு கொழும்புவிற்கும், அங்கே இருந்து பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களும் தமிழ் பகுதியின் அனைத்து வளங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சுரண்டப்பட்டு மற்றவர்கள் எடுத்துச்செல்ல, தமிழ் மக்களுக்கு முற்றியலுமாக மறுக்கப்பட்டு உள்ளது.

➢ வன்னிப் பெருநிலத்தில் விவசாய நிலங்கள் பலவும் விவசாயம் செய்யப்படாது அப்படியே கிடக்கின்றன. பரந்தனிலிருந்து முரசுமோட்டை, பண்டாவிளை, புளியம்பொக்கணை, தருமபுரம் வரை உள்ள வயல்வெளிப் பகுதிகளில் ஆங்காங்கே நெல் விவசாயம் இப்போது தொடங்கியுள்ளதைக் காண முடிகிறது. வங்கிகளில் கடன் வாங்கி இதுபோன்று தமிழ் மக்கள் இப்போது விவசாயம் செய்யத் தொடங்கியிருப்பதாகத் தெரிவித்தனர்.

**8. புனரமைப்புப்பணிகள்**

➢ போரில் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளில் புனரமைப்பு பணிகள் என்று பெரியஅளவில் ஏதுவுமே நடைபெறவில்லை. போரில் சிதைக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் அனைத்துமே சேதமடைந்த நிலையில் அப்படியேதான் உள்ளன. கிளிநொச்சிப் பகுதியில் தோட்டங்களுக்கு மத்தியில் வசதி வாய்ப்புகளோடு செழிப்பாக வாழ்ந்த தமிழர்களின் வீடுகள் குண்டு வீச்சுகளுக்கு இலக்காகிய நிலையிலேயே இன்றும் உள்ளன. எந்த வீடுகளுக்கும் மேற்கூரைகள் எதுவும் இல்லை. கதவுகள், சன்னல்கள் அனைத்தும் உடைபட்டு சிதிலமடைந்த நிலையில் பராமரிப்பின்றியே இன்னமும் கிடக்கின்றன. அவ்வப்போது சேதமடைந்த தங்கள் வீடுகளையும், தோட்டங்களையும் வந்து பார்த்துவிட்டுச் சென்றுவிடுகின்றனர்.

➢ "வடக்கின் வசந்தம்" என்ற திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் இலங்கை அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைக்கசகத்தால் புனரமைப்புப்பணிகள் மேற்கொள ளப்படுவதாக பல இடங்களில் தகவல் கலகைகள் வைக்கப்பட் டுள்ளன. ஆனால் ஆக்கபூர்வமாக வேலைகள் ஏதும் நடந்ததாகத் தெரியவில்லை.

➢ போரில் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் மறுவாழ்வு / புனரமைப் புப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பெரிய அளவில் இலங்கை அரசால் அனுமதிக்கப்படவில்லை. ஐ.நா அமைப்பின் சிறப்பு நிறுவனங்களான UNICEF, UNHCR, FAO, UNDP போன்றவை ஒரு சில மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆங்காங்கே இந்த நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்த தகவல்கள் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. தவிர பெரிய அளவில் புனரமைப்பு / மறுகட்டமைப்பு பணிகள் நடைபெறவில்லை.

➢ கிளிநொச்சியில் கடந்த ஒராண்டில் புதிதாக பல வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன.தேசிய சேமிப்பு வங்கி, கொமர்சல் வங்கி Pan Asia bank, மக்கள் வங்கி, சம்பத் வங்கி, Hatton national Bank, என்று பல வங்கிகள் தங்கள் கிளைகளைத் திறத்துள்ளன.ஏற்கனவே போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டு நொறுங்கிப்போன தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக கூறி கடுமையான வட்டி விகிதத்தோடு கடன்களை வழங்க இவ்வங்கிகள் முன்வருகிறார்கள்.மீண்டும் வன்னிமக்களை பொருளாதார ரீதியாக அடீமைப்படுத்தப்படுத்தும் முயற்சிகளில் இந்த வங்கிகள் இதுபோன்று கடன் கொடுக்கும் வேலைகளில் ஈடுபடுவதாக் குறிப்பிடுகின்றன.

- இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற இருப்பதால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஆங்காங்கே சாலைப் பாரமரிப்பு வேலைகளையும்.ஒருசில மேம்பாட்டுத் திட்ட அறிவிப்புகளையும் அரசு மேற்கொள்வாதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
- A9 நெடுஞ்சாலையை கிளிநொச்சியை ஒட்டியயுள்ள பகுதிகளில் ஆங்காங்கே பழுதுபார்ப்பதும்இசாலையை அகலப்படுத்தும் விரிவாக்கப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற சாலை பாரமரிப்பு பழுதுபார்ப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவோர் பெரும்பாலும் சிங்களவர்களாகவும் ஒருசிலர் தமிழர்களாகவும் உள்ளனர். சீனக்கம்பனிகளுக்கும் சிங்களவர்களுக்குமே இது போன்ற காண்ட்ராக்டுகள் விடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**9. கண்ணிவெடிகள் அகற்றப்படல்**

- மன்னார்.கிளிநொச்சி.முல்லைதீவு மாவட்டங்களின் பல இடங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை ஆபத்தான பகுதிகள் என்று பலகைகள் ஆங்காங்கே எழுதி வைக்கப்பட்டுள்ளன. இராணுவத்திற்கு தேவைப்படும் இடங்களை ஆக்கிரமிப்பு செய்வதற்காக (தமிழ் மக்கள் செல்லக்கூடாது என்ற நோக்கில்) இவ்வாறு பலகைகள் இராணுவமே எழுதி வைத்துள்ளதாக மக்கள் சொல்கின்றனர்.
- பிற நாட்டு அமைப்புகளை கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்த இலங்கை இராணுவம் தயங்குகிறது. கண்ணிவெடிகளை அகற்றும் போது சிங்கள இராணுவம் முழுமையாகச் செயல்படாமல் வேண்டுமென்றே சிற்சில இடங்களில் வெடிகள் சிலவற்றை விட்டுச்சென்றுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர். இப்பணிகளில் பிற நாட்டு அமைப்புகளை ஈடுபடுத்தாதற்குக் காரணம் கண்ணிவெடிகளை அகற்றும்போது போரில் இராணுவத்தால் கொல்லப்பட்டு. புதைக்கப்பட்ட தமிழர்களின் உடல்கள் தென்படலாம். அவை வெளியே வரும்போது அவ்வுடல்கள் பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை வரும் என்று இலங்கை இராணுவமே இவற்றைத் தவிர்த்துவிட்டது என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. கணவன்மாரை இழந்த விதவைகள்**

- போரில் பாதிக்கப்பட்ட தமிழ்க்குடும்பங்களில் கணவரை இழந்த விதவைகளின் நிலைமை மிக மிக மோசமாகவும், பரிதாபத்திற்கு உரியதாகவும் உள்ளது. ஒவ்வொரு ஊரிலும் 50, 70 என்று இளம்விதவைகள் உள்ளனர். தொழில்கள் செய்யவோ, குழந்தை களைப் படிக்க வைக்கவோ வழிவகையுமின்றி வாழ்க்கையை ஓட்டுவதற்கே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

**11. கொடூரமான போரின் விளைவுகள்**

- கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழர் களுக்குச் சொந்தமான விளைநிலங்கள், தென்னந்தோப்புகள், மாந் தோப்புகள், பனைமரங்கள் அனைத்தும் போரின் உக்கிரத்திற்கு இன்னும் மௌனசாட்சிகளாகவே இருக்கின்றன. குண்டு வீச்சுகளுக்கு இரையான பனைமரங்கள் தீக்கருகி மொட்டையாக நின்று கொண்டிருக்கின்றன. (எ.கா.யாழ் மாவட்டத்தில் முகமாலை, முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்கள்)
- கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் சாலைகளில் தமிழர்கள் ஐந்தாறு பேர் சேர்ந்து நிற்கவோ, சுதந்திரமாகக் கூடிப் பேசவோ அச்சப்படும் நிலை உள்ளது. தமிழர்களில் பலரை இலங்கை அரசே உளவு வேலை பார்ப்பதற்கும், போராளிகளைப் பற்றி தகவல்களைச் சேகரிக்கவும் உலவவிட்டு இருப்பதாகச் சொல்கின்றனர். நான்கைந்து பேர் சந்தித்துப்பேசும் இடங்களில் கூட யார், என்ன பேசுகிறார்கள் என்ற தகவல்கள் உடனுக்குடன் இராணுவத்திற்குச் செல்வதால், மக்கள் சுதந்திரமாகப் பேசவோ, மாற்றுக்கருத்துக்களை தெரிவிக்கவோ அஞ்சுகின்றனர். (இது போன்று பேசுபவர்கள் உடனே இராணுவத்தால் கண்காணிக் கப்படுவதாகவும், மிரட்டப்படுவதாகவும் தகவல்கள் கிடைத்தன)
- போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இடப்பெயர்வு என்பது அவர்கள் வாழ்க்கையில் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. போர் உச்சகட்ட நேரத்தில் 2008 செப்டெம்பர் - 2009 மே வரை கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு நந்திக்கடல் வரை தங்களது பொருட்களை எடுத்துக்கொண்டு நகர்ந்து நகர்ந்து சென்று மழையிலும், வெயிலிலும் வெட்டவெளியில் தொடர்ந்த ஷெல்த் தாக்குதல்களுக்கு மத்தியில் சிறு சிறு டெணட்கள் அடித்துத் தங்கி, உறங்கி, காலைக்கடன்களை முடித்து, அங்கே சமைத்து, சாப்பிட்டு, சொல்லிமாளா துயரத்தை மீண்டும் நினைவுபடுத்த மறுக்கிறார்கள். நான்கு இலட்சம் தமிழர்கள் இவ்வாறு இடம்பெயர்ந்து சொல்லொண்ணா துயரங்களைக் கடந்து வந்த சோகம் அவர்களது முகங்களிலிருந்தும் மறைய வில்லை.
- போரின்போது இராணுவத் தாக்குதல்களுக்கு பள்ளிகள், மக்கள் வாழ்விடங்கள், (இந்துக்கோவில்கள், தேவாலயங்கள்) என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமே தப்பவில்லை. போருக்கான அடிப்படை நெறிமுறைகள் எதுவுமே பின்பற்றப்படவில்லை. (போரின் தாக்குதலுக்கு இலக்கான பல பள்ளிக் கூடங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் அப்படியே மௌன சாட்சியங்களாக இன்னும் நிற்கின்றன).

- போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழ்ப் பெண்கள் பாலியல் தொழிலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். கட்டாயத்தாலும், வறுமையின் கொடூரத்தாலும் பாலியல் தொழிலுக்கு உள்ளாக்கப் படும் தமிழ்ப் பெண்களின் சூழல் மிகக் கொடுமையானது. மறுகட்டமைப்புப் பணிகளில் ஈடுபடும் பிறநாட்டு (சப்பான், கொரிய நாடுகளைச் சேர்ந்த) பணியாட்கள் தமிழ்ப் பெண்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதாகவும், தமிழ்ப் பெண்களை ஈடுபடுத்த இதற்கென்றே தனியாக புரோக்கடைகள் இருப்பதாகவும், சில வெளிநாட்டு நபர்கள் ஒரு இரவுக்கு ரூ.10,000/- (இலங்கை ரூபா மதிப்பில்) கொடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளிடம் அதிகமான வன்முறை உணவு பெருகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. மப்பது ஆண்டுகளாக குண்டவீச்சுகளுக்கு இலக்காகி சண்டைகள், பாதிப்புகள், உயிரிழப்புகளை மட்டுமே பாடித்து வளவந்த சமூகத்தின் மீது அதன் கொடூரமான தாக்கங்கள் இருப்பதைக் கண்கூடாக காணமுடிகிறது.
- இறுதிக்கட்டப்போரில் இறந்த தமிழர்களின் உடல்களும் / சேதமடைந்த பொருட்களும் ஆங்காங்கே கிணறுகளிலும், நீர்நிலைகளிலும் இராணுவத்தினரால் கொட்டப்பட்டதாகத் தெரிவித்தனர்.

**12. மற்றவை**

- விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்து வீரச்சாவு அடைந்த இளைஞர்களின் நினைவு நாளை அந்த குடும்ப உறுப்பினர்கள் நினைவு கூறுவதற்கும், அவர்களுக்கான சடங்குகளைச் செய்வதற்கும் இராணுவம் முற்றிலுமாகத் தடை விதிக்கிறது. போரில் உயிர்நீத்த போராளிகளின் நினைவு தினத்தைக் கூட அவைகள் உறவுகள் அனுசரிப்பதைத் தடுக்கும் கொடூரம் உலகில் வேறெங்கும் இல்லை.
- போரில் இறந்த, கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட, காணாமல்ப் போன தமிழ் இளைஞர்களின் விபரங்களைச் சேகரிக்கும் மனித உரிமை அமைப்புகள், இது போன்ற உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இதழாளர்கள், பொது நல அமைப்புகள், தனிநபர்கள் அரசின் தொடர்ந்த கணிகாணிப்பிற்கும் அச்சுறுத்த லுக்கும் உள்ளாகின்றனர். சில வேளைகளில் இது போன்ற பணிகளில் ஈடுபாட்டோடு செயல்படும் நபர்கள் திடீரென்று கடத்தப்படுகிறார்கள். இது மனித உரிமைப் பணிக்கு மிகப்பெரிய சவாலாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புத்தளம் -மன்னார், விடத்தல் தீவு முழங்காவில் - முருகண்டி, கிளிநொச்சி ஓமந்தை போன்ற சாலைகளின் இருமருங்கிலும் ஒரு கிலொ மீட்டர் தூரத்திற்கு அனைத்து மரங்களையும் இராணுவம் வெட்டி அழித்துள்ளது. விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், அவர்களது ஊருடுவலைத் தடுக்கவுமே இந்த ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது.
- இறுதிக்கட்டப் போரில் அதிகம் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழ் மக்கள் கொடுமையான போரின் தாக்குதல்கள் - பாதிப்புகள் - ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாத நிலையில் இலங்கை அரசு கிளிநொச்சி நகரில் பெரிய பெரிய விழாக்கொண்டாட்டங்களை, இன்னிசை நிகழ்ச்சிகளை நடத்தி தமிழ் மக்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் - தமிழர்கள் சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டதாக பிற நாடுகளுக்கு பொய்பிம்பத்தைக் காட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இவ்வார இறுதியில் இலங்கை அரசு கிளிநோச்சியில் ஏற்பாடு செய்யும் பிரம்மாண்ட இன்னிசை கலை இரவு கொண்டாட்டத்திற்கான அரங்க வடிவமைப்பு வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம். இந்நிகழ்ச்சிக்கு தமிழகத்திலிருந்து திரைப்படப் பின்னணிப் பாடகர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். போரில் அடிபட்ட தமிழர்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கவும், ஆடல் பாடல் களைப் பாடுவதற்கு சிங்கள இசைக் குழுக்களும், தமிழ் சினிமா பின்னணிப் பாடகர்களும் என்ற ரீதியில் சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.
- A9 நெடுஞ்சாலையில் கிளிநொச்சிக்குத் தெற்கே முருகண்டியில் பசில் ராஜபக்ஷேவுக்குச் சொந்தமான ஒரு பெரிய ஒட்டல் அண்மையில் கட்டப்பட்டுள்ளது.
- இலண்டன் சேனல் 4 அண்மையில் ஒளிபரப்பிய "இலங்கையின் கொலைகளம்" என்ற ஆவணப்படத்தை தமிழ் மக்கள் பார்த்துள்ள னர். இவ்வளவு காலம் கடந்தாவது சர்வதேசச் சமூகமும் ஈழத்தமிழர் பிரச்சினையை விவாதிக்க ஆரம்பித்துள்ளதே என்ற எண்ணம் இருப்பினும், அந்த ஆவணப்படத்தில் காட்டப்பட்டு இருப்பது போர்க் காலங்களில் சிங்கள இராணுவம் அரங்கேற்றிய கொடூரங் களில் நூறில் ஒரு பங்கு கூட இல்லை என்று கூறுகின்றனர்.
- ஐ.நா நிபுணர்குழு அறிக்கையும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆறுதல் தரக்கூடிய விஷயம் என்றாலும், மிகவும் தாமதமாக செயல்பட்ட ஐ.நா அவையின் மீது கடுமையான அதிருப்தியும், உக்கிரமான போரின் இறுதிக்கட்டத்தில் தங்களை நிர்க்கதியாக்கி விட்டு ஓடிவிட்ட ஐ.நா அமைப்புகள் மீது கடுமையான கோபத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் காண முடிந்தது.
- இலங்கை அரசு நடத்திய கொடூரமான போருக்கு இந்திய அரசு முழுக்கத் துணை நின்றதை ஈழத்தமிழர்கள் ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றனர். ஆயுதங்கள் வழங்கி, தமிழ் இன அழிப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து வகையிலும் சிங்கள இனவெறி அரசுக்கு முழு உதவிகளையும் செய்த இந்திய அரசின் துரோகத்தையும், அதற்குத் துணைபோன திமுகஅரசின் துரோகத்தையும் ஈழத்தமிழர்கள் மறக்கவில்லை.

- அண்மையில் அஇஅதிமுக தலைமையிலான தமிழக அரசு சட்ட மன்றத்தில் கொண்ட வந்த தீர்மானம் ஈழத்தமிழர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விஷயமாக உள்ளது என்று கூறுகிறார்கள்.
- கிளிநொச்சியில் (A9 நெடுஞ்சாலையில்) விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட சிறந்த உணவகங்கள் சிங்கள இராணுவத்தினாரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கி ன்றன.
- சிங்கள இராணுவம் பயன்படுத்தும் பல வாகனங்கள் இந்தியாவி லிருந்து அசோக் லேலண்டு தயாரிப்பில் உருவானவை என்று தெரிகிறது.
- போரில் பாதிக்கப்பட்ட / பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகளுக்கு சிறப்பான திட்டங்கள் ஏதும் இல்லை. கிறிஸ்தவ அமைப்புகள் நடத்தும் அநாதை இல்லங்களில் இதேபோன்று சிறுவர்கள், சிறுமிகள் தங்கி படிக்கின்றனர்.
- இலங்கையின் தென்பகுதியில் வசிக்கும் சிங்களவர்களுக்கு வட பகுதியில் நடைபெற்ற போர் பற்றிய உண்மையான விபரங்களை இலங்கை அரசு தெரிவிக்கவில்லை. இலங்கை அரசம் சிங்கள இனவெறிப் பிக்குகளும், சிங்கள ஊடகங்களும் " பயங்கரவாதி களுக்கு எதிரான போர்" என்ற ரீதியில்தான் சிங்கள மக்களிடம் திட்டமிட்டு பிரச்சாரங்களை மேற்கொண்டன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை திட்டமிட்டு ஒழித்த இனப்படுகொலை என்ற உண்மை பரவலாக சிங்களவர்கள் மத்தியில் செல்லவில்லை. தீவிர இடதுசாரி இயக்கங்களும் இதுபோன்ற சிந்தனையையே கொண்டி ருக்கின்றன.
- இறுதிக்கட்டப் போரின்போது நடைபெற்ற உரிமை மீறல்களை விசாரிக்க இலங்கை அரசு நியமித்த "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் சமரச முயற்சிகளுக்குமான ஆணையம், ஒரு கண்துடைப்பு என்பதை தமிழ் மக்கள் கருதுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களின் புகார்களை முறைப்படி விசாரிக்கவோ அல்லது தமிழர்களின் பாதிப்புகளை முழுமையாக கேட்கவுமான நிலையில் அந்த ஆணையம் இல்லை என்று தெரிவிக்கினறனர்.
- அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட மாவட்ட முகவர்கள் (GA), பிரதேச சபைகள் (GS) இலங்கை அரசின் கைப்பாவைகளாக செயல்படுகின்றனவே தவிர, தமிழ் மக்களின் உண்மையான தேவைகளையும், எண்ணங்களையும் அரசாங் கத்திடம் பிரதிபலிப்பதாக இல்லை.
- கொடூரமான போரின் போது போர் நிறுத்தம் கேரியும், ஈழத் தமிழர்களின் விடுதலைக்காகவும் உயிர் துறந்த தமிழக இளைஞர் களை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கின்றனர். காங்கிரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியும், திமுக அரசம் தங்களுக்குத் துரோகம் இழைத்தாலும், தமிழக மக்கள் தங்களுக்காக நிற்கிறார்கள் என்று எண்ணுகின்றனர்.

**பரிந்துரைகள்**

1. ஈழத்தமிழர் வசிப்பிடங்களான இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் இலங்கை அரசு ஏற்படுத்தியிருக்கும் அனைத்து இராணுவ முகாம்களையும் உடனே அகற்ற வேண்டும். சிங்கள இராணவத்தினர் மற்றும் கப்பற்படையினர் நடமாட்டம் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வகையான அச்சத்தையும், பாதுகாப்பினையும் ஏற்படுத்தி தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தைத் தடுப்பதாக அமைவதால் இலங்கை அரசு இந்த இராணுவ முகாம்களை தாமதமின்றி உடனே அகற்ற வண்டும். இந்த நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய அரசம், பிற நாடுகளும் இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

2. தமிழரின் தாயகப் பூமியில் போருக்குப்பின்னர் தீவிரமாக நடைபெறும் சிங்கள பௌத்தமயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே போரில் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து மீள இயலாத நிலையில் இருக்கும் ஈழத் தமிழர்களின் உணர்வுகளை மேலும் மேலும் புண்படுத்துவதாக அமைகிறது. புத்த விகாரைகளைக் கட்டுவதும், சிங்கள மொழியை தமிழ் மக்கள் மீது திணிப்பதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவ்விஷயத்தில் இந்திய அரசம், ஐ.நா அவையும் இலங்கை அரசிற்கு கூடுதல் அழுத்தம் தர வேண்டும்.

3. தமிழர்களின் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். தமிழர்கிடையே அச்ச உணர்வைப் போக்கி, பாதுகாப்பு உணர்வை உருவாக்கிட இலங்கை அரசு சிங்களவர்களைத் தமிழர் வசிக்கும் பகுதிகளில் குடியமர்த்தக் கூடாது.

4. நான்காவது ஈழப்போர் தொடங்கியதிலிருந்து கடந்த 5 ஆண்டுகளாக தமிழர் வசிக்கும் பகுதிகளில் இராணுவத்தினராலும், துணை ராணுவக்கூலிப் படையினராலும் கடத்தபட்பட்டு காணாமல் போயுள்ளவர்களின் பட்டியலை இலங்கை அரசு உடனே வெளியிட வேண்டும். அங்கு காணாமல் போனவர்களின் இன்றைய நிலை குறித் வெள்ளை அறிக்கை வெளியிடவேண்டும். எந்தெந்த தடுப்பு முகாம்களில் அல்லது சிறைகளில் எத்தனைத் தமிழர்கள் இப்போது வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது குறித்த நிலவரத்தை இலங்கை அரசு உடனடியாக வெளியிட வேண்டும். அவர்களுடைய குடும்பங்களுக்கு இது குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் உறவினர்கள் அவர்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இவ்வாறு கடத்தப்பட்டோர் / காணாமல் போனவர்கள் / குற்றம் சுமத்தப்பட்டோர் மீது விரைவாக விசாரணை நடத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாத பட்சத்தில் உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். விசாரணை செய்யப்படாமல், விசாரணைக் கைதிகளாகவே பல ஆண்டுகளாக சிறைச்சாலைகளில் இருக்கம் அப்பாவித் தமிழர்கள் உடனே விடுதலை செய்யப்படவேண்டும்.

6. இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டு, இலங்கை இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் பட்டியலையும், கடத்தப்பட்டு பாலிய வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட தமிழ் இளம்பெண்களின் பட்டியலையும் உடனே இலங்கை அரசு வெளியிடவேண்டும்.

7. போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரங்கள் முற்றிலு மாக அழிக்கப்பட்டு, வாழ்விழந்து நிற்கும் தமிழ் மக்கள் மீண்டும் தங்களது வாழ்க்கையைக் கண்ணியமாகத் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும். வட-கிழக்கு மாவட்டங்களில் சேதமடைந்த அனைத்து வீடுகளையும் புதுப்பித்து, பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்ய வேண்டும். தொழில் தொடங்குவதற்கான கருவிகள், விவசாயம் மற்றும் மீன்பிடித்தலுக்கான அனைத்து வழிவகைகளையும் இலங்கை அரசு செய்து தர முன்வர வேண்டும். மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை அரசு செய்ய வேண்டும்.

8. இந்திய அரசு கட்டித் தருவதாக வாக்களித்துள்ள 50.000 வீடுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முழுமையாக, முறையாகச் சென்றடைய வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி தமிழ் மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதை இந்திய அரசு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

9. போரில் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதிகளில் சாலைகள் அனைத்தும் முறையாக, விரைவாக பழுதுபார்க்கப்டப்டு, விரிவாகக்கப்பட்டு தமிழ் மக்களின் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் திறந்து விடவேண்டும்.

10. நிவாரணம் - மறுவாழ்வுப்பணிகளில் ஈடுபட விரும்பும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் முழுமையாக அனுமதித்து, போரில் பாதிக்கப்பட்ட இப்பகுதிகளில் மறுவாழ்வு / புனரமைப்புப்பணிகள் விரைந்து நடைபெற இலங்கை அரசு உதவவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. போரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சுதந்திரமாகச் சென்றுவர மனித உரிமைக் குழுக்களை / ஊடகங்களை முழுமையாக அனுமதிக்க வேண்டும். இக்குழுக்களிடம் / ஊடகவியலாளரிடம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சுதந்திரமாகப் பேச அனுமதிக்க வேண்டும். தேவையற்ற அரசின் கண்காணிப்பும், தொடர் அச்சுறுத்தலும் முழுமையாக தடுக்கப்பட்டு மக்களின் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகள் பேணிக்காக்க வழிவகை செய்யப்பட வேண்டும்.

12. போரில் பாதிக்கப்பட்டு, கணவர் / தந்தையரை இழந்த இளம் பெண்களுக்கம், பெற்றோரை இழந்த இளம் சிறுவர்களுக்கும் சிறப்புப் பாதுகாப்புத்திட்டங்களும், முழுமையான வாழ்வாதாரத் திட்டங்களும் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.

13. போரில் பாதிக்கப்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதி, பாதிக்கப்பட்ட குடிநீர் வசதி, நல்ல சாலை வசதி போன்ற வற்றை அரசாங்கமும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் செய்து தரவேண்டும்.

14. தமிழர்களுக்குச் சொந்தமான விளைநிலங்கள் முழுவதும் சேதமாக்கப் பட்ட நிலையில் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன. மீண்டும் பழைய நிலைக்கு இந்த விவசாய நிலங்களைக் கொண்டுவர இலங்கை அரசாங்கம் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. இந்நிலங்களைப் பயன்படுத்தி, விளைச்சலுக்குக் கொண்டுவரத் தேவையான அனைத்து வசதிகளையும் உடனடியாக செய்துதர வேண்டும்.

15. விடுதலைப்புலிகள் என்று சந்தேகத்தின் பேரில் போரின்போது கைது செய்யப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேலாகத் தடுப்பு முகாம்களில் வைத்திருந்து சிறுசிறு எண்ணிக்கையில் பின்னர் விடுவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், இளம்பெண்கள் எந்தவித மறுவாழ்வு வசதிகளின்றி, தொழில் செய்ய வழிவகையின்றி வாழ்க் கையை ஒட்டிக்கொண்டு இருக்கின்றனர். இவர்களுக்கு சிறப்புத் தொழிற்பயிற்சி மையங்கள் அமைத்து வருமானம் ஈட்டக்கூடிய தொழிலை இவர்கள் மேற்கொள்ள உடனடியாக ஏற்படுடகள் செய்ய வேண்டும்.

16. தமிழர்கள் வசிக்கும் வட-கிழக்குப் பகுதிகளில் நடக்கும் விஷயங் களை தென்னிலங்கையில் செயல்படும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் சரியான தகவல்களோடு முறையாகக் கொண்டு செல்ல வேண்டும். சிங்கள பௌத்த பேரினவாத போக்கைக் தவிர்த்து, சிங்கள மக்களைத் திசை திருப்பும் வேலையை நிறுத்த வேண்டும். சிங்கள அரசு மேற்கொள்ளும் சிங்கள பேரினவாததிற்கு இரையாகாமல் சட்டத்தின் ஆட்சி சமத்துவம் - பாகுபாடின்மை போன்ற மனித உரிமைக் கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஈழத்தமிழர் பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வு காணப்படா தவரை இப்பிரச்சினை ஓயப்போவதில்லை. ஈழத்தமிழரின் தாயப்பூமி, தமிழ் மொழி, பண்பாட்டு அடையாளம் போன்றவற்றை முழுமையாக அங்கீகரித்து, அவர்களுக்கான கண்ணியமான வாழ்வு உட்பட அனைத்து அரசியல் உரிமைகளும் உள்ளடங்கிய அரசியல் தீர்வு காண்பதற்கு ஐ.நா.மன்றம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

18. ஈழத்தமிழர்களின் அரசியலைத் தீர்மானிக்கும் அதிகாரமும் உரிமையும் அவர்ககளுக்கே உள்ளது. எனவே ஐ.நா.மன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் இலங்கையின் வடகிழக்குப்பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவையை சர்வதேச சமூகம் உணரவேண்டும். அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் இந்தியாவும் இதனை வலியுறுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## ஈழத்தமிழ் மக்களிற்கான மனிதநேயப்புரட்சி

2009ம் ஆண்டு அழிவு மக்களிற்கு அணுக்குண்டின் வெடிப்பால் ஏற்பட்ட அழிவுக்கு சமனானதாகும். இவ்வழிவுக்கு நேரடியாகக் காரணமானவர்கள் 10பேர் வரையிலாகும். ஆனால் உலக தொழில்நுட்ப வளர்ச்சி ஒரு இனத்தினை முழுமையாக துடைத்தெறிய முற்பட்டது மாத்திரமல்ல அவ்வழிவுகளை மிகவும் சாதாரணமாக்கவும் பார்த்தது. வெள்ளம், பூகம்பம், எரிமலை, கடல்கோள் என்பனவற்றினால் அழிவு ஏற்படும் போது செய்தியாக நோக்கப்பட்டதோ அவ்வாறே எமது அழிவும் சாதாரணமாக்கப்பட்டது.

மனிதநேயத்திற்கான நீதிவிசாரணை எம்மினத்திற்கு மிகவும் அவசியம். இவ்வளவு அக்கிரமங்களையும் புரிந்து விட்டு இல்லை என திரும்பத்திரும்ப பொய்யினைக் கூறுவது சகிக்க முடியாதது. இதனை மனிதநேயத்தை அறிந்த மருத்துவர்கள், நீபதிகள், சட்டத்தரணிகள் அழுத்திக்கூறல் வேண்டும்.

யுத்த அழிவுகளிற்கு முதன்நிலையில் 10 நபர்களே காரணம். இதில் ஐக்கியநாடுகளின் செயலாளர் நாயகம், இந்தியப்பிரதமர், தமிழக முன்னைய முதல்வர் உள்ளடங்குவர். எனவே யுத்தத்தில் மக்கள் மீது அநாகரிக கொலைத்தாக்குதல் நடைபெற்றமை தொடர்பாகவும் அதன் பின்பு அவர்கள் நடத்தப்பட்டவிதம் குறித்து பொறுப்புக் கூறும் தன்மை இலங்கை அரசுக்கு உரியது. இதனை இலங்கை அரசோ, சிங்கள இராணுவமோ, முழுச்சிங்கள மக்களோ மறுக்குமிடத்து அவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து தூர விலகுவதாகவே கருதப்படல் வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டிய இராஜதந்திர நகர்வுகளிற்கு சில எடுகோள்கள் அவசியம்.

1. தமிழர்கள் இலங்கையின் வடகிழக்கில் பாரம்பரிய தாயகத்தினை உடையவர்கள் என்பதனை சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.
2. தமழர்களுக்கு சுய ஆட்சி உடைய அரசியல் தீர்வினை சிங்கள அரசு அளிக்காது.
3. தமிழ் மக்கள் அரசினால் படுகொலை செய்யப்பட்டமை பற்றிய குற்ற உணர்வு சிங்கள மக்களிடம் இல்லை.
4. தமிழ்மக்களை அரசியல் இராணுவ ரீதியில் திட்டமிட்டு அடக்க, இலங்கை ஆட்சியாளர்கள் முனைப்புக்கொண்டு உள்ளனர்.
5. வடக்குகிழக்குப்பகுதியின் சுயத்தினை அழிக்க இராணுவ, பொருளாதார, குடிசார் ஆக்கிரமிப்பினை தென்னிலங்கை அரசு மேற்கொண்டு உள்ளது. இதனை ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இந்திய மத்திய அரசாங்கத்திற்கோ இந்திய வெளிவிவகாரத் திட்டமிடலிலோ மையப்பட்டு ஈழ தமிழர்களின் மீதான அக்கறை மிகக்குறைவாக உள்ளது.

மேற்கூறிய இலங்கை அரசியல் நிலையிலும், உலகம் தமிழ்மக்கள் குழுவை இன்னமும் பயங்கரவாதிகளாக கருதுவதாலும், 2009ம் ஆண்டு அழிவுகளிற்கு முறையான நீதிவிசாரணை இன்மையினாலும் ஏற்பட்ட இடைவெளியே பொதுமக்கள் மீது இராணுவ அத்துமீறல் அதிகரிக்கக் காரணமாகின்றது. இதனை யாழ் மறை மாவட்ட ஆயர் அவர்கள் நாவாந்துறையில் பொதுமக்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக முரண்பாடுகள், இனப்பகைமை நிலைக்கு செல்லாது இருக்க எடுத்துரைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## இன நல்லிணக்கத்திணை ஏற்படுத்துவதற்கான தொடர்பாடல் இணைவுகள

ஒரு புறம் விடுமறையினைக் கொண்டாட மக்கள் கூட்டம். நகர உல்லாச ஹோட்டல்கள் நிரம்பி வழிகின்றது. நயினாதீவு, காங்கேசன் துறை என வீதீ எல்லாம் மிகவும் ஆடம்பரமான வாகனங்களால் நிரம்பி வழிகின்றது. ஆனால் அவர்களிற்கு புரியுமா? மறுபுறம். மறுபுறம் நகரின் அருகில் உள்ள மக்கள் குடியிருப்பின் மீது இராணுவ அராஜகம். ஆண்கள் அடித்து கைகால் முடக்கப்பட்டனர். பெண்களின் அங்கங்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டன. இவற்றிற்கு மேலாக இலங்கை நீதிபதியினால் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் பொய் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

ஏன் இந்த அநியாயம். தமிழனாகப் பிறந்த வினையா? பொய் வழக்கை உருவாக்கியமை ஏன் நீதிபதி கண்டிக்கவில்லை. இது படித்து பட்டம் பெற்ற சட்ட வாதியின் கேள்வி அல்ல. இளம் வயதில் கணவணை இழந்து, தனது கைக்குழந்தைகளுடன் வாழ்ந்து வரும் விதவைப்பெண்ணின் கதறல். தமிழ்பெண் என்றால் சிங்களவர் என்ன செய்தாலும் சரி என்பது உலக நியதியோ. மதத்தலைவர்களே, அரசியல் வாதிகளே, மனித உரிமையாளர்களே. இன்று நீங்கள் எமக்காக குரல் கொடுக்காவிட்டால் நாளையும் எமது சகோதரிகள் பாதிக்கப்படுவர். இவ்வாறு நாம் இன்று, நேற்று அல்ல, கடந்த 30 வருடங்களாக அவலக்குரல் எழுப்புகின்றோம்.

இனியும் வேண்டாம் இனரீதியான துன்புறுத்தல். இனியும் வேண்டாம் பாலியல் ரீதியான இனத்துன்புறுத்தல். நாகரீக உலகில் வாழும் மனிதர் அநாகரிகமாக செயற்படல் தவறு. ஆனால் அதனைக் கண்டிக்கத் தவறுவது மிகத்தவறு.

படித்தவர்களாகட்டும் பணப்படைத்தவராகட்டும் தவறுகளை உரிய இடத்தில் உணரத்தவறின், அவர்களது உடல் சடத்திற்குச் சமன். மரம் போல்வார் மக்கட்பண்பு இல்லாதவர், அரம் போல் கூர்மையரேனும் என்பதனை இன்றைய எமது கல்வியியலாளர் மீள நினைக்கவேண்டும்.


தமிழ் மக்களிற்கு தொடர்பாடல் இணைவுகள் திருத்தியாக இன்மையினையும் தமிழ் மக்களிற்கும் சிங்கள மக்களிற்கும் இடையிலான தொடர்பாடல் இணைதல் திருப்தியாக இன்மையினை யும் நாவாந்துறையில் நிகழ்ந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் நோக்கில் இவ்வாறு பல நிகழ்வுகள் நிகழ்வதே இனமுரண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இதனை அறிவியல் சாராத புறச்சக்திகளும் அகச்சக்திகளும் விரிவடைய முனையும். ஆனால் அறிவியல்சார் அணுகுமுறையினால் இவ்விடைவெளியினை குறைக்க முடியும்.

சிங்கள மக்களிற்கும் தமிழ் மக்களிற்கும் இடையே தொடர்பாடல் இணைவுகள் 9! அதாவது 362880 உண்டு. இவற்றை சரியாக பிரயோகிப்பதனால் முரண்பாடுகள் நீங்கி, வன்முறைகள் அகலும். மாறாக மனிதநேயத்தினைத் தொலைத்து விட்டு இன நல்லிணக்கத்தினை விலை பேச முடியாது. எமது அகச்சூழலில் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்த அரசியல் வாதிகளாயினும் சரி, அரச அதிகாரிகளாயினும் சரி மக்களிடம் நேரடியாக தொடர்பு கொள்ளல் வேண்டும். குறிப்பாக நாவாந்துறைச்சம்பவம் தொடர்பாக தமிழ் அரசியல் வாதிகள், தமிழ் நிர்வாக அதிகாரிகள், தமிழ் மதத்தலைவர்கள், சிறந்த தொடர்பாடல் இணைவுகளை சிங்கள மக்களிற்கு ஏற்படுத்தல் அவசியம்.




1. தமிழ் நிர்வாக அதிகாரிகள்
2. தமிழ் அரசியல்வாதிகள்
3. தமிழ் மதத்தலைவர்கள்
4. தமிழ் மக்கள்
5. சிங்கள இராணுவம்
6. சிங்கள நிர்வாக அதிகாரிகள்
7. சிங்கள அரசியல்வாதிகள்
8. சிங்கள மதத்தலைவர்கள்
9. சிங்கள மக்கள்
10. இந்தியா
11. சர்வதேசம்

1. தமிழ் மக்களிற்கிடையிலான தொடர்பாடல் இணைவுகள்
   - 4! = 24
2. சிங்கள மக்களிற்கு இடையிலான தொடர்பாடல் இணைவுகள்
   - 5! = 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தமிழ் மக்களிற்கும் சிங்கள மக்களிற்கும் இடையிலான தொடர்பாடல்இணைவுகள்

- 9! = 362880

4. தமிழ் மக்களிற்கு இந்தியா சார்பான தொடர்பாடல் இணைவுகள்

- 11! = 39916800

5. தமிழ் மக்களிற்கு சர்வதேசம் சார்பான தொடர்பாடல் இணைவுகள் -

- 11! = 39916800

2009ம் ஆண்டு அழிவு மக்களிற்கு அணுக்குண்டின் வெடிப்பால் ஏற்பட்ட அழிவுக்கு சமனானதாகும். இவ்வழிவுக்கு நேரடியாகக் காரணமானவர்கள் 10பேர் வரையிலாகும். ஆனால் உலக தொழில்நுட்ப வளர்ச்சி ஒரு இனத்தினை முழுமையாக துடைத்தெறிய முற்பட்டது மாத்திரமல்ல அவ்வழிவுகளை மிகவும் சாதாரணமாக்கவும் பாாத்தது. வெள்ளம், பூகம்பம், எரிமலை, கடல்கோள் என்பனவற்றினால் அழிவு ஏற்படும் போது செய்தியாக நோக்கப்பட்தோ அவ்வாறே எமது அழிவும் சாதாரணமாக்கப்பட்டது.

மனிதநேயத்திற்கான நீதிவிசாரணை எம்மினத்திற்கு மிகவும் அவசியம். இவ்வளவு அக்கிரமங்களையும் புரிந்து விட்டு இல்லை என திரும்பத்திரும்ப பொய்யினைக் கூறுவது சகிக்க முடியாதது. இதனை மனிதநேயத்தை அறிந்த மருத்துவர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் அழுத்திக்கூறல் வேண்டும்.

யுத்த அழிவுகளிற்கு முதன்நிலையில் 10 நபர்களே காரணம். இதில் ஐக்கியநாடுகளின் செயலாளர் நாயகம், இந்தியப்பிரதமர், தமிழக முன்னைய முதல்வர் உள்ளடங்குவர். எனவே யுத்தத்தில் மக்கள் மீது அநாகரிக கொலைத்தாக்குதல் நடைபெற்றமை தொடர்பாகவும் அதன் பின்பு அவர்கள் நடத்தப்பட்டவிதம் குறித்து பொறுப்புக் கூறும் தன்மை இலங்கை அரசுக்கு உரியது. இதனை இலங்கை அரசோ, சிங்கள இராணுவமோ, முழுச்சிங்கள மக்களோ மறுக்குமிடத்து அவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து தூர விலகுவதாகவே கருதப்படல் வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டிய இராஜதந்திர நகர்வுகளிற்கு சில எடுகோள்கள் அவசியம். தமிழர்கள் இலங்கையின் வடகிழக்கில் பாரம்பரிய தாயகத்தினை உடையவர்கள் என்பதனை சிங்களவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழர்களுக்கு சுய ஆட்சி உடைய அரசியல் தீர்வினை சிங்கள அரசு அளிக்காது. தமிழ் மக்கள் அரசினால் படுகொலை செய்யப்பட்டமை பற்றிய குற்ற உணர்வு சிங்கள மக்களிடம் இல்லை. தமிழ்மக்களை அரசியல் இராணுவ ரீதியில் திட்டமிட்டு அடக்க, இலங்கை ஆட்சியாளர்கள் முனைப்புக்கொண்டு உள்ளனர். வடக்குகிழக்குப்பகுதியின் சுயத்தினை அழிக்க இராணுவ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார, குடிசார் ஆக்கிரமிப்பினை தென்னிலங்கை அரசு மேற்கொண்டு உள்ளது. இதனை ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாது. இந்திய மத்திய அரசாங்கத்திற்கோ இந்திய வெளிவிவகாரத்திட்டமிடலிலோ கொழும்பை மையப்பட்டு ஈழ தமிழர்களின் மீதான அக்கறை மிகக்குறைவாக உள்ளது

மேற்கூறிய இலங்கை அரசியல் நிலையிலும், உலகம் தமிழ்மக்கள் குழுவை இன்னமும் பயங்கரவாதிகளாக கருதுவதாலும், 2009ம் ஆண்டு அழிவுகளிற்கு முறையான நீதிவிசாரணை இன்மையினாலும் ஏற்பட்ட இடைவெளியே பொதுமக்கள் மீது இராணுவ அத்துமீறல் அதிகரிக்கக் காரணமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# ஈழத்தமிழினத்தின் மீதான 2009ம் ஆண்டு நிகழ்ந்த "மனிதகுல நிந்தனைக்கு" உத்தேச தமிழ் நீதி ஆயத்தின் தீர்ப்பு

2009ம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த மனிதகுல நிந்தையினை உலகத்திரையில் இருந்து அகற்றுவதற்கு சிங்கள இனம் தேசிய அரசாங்கத்தினை அமைக்க முனைகின்றது. ஆனால் ஏற்கனவே இங்கு இருப்பது சிங்கள மக்களது ஏகோபித்த இனவாத அரசாங்கமே. இதில் சிறப்பு யாதெனில் எந்தவொரு சிங்கள தலைவர்களும் தமிழர்களிற்கு எதிரான அழிவினை நேரடியாகக் கண்டிக்கவில்லை. மனித உரிமைகள் தெரிந்த மருத்துவர்கள், சட்டத்தரணிகள், மதகுருமார்களும் இதற்கு விலக்கு அல்ல.

இந்நிலையில் தமிழ்மக்களது உத்தேச நீதி ஆயத்தின் தீர்ப்பு சிங்கள மக்களிற்கும் சர்வதேசத்திற்கும் பகிரப்படல் வேண்டும். அவையாவன:

**1.தீர்ப்பு ஒன்று**

2009ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் அழிவுக்கு காரணமானவர்களில்

| | | |
|---|---|---|
| முதலாவது குற்றவாளி | - | சிங்கள அரசு |
| இரண்டாவது குற்றவாளி | - | சிங்கள இராணுவம் |
| மூன்றாவது குற்றவாளி | - | இந்திய அரசு |

இவர்கள் புரிந்த குற்றங்கள் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் பட்டு உள்ளன.

**2. தீர்ப்பு இரண்டு**

தீர்ப்பு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டவர்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு நஸ்டவீடு வழங்கப்படல் வேண்டும்.

**3. தீர்ப்பு மூன்று**

சிங்கள அரசு தமிழ் மக்களை ஆளும் தகுதியினை இழந்துவிட்டது. ஆனால் மேலும் முயலல் மேலும் மேலும் இன அழிப்பினை மேற்கொள்வதற்காகவே அமையும். இது தவிர்க்கப்படல் வேண்டும.

**4. தீர்ப்பு நான்கு**

வடக்கு கிழக்குப்பகுதியில் வாழும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி அலகு உருவாக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. தீர்ப்பு ஐந்து**

வடக்குக்கிழக்கில் உள்ள மனித வளங்களையும், பொருளாதார வளங்களையும் யுத்தத்திற்கு பின்பான அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரித்தல் ஆகாது. அவ்வாறு செய்யமுனைதல் யுத்தபயங்கர வாதத்திற்கு பின்பான பயங்கரவாதமாகக் கருதப்படும்.

**6. தீர்ப்பு ஆறு**

வடக்குக்கிழக்கில் இனரீதியாக ஆக்கிரமிப்பினையும், இராணுவ ஆக்கிரமிப்பினையும் விலத்தல் வேண்டும்.

**7. தீர்ப்பு எட்டு**

தமிழ் நாட்டின் எச்சமாக வடக்கு கிழக்கில் காணப்படுதல் தொன்மைச்சின்னங்கள் பேணப்படல் வேண்டும். இதற்கு தமிழக வடக்குகிழக்கு தமிழ்க்கலாச்சார வலயம் உருவாக்கப்படல் வேண்டும்.

தமிழ் நீதி ஆயத்தின் தீர்ப்புக்கு அமைவாக இலங்கையின் வடக்குக்கிழக்கில் நீடித்த அமைதியும் வன்முறையும் அற்ற சூழல் உருவாக்கப்படல் வேண்டும். அப்பிரதேசத்தின் சுதேச மக்கள் தமது வாழ்வியலின் நெருக்குவாரங்கள் இன்றி அனுபவிப்பதற்கு சகல ஒத்துழைப்பினை சர்வதேச சமூகங்களும் மனித நேய அமைப்புக்களும் ஆவண செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org